619

# தமிழ் மணிக் கோவை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MADRAS

619
4-56

நான்காம் படிவம்

பொது

V. சுப்ரமணியம் கம்பெனியார்
திண்டுக்கல்

TB
031(9)
N56.
132521

# தமிழ் மணிக் கோவை

## நான்காம் படிவம்—பொதுப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1956
MADRAS

தொகுத்தவர்:
வித்துவான் அ. வடிவேலன்
தலைமைத் தமிழாசிரியர்,
கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.

[Paper used : 32 lbs. White Printing]

வி. சுப்ரமணியம் கம்பெனியார்
கல்வி நூல் பதிப்பாளர்கள்
திண்டுக்கல்

பதிப்புரிமை] 1956 [விலை ரூ. 1-0-0

முதற் பதிப்பு—அக்டோபர், 1956

TB
031(9)
N56

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் ★ சென்னை-600 008. ★
132521.

Kabeer Printing Works, Madras (3384)

# முன்னுரை

சென்னை கல்வி இலாகாவினர் 1954-ல் வெளியிட்ட பாடத் திட்டத்தை யொட்டி **தமிழ் மணிக் கோவை** என்னும் இந்நூல் வரிசை நான்கு, ஐந்தாம் படிவங்கட்கு பொது, சிறப்பு என இரு பகுதிகளாகத் தனித் தனியே தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வரிசையில் இப்புத்தகம் நான்காம் படிவம் பொதுப் பகுதிக்குரியதாகும்.

செய்யுட்கோவைப் பகுதியில் பழங்கால இடைக்கால தற்கால நூல்களிலிருந்து செய்யுட்கள் மாணவர் நிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. உரைக்கோவையில் இலக்கியம், கலை, கதை, சொற்பொழிவு, நாடகம், பிரயாணம், முதலிய பல்வகைக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

செய்யுட் கோவையில் சுருக்கமான நூல் வரலாறு, நூலாசிரியர் பற்றிய சிறு குறிப்புக்கள், அருஞ்சொற் பொருள், பயிற்சி வினாக்கள் ஆகிய இவைகளும், உரைக் கோவையில் அருஞ்சொற்பொருளும் பயிற்சி வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

என் வேண்டுகோட்கிணங்கி இந்நூலில் தத்தம் கட்டுரைகளையும் கவிதைகளையும் சேர்த்துக் கொள்ள இசைவு தந்த ஆசிரியர்கட்கும் உரிமையாளர்கட்கும் என் மனமுவந்த நன்றி உரித்தாகுக.

இத்தொகுப்பு நூலைக் கண்ணுறும் கல்வி நிலையத் தலைவர்களும் தமிழாசிரியர்களும் இதனைத் தத்தம் பள்ளியில் பாடமாக வைத்து உதவ வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

வித்துவான் அ. வடிவேலன்

# உள்ளுறை

## செய்யுட் கோவை


| எண் | பொருள் | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| **I. வாழ்த்து** | | | |
| 1. | திருவருட்பா | ... | 1 |
| 2. | தேவாரம் | ... | 2 |
| 3. | நாலாயிர திவ்விய பிரபந்தம் | ... | 2 |
| 4. | தமிழ்த்தாய் வாழ்த்து | ... | 3 |
| **II. அறவுரை** | | | |
| 1. | திருக்குறள் | ... | 4 |
| 2. | நாலடியார் | ... | 6 |
| 3. | பழமொழி | ... | 7 |
| 4. | திரிகடுகம் | ... | 8 |
| 5. | அறநெறிச் சாரம் | ... | 9 |
| **III. கதை** | | | |
| 1. | நளவெண்பா | ... | 12 |
| 2. | குசேலோபாக்கியானம் | ... | 17 |
| 3. | மனோன்மணீயம் | ... | 22 |
| 4. | பாஞ்சாலி சபதம் | ... | 26 |
| **IV. சிறு நூல்கள்** | | | |
| 1. | நால்வர் நான்மணி மாலை | ... | 30 |
| 2. | திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | ... | 31 |
| 3. | திருவெங்கைக் கலம்பகம் | ... | 33 |
| **V. பல்சுவை** | | | |
| 1. | மருதம் | ... | 35 |
| 2. | தென்றல் | ... | 35 |
| 3. | மலைவளம் | ... | 35 |
| 4. | சிலேடை | ... | 36 |
| 5. | சீட்டுக்கவி | ... | 36 |
| 6. | தனிப் பாடல் | ... | 37 |
| 7. | புத்தகசாலை | ... | 38 |

## உரைக் கோவை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நூற்றுண்டு விழாச் சொற்பொழிவு<br>—திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி. எல். | ... | 39 |
| 2. | குடிமக்கள் காப்பியம்<br>—தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்,<br>எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல். | ... | 49 |
| 3. | அமெரிக்கப் பிரயாணம்<br>—டாக்டர். ரா. க. சண்முகம் செட்டியார்,<br>பி. ஏ., பி. எல். | ... | 55 |
| 4. | கிராம சபை<br>—திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் | ... | 61 |
| 5. | ஜப்பானியரின் பழக்க வழக்கங்கள்<br>—சு. இராமசுவாமி நாயடு | ... | 66 |
| 6. | செஞ்சிலுவைச் சங்கம்<br>—பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர், எம்.ஏ. | ... | 73 |
| 7. | கௌசாம்பி மன்னன்<br>—திரு. எஸ். உருத்திரபதி, எம். ஏ. | ... | 79 |
| 8. | கோவூர் கிழார்<br>—வித்துவான் திரு. வீ. உலக வூழியனுர் | ... | 87 |
| 9. | ஸர். சி. வி. ராமன் ஒளி<br>—திரு. ரா. கே. விசுவநாதன், எம். ஏ. | ... | 95 |
| 10. | தமிழன் கண்ட மலேயா<br>—திரு. அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம். லிட். | ... | 100 |
| 11. | கூட்டுறவு இயக்கம்<br>—திரு. அ. முத்தையா, எம். ஏ. | ... | 106 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

# நான்காம் படிவம்—பொது

## செய்யுட் கோவை

## I. வாழ்த்து

### 1. திருவருட்பா

திரு + அருள் + பா = திருவருட்பா. இறைவன் திருவருளால் பாடப் பட்ட பாக்களாலாகிய நூல் எனப் பொருள்படும். இறைவன் திருவருளைப் பெறுதற்குக் கருவியாக விளங்கும் பாக்களாலான நூல் என்றும் பொருள் கூறலாம். இஃது இராமலிங்க அடிகளால் இயற்றப்பட்டது. ஊர், சிதம்பரத்தை அடுத்த மருதூர்; தந்தையார், இராமையா பிள்ளை; தாயார், சின்னம்மையார்; மரபு, கருணீகர் மரபு; சமயம், சமரச சன் மார்க்கம்; காலம் கி. பி. 1823—1873; இவர் பாக்கள் எளிமையும் இனி மையும் பொருந்தியவை; படிப்பவர் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை; சமரசம், அன்பு, அருள் முதலியன நிறைந்தவை. மனு முறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் முதலிய உரை நடை நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

அப்பா ! நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நா னன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே
எந்தை !நின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க வருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவ !நினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

—இராமலிங்க அடிகள்.

#### அருஞ்சொற்பொருள்

எப்பாரும் - எல்லா உலகங்களும். எப்பதமும் - எல்லா இடங்களும். சுத்த சிவமார்க்கம் - தூய்மையான சிவநெறி.

அருமை + உயிர் = ஆருயிர். மேல் + நிலை = மேனிலை. எந்தை : என் தந்தை என்பதன் மரூஉ.

## 2. தேவாரம்

தே+ஆரம்=தேவாரம். தெய்வத்திற்குச் சாத்தப்படும் பூமாலை போன்ற பாமாலை எனப் பொருள்படும். தே - தெய்வம்; ஆரம் - பூமாலை. தே+வாரம் எனப் பிரித்து தெய்வத்தைப் பற்றிய இசைப் பாட்டு என்றும் பொருள் கொள்ளலாம். வாரம் - இசைப்பாட்டு. திரு ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இம்மூவரும் பாடிய பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர்.

இச் செய்யுளைப் பாடியவர் திருநாவுக்கரசர். இவர் திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த திருவாமூர் என்னும் ஊரில் சைவ வேளாளர் மரபில் பிறந்தவர். இவர் தந்தையார் புகழனர்; தாயார், மாதினியார்; தமக்கையார் திலகவதியார். இவர் இளமையில் சமண மதத்தில் சேர்ந்து தருமசேனர் என வழங்கப்பட்டார். இறைவனுல் சூலைநோய் உண்டாக்கப் பெற்று அந்நோய் நீங்குதற் பொருட்டு மீண்டும் சைவசமயத்திற் சேர்ந்தார். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். காலம் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

—திருநாவுக்கரசர்.

### அருஞ்சொற்பொருள்

மாசு - குற்றம். மதியம் - சந்திரன். மூசு - மொய்க்கின்ற. வண்டு அறை - வண்டுகள் ஒலிக்கின்ற. பொய்கை - தடாகம். வண்டு+அறை= வண்டறை. என்+தந்தை=எந்தை.

## 3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

திருமாலின் அடியவர்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப் பெற்ற பாடல் தொகுதி நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகும். இச்செய்யுள் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப்பட்ட திருநெடுந்தாண்டகம் என்னும் நூலில் உள்ளது.

திருமங்கையாழ்வார் சோழ நாட்டிலுள்ள திருக்குறையலூரில் கள்ளர் மரபில் பிறந்தவர். இயற்பெயர் நீலன். சிலகாலம் சோழ மன்னனிடம் சேனைத் தலைவராக இருந்தவர். பின்னர் திருமங்கை நாட்டு மன்னனுக நியமிக்கப்பட்டவர். இவரது காலம் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு.

இந்திரர்க்கும் பிரமற்கும் முதல்வன் றன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூத மைந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் ஆகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி
அந்தரத்தில் தேவர்க்கு மறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவா தென்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே.

—திருமங்கையாழ்வார்.

அருஞ்சொற்பொருள்

முதல்வன் - காரணன். கால் - காற்று. விண் - ஆகாயம். திங்கள் - சந்திரன். ஞாயிறு - சூரியன்.

## 4. தமிழ்த்தாய் வாழ்த்து

இச்செய்யுள் அணியிலக்கண நூலாகிய தண்டியலங்காரம் என்னும் நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் இன்னாரென்று கூறுவதற்கு இல்லை.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

அருஞ்சொற்பொருள்

ஓங்கல் - (பொதிய)மலை. ஏங்கு ஒலி - மிகுந்து ஒலிக்கின்ற. ஞாலம் - உலகம். இருள் - இருட்டு; அறியாமை. வெங்கதிர் - சூரியன். வெம்மை + கதிர் = வெங்கதிர்.

வினாக்கள்

1. இராமலிங்க அடிகள் இறைவனிடம் வேண்டுவன யாவை?
2. ஈசன் இணையடி நீழல் எவ்வாறு இருந்ததென்று நாவுக்கரசர் நவில்கிறார்?
3. திருமங்கை மன்னன் நெஞ்சத்தை விளித்துக் கூறுவது யாது?
4. தமிழுக்கும் சூரியனுக்குமுள்ள ஒற்றுமை யாது?

# II அறவுரை

## 1. திருக்குறள்

திருக்குறள்: மேன்மையான குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல் என்பது பொருள். குறள் - இரண்டடி வெண்பா. திரு - அடைமொழி. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. அதிகாரத்திற்குப் பத்துக் குறள்களாக 133 அதிகாரங்களைக் கொண்டது. ஆங்கிலம், கிரீக் முதலிய பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சாதி, மத, சமய பேத மற்ற பொது நூல். வாழ்க்கைக்கு உரிய எக்காலத்துக்கும் ஏற்றதான பொது நூல். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் பிறந்த ஊர் மயிலாப்பூர் என்றும், மதுரை என்றும் கூறுவர். காலம் கி. பி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன். இவரைப்பற்றி வழங்கும் கதைகள் பல.

### 1. இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 2

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானாம்
இன்சொ லினதே யறம். 3

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொ லவர்க்கு. 4

பணிவுடைய னின்சொல னாதல் ஒருவற்(கு)
அணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின். 6

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். 7

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும். 8

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 9

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

## 2. செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 1
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2
பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 3
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். 4
உதவி வரைத்தன் றுதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 5
மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 6
எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 7
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 8
கொன்றன்ன இன்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 9
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்—உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

—திருவள்ளுவர்.

### அருஞ்சொற்பொருள்

**1. இனியவை கூறல்**

1. ஈரம் அளைஇ - அன்போடு கலந்து. படிறு - வஞ்சனை. செம்பொருள் - அறம்.

2. அகன் அமர்ந்து - மனம் விரும்பி. முகன் அமர்ந்து - முக மலர்ச்சி.

3. முகத்தான் அமர்ந்து - முகத்தால் விரும்பி.

4. துன்புறூஉம் - துன்பத்தை உண்டாக்குகின்ற. துவ்வாமை - வறுமை.

5. அணி - அழகு.

6. அல்லவை - பாவங்கள். நல்லவை - நன்மையான சொற்கள். நாடி - ஆராய்ந்து.

7. நயன் - நீதி. நன்றி - புண்ணியம். தலைப்பிரியா - சிறிதும் நீங்காத.

8. சிறுமையுள் நீங்கிய - பிறர்க்குத் துன்பம் செய்யாத.

9. ஈன்றல் - கொடுத்தல். எவன்கொல் - எப்பயன் கருதி.

10. உளஆக - ஒருவனிடம் இருக்க. கனி - பழம்.

**2. செய்ந்நன்றியறிதல்**

1. வையகம் - மண்ணுலகம். வானகம் - விண்ணுலகம்.

2. ஞாலம் - உலகம். மாண - மிகவும்.

3. தூக்கார் - ஆராயாமல். பயன் + தூக்கார் = பயன்றூக்கார்.

4. தினைத்துணை - தினையளவு. தினை, பனை என்பன இங்குச் சிறுமை பெருமைகளை விளக்கும் அளவுகளாக வந்துள்ளன.

5. வரைத்து அன்று - அளவாக உடையது அல்ல. சால்பு - தகுதி.

6. மாசு - குற்றம். கேண்மை - நட்பு. துப்பு ஆயார் - ஆதரவாக இருந்து உதவியவர்.

7. எழுமை - ஏழுவகையான. விழுமம் - துன்பம். துடைத்தவர் - அழித்தவர்.

8. நன்று அன்று - அறமாகாது. நன்று - அறமாகும்.

9. இன்னா - துன்பங்கள். உள்ள - நினைக்க.

10. கொன்றார்க்கும் - அழித்தவர்களுக்கும். உய்வு - பரிகாரம். மகற்கு - மகனுக்கு.

## 2. நாலடியார்

நான்கு அடிகளையுடைய வெண்பாவினால் ஆனமையால் இதற்கு நாலடியார் என்று பெயர் வந்தது. 'ஆர்' - சிறப்புப் பெயர் விகுதி. நாலடி என்பது நாலடிப் பாக்களுக்குப் பண்புத்தொகை அன்மொழி. வெண்பாக்களினாலாகிய நூலை உணர்த்தினமையால் கருவியாகு பெயராம். இதுவும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட நானூறு வெண்பாக்களையுடையது. இந்நூலை இயற்றியவர்கள் சமண முனிவர்கள். இப்பாடல்களை பால், இயல், அதிகாரங்களாகப் பகுத்துத் தொகுத்தவர் பதுமனார் என்பவர். சமண முனிவர்களது காலம் கடைச்சங்க காலம்.

### பெரியாரைப் பிழையாமை

கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலும் உரைப்பின்
படாஅவாம் பண்புடையார் கண். 1

### அறன் வலியுறுத்தல்

உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 2

### குடிப் பிறப்பு

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். 3

—சமணமுனிவர்.

### அருஞ்சொற்பொருள்

1. வைகல் - நாட்கள். ஒல்வ - தம்மால் கொடுக்கக்கூடிய பொருள்கள். பகலும் - நாட்களும். படாஅவாம் - தோன்றமாட்டாவாம்.

2. உறக்கும் துணையது - மிகச் சிறிய அளவுள்ளது. இறப்ப - மிகவும். தக்கார் - கல்வி அறிவு ஒழுக்கங்களால் உயர்ந்த சான்றோர்.

3. ஒருபுடை - ஒருபக்கம். விளக்குறூஉம் - விளங்கச் செய்கின்ற. செல்லாமை - வறுமை. ஒல்கார் - தளர்ச்சி அடையார்.

## 3. பழமொழி

ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்த நானூறு வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூலாதலின் இந்நூல் பழமொழி எனப் பெயர் பெற்றது. இதுவும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் முன்றுரையரையனுர் என்பவர். இவர் முன்றுரை என்னும் ஊரை ஆண்ட குறுநில மன்னர் ஆவர். இவர் சமண மதத்தைச் சேர்ந்தவர். இவர் காலம் கடைச் சங்க காலம்.

அடக்கமுடைமை

கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட
நிறைகுடம் நீர்தளும்ப லில். 1

தீவினையச்சம்

எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணார்
எனச் செய்யார் மாணா வினை. 2

சான்றாண்மை

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க் கணி. 3

—முன்றுரையரையனார்.

அருஞ்சொற்பொருள்

1. பொச்சாந்து - தம்மையே மறந்து. தெற்ற - தெளிவாக. அறைகல் - ஒலிக்கின்ற பாறைகள்.

2. தகவு - தகுதி. கரி - சாட்சி. தென்னவன் - பொற்கைப் பாண்டியன். மாணாவினை - பெருமையற்ற செயல்கள்.

3. தொல்லை - முற்காலம். நெறிமடல் - செறிந்த மடல்கள். சேர்ப்ப - கடற்கரைத் தலைவனே. அறிமடம் - அறிந்தும் அறியாதவர் போன்று இருத்தல்.

## 4. திரிகடுகம்

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் சேர்ந்த ஒரு மருந்தாகும். இம்மருந்து உடல் நோயைப் போக்கி உயிருக்கு இன்பம் பயக்கும். அதுபோல் இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாக்களிலும் கூறப்பட்ட மும்மூன்று பொருள்களும் உள நோயாகிய அறியாமையைப் போக்கி உயிருக்கு இன்பந் தருதலினால் 'திரிகடுகம்' எனப் பெயர் பெற்றது. இதுவும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலாசிரியர் பெயர் நல்லாதனார். சமயம் வைணவம். காலம் கடைச்சங்க காலம்.

### அழியாப் புகழ் உடையோர்

தன்னச்சிச் சென்றுரை எள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார். 1

### புகழுடம்பு எய்துவோர்

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானு மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றுனும்—உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானு மிம்மூவர்
சாவா உடம்பெய்தி னர். 2

### தூயோர் தொழில்

உண்பொழுது நீராடி உண்டலும், என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்ருண்மை குன்ருமை யிம்மூன்றுந்
தூஉய மென்பார் தொழில். 3

—நல்லாதனர்.

#### அருஞ்சொற்பொருள்

1. தன் நச்சி - தன்னை விரும்பி. பொச்சாப்பு - மறதி. அழுக்காறு - பொருமை. இகந்தானும் - விலக்கியவனும்.

2. நட்டான் - நிலைநிறுத்தியவன். கூவல் - கிணறு. தொட்டானும் - தோண்டியவனும். சாவா உடம்பு - அழியாத உடம்பு. (புகழுடம்பு)

3. பால்பற்றி - (வழக்கில்) ஒரு சார்பாக. தோல்வற்றி - வறுமையால் உடல் இளைத்து. சாயினும் - அழிவதாயினும். குன்ருமை - குறையாமை.

## 5. அறநெறிச்சாரம்

அறம் + நெறி + சாரம் = அறநெறிச்சாரம். தருமவழிகளுள் சாரமானவற்றைத் திரட்டிக் கூறும் நூல் என்பது பொருள். இதனை இயற்றியவர் திருமுனைப்பாடியார். இவரது ஊர் சோழ நாட்டிலுள்ள தீபங்குடி. இவர் சமணர். இவர் காலம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் என்பர்.

### அறம் உரைப்பவன் இலக்கணம்

அறங்கேட் டருள்புரிந் தைம்புலங்கண் மாட்டுப்
பிறங்கா திருசார் பொருளும்—துறந்தடங்கி
மன்னுயிர்க் குய்ந்துபோம் வாயி லுரைப்பானேல்
பன்னுதற்குப் பாற்பட்ட வன். 1

### நூல்கேட்டற்கு உரியரல்லாதவர்

பிள்ளைபேய் பித்தன் பிணியாளன் பின்னோக்கி
வெள்ளை களிவிடமன் வேட்கையான் தெற்றிப்
புரைக்கப் பொருளுணர் வாரென் றிவர்நூல்
உரைத்தற் குரிமையிலா தார். 2

### அறங்கூறத் தகாதவர்

தன்சொல்லே,மேற்படுப்பான் தண்டி தடிபிணக்கன்
புன்சொல்லே போதா உயிர்த்திருப்பான்—இன்சொல்லை
ஏன்றிருந்துங் கேளாத வேழை யெனவிவர்கட்(கு)
ஆன்றவர்கள் கூறா ரறம். 3

—திருமுனைப்பாடியார்.

### அருஞ்சொற்பொருள்

1. ஐம்புலன்கள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. பிறங்காது - நடுநிலை தவறாது. வாயில் - வழி. பன்னுதற்கு - சொல்வதற்கு. பாற்பட்டவன் - உரிமையுடையவனாவான்.

2. பித்தன் - பைத்தியம் பிடித்தவன். களி - கட்குடியன். விடமன் - தூர்த்தன். புரைக்க - குற்றமானவற்றை. தெள்ளி - ஆராய்ந்து.

3. தண்டி - மானமுள்ளவன். தடிபிணக்கன் - மிக்கமாறுபாடு உடையவன். ஏன்று இருந்தும் - கேட்டற்குச் சமயம் வாய்ந்திருந்தும். ஏழை - அறிவில்லாதவன்.

### வினாக்கள்

திருக்குறள் :

1. இன்சொல்லின் இலக்கணம் தருக.
2. மனமகிழ்ந்து ஈதலினும் சிறந்தது எது?
3. எத்தகைய சொல்லினிடத்தே அறம் அமைந்துள்ளது?
4. ஒருவனுக்கு உண்மை அணிகலன்கள் யாவை? மற்றவை ஏன் அணிகலன்கள் ஆகமாட்டா?
5. எத்தகைய சொல் இருமையும் இன்பம் தரும்?

6. "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" எது? விளக்குக.

7. இன்சொற் கூறலின் பயன்களைத் தொகுத்து எழுதுக.

8. வையகமும் வானகமும் ஈடாகக் கொடுத்தாலும் எதற்கு ஒப்பாகாது?

9. உலகத்தை விடப் பெரியது எது? கடலை விடப் பெரியது எது?

10. நன்றியறிதலைப் பற்றிப் பயனறிந்த பெரியோர் கருதுவது யாது?

11. எழுபிறப்பும் உள்ளுவர் யார்? எதனை? எழுபிறப்பு எவை?

12. ஒருவன் செய்த தீமையை மறத்தற்கு வள்ளுவர் காட்டும் வழி யாது?

13. யாருக்கு உய்வுண்டு? யாருக்கு உய்வில்லை?

14. எந் நன்றி கொன்றார்க்கும் என்பதன் பொருளை விளக்குக.

நாலடியார்:

1. பண்புடையார்கண் படாத நாட்கள் எவை?

2. தக்கார் கைப்பட்ட அறப் பயன் எத்தகையது? இதற்குக் காட்டப்பட்ட உவமையை விளக்குக.

3. திங்களை உவமையாகக் கொண்டு விளக்கப்படும் உயர் நீதி யாது?

பழமொழி:

1. 'நிறை குடம் நீர் தளும்பல் இல்' இப்பழமொழியால் விளக்கப் படும் நீதி யாது?

2. தென்னவன் யார்? கை குறைத்த வரலாறு யாது?

3. சான்றோர்க்கு அணியாவது யாது? இதற்குச் சான்றாகத் திகழ்ந்தவர் யாவர்?

திரிகடுகம்:

1. அழியாப் புகழுடைய மூவர் யாவர்?

2. சாவா உடம்பு எய்தினர் யாவர்?

3. தூஉயம் என்பார் தொழில்கள் யாவை?

அறநெறிச்சாரம்:

1. அறம் உரைப்பவன் இலக்கணங்கள் யாவை?

2. நூல் உரைத்தற்கு உரிமையில்லாதவர் யார் யார்?

3. ஆன்றோர்கள் யார் யாருக்கு அறங்கூற மாட்டார்கள்?

# II கதை

## 1. நளவெண்பா

### சுயம்வர காண்டம்

நளன் + வெண்பா = நளவெண்பா. நளனது வரலாற்றைக் கூறும் வெண்பாவினாலாகிய நூல் என்பது இதன் பொருள். நளன் நிடத நாட்டை ஆண்ட ஓர் மன்னன். இந்நூல் சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று பிரிவுகளையுடையது.

இந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் வெண்பாப் பாடுவதில் வல்லவராதலின் 'வெண்பாவில் புகழேந்தி' என்று சிறப்பித் துரைக்கப்பட்டார். இவர் தொண்டைநாட்டைச் சேர்ந்த பொன் விளைந்த களத்தூரில் வேளாளர் மரபில் பிறந்தவர். இவர் வைணவ மதத்தைச் சேர்ந்தவர். இவர் முரணை நகரை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்ற சிற்றரசனால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

நிடத நாட்டுச் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்நாட்டம் போலும் தகைமைத்தே சாகரம்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு. 1

நளனது செங்கோன்மை

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு. 2

நளன்முன் அன்னப்பறவை தோன்றுதல்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலம்சிவப்ப—மாணிறத்தான்
முன்அப்புள் தோன்று முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 3

### தோழிகள் அன்னத்தைப் பிடித்துக் கொடுத்தல்

நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 4

### நளன் அன்னத்தை அஞ்சாதே எனல்

'அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்' என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 5

### நளன் சொற்கேட்டு அன்னம் பயமின்றி இருத்தல்

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனிஅன்னம்—வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொல் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான். 6

### தமயந்தி வீமன் மகள் என்று கூறுதல்

'எழு அடுதோள் மன்னா! இலங்கிழையேர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. 7

### அன்னம் தமயந்தியின் பெருமை கூறல்

'நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.' 8

### நளன் வருந்துதல்

'இவ்வளவில் செல்லுங்கொல் இவ்வளவில் காணுங்கொல்
இவ்வளவில் காதல் இயம்புங்கொல்—இவ்வளவில்
மீளுங்கொல்' என்றுரையா விம்மினான் மும்மதநின்று
ஆளுங்கொல் யானை அரசு. 9

### அன்னம் தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்
தன்ஆடல் விட்டுத் தனிஇடம்சேர்ந்து ஆங்கதனை
'என் நாடல் சொல்' என்றாள் ஈங்கு. 10

### தமயந்திக்குக் கணவன் நளன் என்று கூறுதல்

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு. 11

### அன்னம் நளனது பெருமை கூறுதல்

அறங்கிடந்த நெஞ்சும் அருள்ஒழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு. 12

### அன்னத்தைத் தமயந்தி வேண்டுதல்

'வாவி உறையும் மடஅனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்,—காவினிடைத்
தேர்வேந்தற்கு என்நிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 13

### நளன் சுயம்வர மண்டபத்தில் இருத்தல்

முன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம்—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். 14

### தமயந்தி சுயம்வர மண்டபத்திற்கு வருதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்-மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 15

### தோழி தமயந்திக்கு முறையே அரசர்களை அறிவித்தல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்று இயல்அணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 16

### தமயந்தி நளன் வடிவுகொண்ட நான்கு தேவர்களையும் கண்டு திகைத்தல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்டு ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்று
ஊசலா டுற்றாள் உளம். 17

### தமயந்தி உண்மை நளனை அறியக் கடவுளை வேண்டுதல்

'மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில், கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்' என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 18

### தமயந்தி நளனை அறிதல்

கண்இமைத்தலால் அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. 19

### தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டுதல்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனம்சுளிப்பக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 20

—புகழேந்திப் புலவர்.

### அருஞ்சொற்பொருள்

1. காமர் - அழகு. காவிமுகை - நீலோற்பல அரும்புகள். தளை - கட்டு. நாட்டம் - கண். சாகரம் - கடல்.

2. சீதம் - குளிர்ச்சி. தாது - மகரந்தப் பொடி. தார் - மாலை. ஆடல் - வலிமை. பசுமை + கிளி = பைங்கிளி.

3. பொய்கை - தடாகம். மாண்நிறத்தான் முன் - அகன்ற மார்பை யுடைய நளன் முன். அப்புள் - தண்ணீரில். முளரி - தாமரைமலர். நீள் + நிறம் = நீணிறம். மாண் + நிறத்தான் = மாணிறத்தான்.

4. மயில்குழாம் - மயில் கூட்டம். வல்லியர்கள் - பூங்கொடி போன்ற தோழிகள். கோவின் முன் - அரசனுகிய நளன் முன். பசுமை + கூந்தல் = பைங்கூந்தல்.

5. வஞ்சி அனையார் - பூங்கொடி போன்ற பெண்கள். விஞ்சியது - சிறந்தது. தார்மன் - மலர் மாலையை அணிந்த அரசன்.

6. திரு - இலக்குமி. அடுமாற்றம் இல்லா - கொலைப்பகை இல்லாத.

7. எழு - தூண். இழை - ஆபரணம். நுதி - நுனி. ஓர்கொம்பு - ஒப்பற்ற பூங்கொடி போல்வாள்.

8. நால்குணம் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள். ஆர்க்கும் - ஒலிக்கின்ற. வதனம் - முகம். நான்கு + குணம் = நாற்குணம். ஐந்து + புலன் = ஐம்புலன்.

9. இஅளவில் - இத்தனை நேரம். மும்மதம் - மூன்று மதங்கள். உரையா - சொல்லி. மூன்று + மதம் = மும்மதம்.

10. வடிவில் திகழ்கின்ற - அழகில் சிறந்த. நன்னுதலும் - அழகான நெற்றியையுடைய தமயந்தியும். ஆடல் - விளையாட்டு. என் நாடல் சொல் - என்ன விரும்பி வந்தது சொல். நன்மை + நுதல் = நன்னுதல். தன் + ஆடல் = தன்னுடல். என் + நாடல் = என்னுடல்.

11. தண் அளியான் - குளிர்ந்த இரக்கமுடையவன். வாங்கும் - தம் வசப்படுத்தும். தடம் தோள் - பெரிய தோள். நானிலம் - நான்காகிய (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்) நிலங்களைக் கொண்ட பூமி.

12. மறம் - வீரம். அம் கண் மாஞாலம் - அழகான இடமகன்ற பெரிய பூமி.

13. வாவி - தடாகம். ஆவி - உயிர். காவினிடை - பூஞ்சோலையி லுள்ள. பார்வேந்தன் பாவை - பூமியை ஆளும் வீமராசனுடைய மகளா கிய தமயந்தி.

14. கன்று குதட்டிய கார் நீலம் - கன்றுக்குட்டிகள் வாயிற் குதப்பி உமிழ்ந்த கருங்குவளை மலர்கள். நோற்றிருந்த - தவஞ் செய்திருந்த.

15. பொன்னின் மடப்பாவை - திருமகள் போன்ற அழகினையுடைய தமயந்தி. செங்கமலப் பொய்கை - செந்தாமரைத் தடாகம்.

16. இன்ன பரிசு - இப்படிப்பட்ட தன்மையுடையன. இயல் அணங்கு - நற்குணம் பொருந்திய ஒரு தோழி. தனி கொடி - ஒப்பில் லாத கொடிபோன்ற தமயந்தி.

17. காவலரை - அரசரை. சேடி - தோழி. ஈர் இருவர் தேவர் - நான்கு தேவர்கள் (இந்திரன், வருணன், எமன், அக்கினி). பூவரைந்த - மலர்களை அணிந்த.

18. மின்னும் தார் - விளங்குகின்ற மாலை. கடிமாலை - மணமுள்ள மாலை.

19. காசினி - பூமி. தோய்தலால் - படிதலால். வண்ணம் - அழகிய. நன்னுதலே அன்னுள் - இலக்குமியை ஒத்த தமயந்தி. நன்மை+ நுதல் = நன்னுதல்.

20. விண் அரசர் - தேவர். வெள்கி - வெட்கமடைந்து. மனம் சுளிக்க - மனம் வருந்தவும். கண் அகல் - இடம் அகன்ற. வன்மாலே - வலிய மயக்கம். வயம் - வெற்றி. பொன் - திருமகளைப் போன்ற தமயந்தி.

## 2. குசேலோபாக்கியானம்

குசேல+உப + ஆக்கியானம் = குசேலோபாக்கியானம். குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது பொருள். உபாக்கியானம்-கிளைக்கதை. இது கண்ணனது சரித்திரத்தைக் கூறும் பாகவதத்தி லுள்ள ஒரு கிளைக்கதை. குசேலன் - கிழிந்த ஆடையையுடையவன்.

இந்நூலாசிரியர் வல்லூர்த் தேவராசப் பிள்ளை என்பவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள வல்லூரில் கருணீகர் குலத்தில் வீராசாமிப் பிள்ளைக்கு மகனுகப் பிறந்தவர். திருசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணுக்கர். இவரது காலம் 19-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி.

### வாயில்காவலர் குசேலரது வருகையைக் கண்ணனுக்கு அறிவித்தல்

மாமறைத் தலைவ போற்றி மதிக்குல விளக்கே போற்றி
காமரிந் திரன்முன் ஞேர் காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ணு போற்றி தரியல ரேறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த துவாரகைக் கிறைவ போற்றி.

ஆதிநா ளையில் நின்னே டருங்கலை கற்று ளானும்
போதவுஞ் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவனுங் கந்தை
மேதகக் கொண்ட நீரான் மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்தின் மிக்கான் குசேலனென் றியம்பி
[ னுன்பேர். 2

### கண்ணன் குசேலரை அழைத்து வரச் சொல்லுதல்

என்றலு முவகை விம்ம எழில்முக மலர்ச்சி காட்டப்
பொன்றலில் கருணை பொங்கிப் பொழிதர விரைவிற் சென்(று)
இன்றுநம் வாயில் வந்த இருந்தவத் தலைவன் தன்னை
மன்றவிங் கழைப்பீ ரென்று வாய்மலர்ந் தருளி னுனே. 3

### வாயில்காவலர் குசேலரிடம் கண்ணன் கூறியதைக் கூறுதல்

நின்னுடை வரவு ரைத்தேம் நிருபனுக் கப்போழ் துற்ற
பன்னருங் களிப்பை யாமோ பகர்ந்திட வல்லம் ஐய
முன்னமங் கிருந்த இன்பம் முழுவது மறந்து நின்றான்
நன்னர்நெஞ் சுடைய நீரார் நட்பினிற் சிறந்த
[துண்டோ ? 4

தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே யெனவிரை பொருளிற்
[சொற்றான். 5

### குசேலர் கண்ணனைக் காண்டல்

வருந்துமோர் மிடியன் சேம
வைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துண விழந்தோன் விண்ணோர்
அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற்
பகமெதிர் கண்டாற் போலும்
சரிந்தபற் றினன்மெய் யாசான்
தனையெதிர் கண்டாற் போலும். 6

எண்ணனைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும் வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற்
[கண்டான். 7

### கண்ணன் குசேலரை வரவேற்று அவரைப் பாராட்டுதல்

மன்னுடைய மறையனைத்தும் வகுத்துணந்த மாதவனே !
உன்னுடைய தரிசனத்தால் உடம்புபூ ரித்தனன்யான்
மின்னுடைய விளங்கொளிவேல் வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே றியார்பெற்றார் ? யார்
[பெறுவார் ? 8

### கண்ணன் குசேலரது மனைவி மக்களின் நலங்கேட்டல்

நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே ?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே ?
தன்னுடைய வுயிராநின் தனைப்பேணுந் தன்மையளே ?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே ? 9

பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே ?
எங்குமரும் புகழுடையாய் ! எத்தனைமைந் தர்பிறந்தார் ?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்துஞ்
சிங்கலறப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்? 10

இவர்தந்தை யென்றேற்ற னென்றறிஞ ருரைக்கும்வகை
இவர்கின்ற மனத்தினராய் இருங்கலைகற் றுணர்வாரே ?
உவர்கொண்ட கடலாடை புடையுடுத்த உலகமெலாம்
உவர்கொண்ட குணமெவர்க்குண் டெனமொழிய
[உயர்வாரே ? 11

### கண்ணன் குசேலரிடம் ‘ நீ எனக்குக் கொண்டு வந்த சிற்றுண்டி யாது ? என்று வினவுதல்

பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை அதனை யின்னே
தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற தென்றான் தெரிவரும் வஞ்சக் கள்வன். 12

இனியசிற் றுணவே தேனும் இன்றிநீ வருவாய் கொல்லோ
இனியநின் னுள்ள மின்றே எண்ணியா னறிதல் வேண்டும்
இனியநின் மனைவி வாளா ஏகிவா வென்ப ளோமற்(று)
இனியவெற் கன்றி யார்க்குக் கொண்டுவந் திருக்கின் றயே. 13

### குசேலர், தாம் கொண்டுவந்த அவலை நாணத்தால் கொடாதிருப்பக் கண்டு, கண்ணன் தானே அதனை எடுத்து உண்ணுதல்

மலிதரும் அன்பின் வந்த வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்றுள் நன்று வாய்த்தது நமக்கி தென்னு
ஒலிதரு கழற்கா லையன் ஒருபிடி யவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான் மாதோ. 14

செறிதரு சுவைத்தீ தென்றுந் தேவர்க்கு மரிய தாகும்
அறிதரு விருப்பி னில்லின் அமைத்ததே பழைது மன்று
குறிதரு விலைப்பாற் சென்று கோடலிவ் வளத்த தோவென்(று)
உறியளை வாரி யுண்டோன் ஒருபிடி யவல்தின் றானே. 15

முன்னுமிவ் வவலொன் றேனும் முனைமுறிந் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் றாகும் பட்டவங் கையும ணக்குங்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம குளமும்வேண் டுவதின் றென்னா
உன்னுபல் லுலகு முண்டோன் ஒருபிடி யவல்தின் றானே. 16

மற்றொரு பிடியெ டுத்து வாயிடப் போகுங் காலை
முற்றிழைத் திருவு ருக்கு மணியெனு முத்த மூரல்
பொற்றொடிப் பூங்கொம் பன்னாள் பொருக்கென வோடி வந்து
கற்றவர் புகழ்தன் கேள்வன் கரத்தினைப் பிடித்துக்
கொண்டாள். 17

### குசேலர், அன்றிரவு கண்ணன் அரண்மனையில் தங்கியிருந்து, மறுநாள் காலையில் தம் ஊருக்குப் புறப்படுதல்

கதிருதிக்கும் காலையெழீஇக் கடன்பலவும் முற்றியடர்
முதிர்புலன்செற் றருஞானம் முயன்றடைந்தோன் ஆதலினால்
மதிகுலத்து மன்னவன்பால் வாய்திறந்தொன் றுங்கேளான்
நிதியமிகப் பெற்றவனாய் நினைந்தூர்க்கு வழிக் கொண்டான். 18

—வல்லூர் தேவராசப் பிள்ளை.

### அருஞ்சொற்பொருள்

1. மதிக்குலம் - சந்திரகுலம். காமர் - அழகு. தரியலர் - பகைவர். ஏறு - ஆண்சிங்கம் போன்றவன். தோம் - குற்றம்.
2. போதவும் - மிகவும். கந்தை - கிழிந்த ஆடை. நீரான் - தன்மையையுடையவன். கோது அறு - குற்றம் இல்லாத.
3. உவகை விம்ம - மகிழ்ச்சி மிக. எழில் - அழகு. பொன்றல் இல் - அழிதல் இல்லாத.
4. நிருபன் - அரசன் (கண்ணன்). பன்னரும் - சொல்லுதற்கரிய.
5. குழவி - குழந்தை. நேயம் - அன்பு. பூப்ப - உண்டாக. இன்னே - இப்பொழுதே.
6. மிடியன் - வறுமையுடையவன். சேமவைப்பு - புதையல். பரிந்து - வருந்தி. சரிந்த பற்றினன் - பற்றில்லாதவன்.

7. எண் அ(ன்)னைக்கு - யாவராலும் நினைக்கப்படுகிற தாயாகிய திருமகளுக்கு. கள் நனை - தேனினால் நனைதலையுடைய. தாமம் - மாலை.

8. மன்னுடைய - நிலைபேறுடைய. மாதவன் - பெரிய தவத்தினை யுடையவன்.

9. மனைக்கிழத்தி - மனைவி. சொல் - புகழ். உருற்றுவளே - செய் வாளா?

" தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் "

என்னும் குறள் இங்கே நினைக்கத் தக்கது.

10. பைங்குதலை - இனிமையான மழலைச் சொல். சிங்கல் அற - குறைவில்லாதபடி.

11. என் நோற்றான் - என்ன தவஞ் செய்தானோ? இவர்கின்ற - விரும்புகின்ற. உவர் - முன்னது உப்பு; பின்னது சுட்டுப் பெயர்.

" மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல் "

என்னும் குறள் கருத்து இங்கே நினைக்கத் தக்கது.

12. பந்தனை - பிறப்புக்கேதுவாகிய கட்டு. பக்கணம் - சிற்றுண்டி. (பக்ஷணம் என்ற வடசொல்லின் திரிபு).

13. வாளா - சும்மா. எற்கு அன்றி - எனக்கு அல்லாமல்.

14. மலிதரும் - மிகுந்த. வண்பொதி - அழகிய முடிப்பு. காதல் பொலிதர - ஆசை அதிகரிக்க.

15. செறிதரு - நிறைந்த. அளை - தயிர்.

16. முட்டை - பக்குவப்படாத அவல். குளம் - வெல்லம். அம்ம - வியப்பிடைச் சொல். அகம் + கை = அங்கை.

17. முற்று இழை - (தொழில்) முற்றின ஆபரணங்களை யணிந்த. முத்தமூரல் - முத்துப்போன்ற பற்கள். பொன்தொடி - பொன் வளையல். கேள்வன் - கணவன்.

18. எழீஇ - எழுந்து. முற்றி - முடித்து. நிதியம் - செல்வம்.

## 3. மனோன்மணீயம்

பாண்டி நாட்டு மன்னராகிய ஜீவக வழுதியின் மகள் மனோன் மணியின் வரலாற்றைக் கூறும் நூல். இந்நூலை இயற்றியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இவர் ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையார் பெயர் பெருமாள் பிள்ளை; தாய் மாடத்தி அம்மாள். இவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமையுடையவர். இவர் ஆங்கிலத்தில் M..A. பட்டம் பெற்றுத் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக இருந் தவர். இவரது காலம் 1855—1897.

### அங்கம் III—களம் 2.

இடம்: ஊர்ப்புறம் ஒரு சார். காலம்: எற்பாடு.
நடன்: நடராசன்.

(நேரிசை ஆசிரியப்பா)
(தனிமொழி)

நடராசன்

காலையிற் கடிநகர் கடந்து நமது
வேலை முடிக்குதும், வேண்டின் விரைவா
இன்றிரா முடுக்கினும் முடியும் துன்றராக்
கவ்விய முழுமதிக் காட்சியிற் செவ்விதாம்
பின்னிய கூந்தற் பேதையி னிளமுகம்
என்னுளத் திருந்திங் கியற்றுவ திப்பணி;
அதனா லன்றோ விதுபோல் விரைவில்
இவ்வினை யிவ்வயின் இனிதின் முடிந்தது,
எவ்வினை யோர்க்கும் இம்மையிற் றம்மை
இயக்குதற் கின்பம் பயக்குமோ ரிலக்கு
வேண்டும் உயிர்க்கது தூண்டுகோல் போலாம்
ஈண்டெப் பொருள்தா னிலக்கற் றிருப்பது?
இதோஒ! இக்கரை முளைத்தவிச் சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி.
அதன்சிறு பூக்குலை யடியொன் றுயர்த்தி,
இதமுறத் தேன்றுளி தாங்கி, ஈக்களை
நலமுற அழைத்து, நல்லூ ணருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து

ஆசிலாச் சிறுகா யாக்கி, இதோ !என்
தூசிடைச் சிக்குந் தோட்டியுங் கொடுத்தே,
" இவ்வயின் யாமெலாஞ் செவ்விதில் துன்னில்
தழைப்பதற் கிடமிலே, சிருர்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின் புள்ஆளருது அயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின் !'' எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையுஞ்
சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல்சா லன்பும்
போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப,
ஆர்த்தெழு மன்பினு லனைத்தையுங் கலந்துதம்
என்பெலாங் கரைக்குநல் லின்பந் திளைப்பர்.
தமக்கூண் நல்கும் வயற்குப யோகம்,
எனப்பலர் கருது மிச்சிறு வாய்க்கால்
செய்தொழி லெத்தனை விசித்திரம்! ஐயோ !
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்ருே நடப்பதிச் சிறுகால் !
பாரிதோ ! பரற்களை நெறுநெறென் றுரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென் றில்லை ; யாவையு மீர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகுமிவை யெனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்று இட்டுமற்(று) ஐயா !
அண்ட யோனியி னுனையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியும், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்
ஊறிடுஞ் சிறிய ஊற்ருய்ப் பரந்தும்
ஆருய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,

மதகிடைச் சாடியும், வாய்க்கா லோடியும்
பற்பல பாடியான் பட்டங் கீட்டியது
அற்பமே யாயினும் ஆதர வாய்க்கொள் ;
“ இன்னமு மீதோ ஏகுவன் ” எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவ ணடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர் ?
நிரந்தரம் ஐயோ ! நொந்தனை ! நில் ! நில் !

(நீரைக் கையாற் றடுத்து)

இரைந்ததென் ? அழுவையோ ! ஆயி னேகுதி.
நீரே ! நீரே ! என்னையுன் நிலைமை ?
யாரே யுனைப்போ லனுதின முழைப்போர் ?
நீக்கமி லன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போ லுளவேற் பினைப்பே றென்னை ?

(நாங்கூழ்ப் புழுவை நோக்கி)

ஓகோ ! நாங்கூழ்ப் புழுவே ! உன்பாடு
ஓவாப் பாடே ! உணர்வேன் ! உணர்வேன் !
உழைப்போ ருழைப்பி லுழுவோர் தொழின்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ.
எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை.
விடுத்தனை யிதற்கா எடுத்தவுன் யாக்கை
உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந் தும்புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை யுன்குழி வாயுமோ ருருண்டையால்
இப்புற் பயிர்நீ யிங்ஙன முழாயேல்
எப்படி யுண்டாம் ? எண்ணு துனக்கும்
குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை ?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள ?

(நாங்கூழ்ப் புழு குழிக்குள் மறைதலை நோக்கி)

விழுப்புண் வேண்டலை. அறிவோம் ; ஏனிது ?
துதிக்கலம் உன்தொழில் நடத்துதி. ஆ ! ஆ !
எங்கு மிங்ஙனே யிணையிலா இன்பம்

பங்கமி லன்புந் தங்குதல் திருந்தக்
காணார் பேணும் வாணா ளென்னே !
அலகிலாத் தோற்றமோ டிலகிய வுலகிற்
சிதறிய குணக்கதிர் செறிந்து திரள
வைத்தசிற் றாடியின் மையமே யொத்த
உள்ளமும் உடலும் பெற்றும், கள்வர்
நினைக்கலை, தீயனை நினைப்பதுந் தீதே !
சினக்கனல் எழும்பும் ; நமக்கேன் இச்சினம் ?
கிருபணன், தீனன், விடுவிடு. அஃதென் ?
என்கொல்அத் தோற்றம் ? புகையோ ? மங்குலுக்கு
இந்நிற மில்லை. செந்நிறப் படாமென,
பொதியில்நன் முகடாம் பொற்புறு கருவிற்
கதிமிகு தினமெனும் பொன்வினைக் கம்மியன்
உருக்கி விடுதற் குயர்த்திய ஆடகப்
பெருக்கென விளங்கிய அருக்கன தொளியைப்
பொருக்கெனப் புதைத்தவிப் புழுதி யென்னே ?
இதோ ! துவண்டடங் கிடையிடைத் தோற்றுவ
பதாகையின் றொகுதி யன்றோ பார்க்கின் ?
இடியுருண் டதுபோ லெழுமொலி தேரொலி !
அடுபடை கொண்டிங் கடைந்தவன் யாவன் ?
வருதிசை நோக்கில் வஞ்சிய னேயாம்
பொருதற்கு அன்றவன் வருவது. சரிசரி !
வதுவைக் கமைந்து வந்தான் போலும்.
இதுவென் ? ஓகோ மணப்பாட் டன்றிது.

—பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

## அருஞ்சொற்பொருள்

1. கடிநகர் - காவல் பொருந்திய நகர் (திருநெல்வேலி). 2. முடுக்கினும் - விரைவுப்படுத்தினும். 3. துன்று அரா - நெருங்கிய (இராகுவாகிய) பாம்பு. 6. இப்பணி - இச்சுருங்கைத்தொழில். 10. ஓர் இலக்கு - ஒரு குறிக்கோள். 18. பூ பராகம் - அழகிய மகரந்தப்பொடி. 20. தூசு - ஆடை. 21. துன்னில் - கூட்டமாகக் கூடியிருந்தால். 23. புள் - பறவை. அயம் - ஆடு. 30. கண் பனிப்ப - கண்கள் அன்புமிகுதியால் நீர் துளிக்க. 37. சிறுகால் - சிறிய வாய்க்கால். 42. முந்நீர் மடுவுள் - கடலாகிய மடுவில். 46. அண்டம் யோனியின் ஆணையின் - இவ்வுலகம் தோன்றக் காரணமாகிய கடவுளின் கட்டளைப்படி. 50. கதித்து எழு - விரைந்து

எழுகின்ற. 57. எழிலியாய் - மேகமாகி. 67. ஓவாப்பாடே - ஒழியாத வேலேயே. 71. யாக்கை - உடல். 73. வேதித்து - வேறுபடுத்தி. 81. விழுப் புகழ் - சிறந்த புகழ். 86. அலகு இலா - எல்லேயில்லாத. 87. குணம் கதிர் - தன்மையையுடைய சூரிய கிரணங்கள். 92. கிருபணன்-உலோபி. தீனன் - ஏழை. 93. மங்குலுக்கு - மேகத்திற்கு. 94. செந்நிறம் படாம் என - சிவந்த நிறமுடைய ஆடையை விரித்தாற் போன்று. 97. ஆடகம் - பொன். 98. அருக்கன் - சூரியன். 101. பதாகையின் தொகுதி - கொடி களின் கூட்டம். 104. வஞ்சியனேயாம் - சேரனேயாம். 106. வதுவைக்கு - (மனோன்மணியைத்) திருமணம் செய்து கொள்வதற்கு.

## 4. பாஞ்சாலி சபதம்

### துரியோதனன் பதில்

இது தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரால் இயற்றப் பெற்றது. இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தவர். இவர் அந்தணர் மரபைச் சேர்ந்தவர். தந்தையார் - சின்னசாமி ஐயர். தாயார் - இலக்குமி அம்மையார். இவர் தம் பாடல்களால் மக்கள் மனத்தில் நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று, உரிமை யுணர்ச்சி முதலிய நற் பண்புகளே ஊன்றச் செய்தவர். இவர் மக்களுக்குப் புத்துணர்ச்சி எழுப்பிய புரட்சிக் கவிஞர் ஆவார். இவரது காலம் கி. பி. 1882–1921.

தலேவ னுங்குப் பிறர்கையிற் பொம்மை
சார்ந்து நிற்பவர்க் குய்ந்நெறி யுண்டோ ?
உலேவ லால்திரி தராட்டிர வர்க்கத்
துள்ள வர்க்கு நலமென்ப தில்லே ;
நிலேயி லாதன செல்வமு மாண்பும்
நித்தந் தேடி வருந்தலி லாமே
"விலேயி லாநெறி கொண்டனம்" என்றே
மெய்கு ழைந்து துயில்பவர் மூடர். 1

பழைய வானிதி போதுமென் றெண்ணிப்
பாங்கு காத்திடு மன்னவர் வாழ்வை
விழையு மன்னிய ரோர்கணத் துற்றே
வென்ற ழிக்கும் விதியறி யாயோ ?
குழைத லென்பது மன்னவர்க் கில்லே :
கூடக் கூடப்பின் கூட்டுதல் வேண்டும் ;
பிழையொன் றேயர சர்க்குண்டு கண்டாய் ;
பிறரைத் தாழ்த்து வதிற்சலிப் பெய்தல். 2

வெல்வ தெங்குலத் தொழிலாம்—எந்த
விதத்தினி லிசையினுந் தவறிலை காண் !
நல்வழி தீய வழி—என
நாமதிற் சோதனை செயத்தகுமோ ?
செல்வழி யாவினுமே—பகை
தீர்த்திடல் சாலும் என்றனர் பெரியோர் ;
கொல்வது தான்படை யோ ?—பகை
குமைப்பன யாவுநற் படையலவோ ? 3

சுற்றத் தாரிவ ரென்றனை ஐயா !
தோற்றத் தாலும் பிறவியி னாலும்
பற்றலா ரென்றும் நண்பர்க ளென்றும்
பார்ப்ப தில்லை யுலகினில் யாரும் ;
மற்றெத் தாலும் பகையுற லில்லை ;
வடிவி லில்லை ; அளவினி லில்லை ;
உற்ற துன்பத்தி னாற்பகை யுண்டாம் ;
ஓர்தொ ழில்பயில் வார்தமக் குள்ளே. 4

பூமித் தெய்வம் விழுங்கிடுங் கண்டாய் !
புரவலர்பகை காய்கிலர் தம்மை
நாமிப் பூதலத் தேகுறை வெய்த
நாளும் பாண்டவ ரேறுகின் றாரால்,
நேமி மன்னர் பகைசிறி தென்றே
நினைவ யர்ந்திருப் பாரெனில், நோய்போல்
சாமி, அந்தப் பகைமிக லூற்றே
சடுதி மாய்த்திடு மென்பதுங் காணாய். 5

போர்செய் வோமெனில் நீதடுக் கின்றாய் ;
புவியி னோரும் பழிபல சொல்வார் ’
தார்செய் தோளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வது மாங்கெளி தன்றாம் ;
யார்செய் புண்ணியத் தோநமக் குற்றான்
எங்க ளாருயிர் போன்றவிம் மாமன் ;
நேர்செய் சூதினில் வென்று தருவான் ;
நீதித் தருமனும் சூதிலன் புள்ளான். 6

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

## அருஞ்சொற்பொருள்

1. உலைவு அலால் - அழிவு அல்லாமல். நித்தம் - நாள்தோறும். மெய் குழைந்து - சோம்பல் அடைந்து.

2. வான் நிதி - உயர்ந்த செல்வம். பாங்கு காத்திடும் - மேன்மையுடன் காத்து வருகின்ற. குழைதல் என்பது - (பிறர் மீது போர் மேற் செல்ல) அஞ்சுதல் என்பது.

3. குமைப்பன யாவும் - அழிப்பன எல்லாம்.

4. பற்றலார் - பகைவர்கள்.

5. இப்பூதலத்தே - இவ்வுலகில். நேமி மன்னர் - ஆணைச்சக்கரமுடைய அரசர்கள்.

6. தார் - மாலை. சமரில் - சண்டையில்.

## வினாக்கள்

**1. நளவெண்பா :**

1. நிடதநாட்டுச் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
2. நளன் உலகு காத்தமுறை எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
3. 'மயில்குழாம் ஓடி வளைக்கின்ற தொப்பவே' இவ்வுவமையை விளக்கி எழுதுக.
4. அன்னம் அச்சம் நீங்கி நளனிடத்தில் இருக்கக் காரணம் யாது?
5. அன்னம் தமயந்தியின் பெருமையை நளனுக்குக் கூறியதெவ்வாறு ?
6. அன்னம் நளனின் பெருமையைத் தமயந்தியிடம் எவ்வாறு கூறிற்று ?
7. தமயந்தி சுயம்வர மண்டபத்துக்கு வருதலைக் கவி எவ்வாறு வருணித்துள்ளார் ?
8. "ஊசலாடுற்றுள் உளம்" யார் ? ஏன் ?
9. தமயந்தி உண்மை நளனை அறிந்தது எவ்வாறு ?
10. தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டியது எவ்வாறு கூறப் பட்டுள்ளது ?

**2. குசேலோபாக்கியானம் :**

1. வாயிற்காவலர் கண்ணனைப் போற்றிய தெவ்வாறு ?
2. வாயிற்காவலர் குசேலன் கூறியதாகக் கண்ணனிடம் கூறியன யாவை ?
3. வாயிற்காவலர் குசேலரிடம் வந்து கூறியன யாவை ?
4. குசேலர் கண்ணனைக் கண்டதற்கு ஆசிரியர் கூறும் உவமைகள் யாவை ?
5. "எண்ணனைக்கு" என்ற தலைப்புள்ள செய்யுளுக்குப் பொழிப்புரை எழுதுக.

6. கண்ணன், குசேலருடைய மனைவி மக்களின் நலங்கேட்டலை விளக்கி எழுதுக.

7. "என்னுடைய பெறலரும்பே றியார்பெற்றார்" இடஞ்சுட்டி விளக்குக.

8. கண்ணன் அவல் தின்ற முறை யாது ?

3. மனோன்மணீயம் :

1. நடராசன் மேற்கொண்ட செயல் யாது? அது இனிதே முடிந்தமைக்கு அவன் காட்டும் காரணம் யாது ?

2. 'உயிர்க்கது தூண்டுகோல் போலாம்'—எது? எவ்வாறு ?

3. நடராசன் சிறுபுல்லின் குறிக்கோளாக எண்ணியவற்றை எழுதுக.

4. 'தம் என்பெலாங் கரைக்கும் நல்லின்பந் திளைப்பர்' யார் ? எங்ஙனம் ?

5. நடராசன் வாய்க்காலின் செய்தொழில் விசித்திரத்தை எங்ஙனம் சிறப்பித்துள்ளான் ?

6. ஓடுகின்ற நீரைக் கையால் தடுத்து நடராசன் கூறியது யாது ?

7. நடராசன் நாங்கூழ்ப் புழுவை நோக்கிக் கூறியன யாவை ?

8. நாங்கூழ்ப் புழுவின் புகழ்விரும்பாத் தன்மையைப் புலப் படுத்துக.

9. மாலைக் கதிரவனின் தோற்றத்தை நடராசன் எங்ஙனம் வருணித்தான் ?

10. கீழ்க்கண்ட உவமைகளை விளக்குக :—
    1. "துன்றராக் கவ்விய முழுமதிக் காட்சியின்"
    2. "சிற்றூடியின் மையமே ஒத்த"
    3. "பொன்வினைக் கம்மியன்...........அருக்கனது ஒளி"

4. பாஞ்சாலி சபதம் :

1. அரச தருமம்பற்றித் துரியோதனன் தன் தந்தையிடம் கூறியது யாது ?

2. பகைவரை வெல்லுதல் பற்றித் துரியோதனன் கூறியது யாது ?

3. பகையுண்டாதல் பற்றித் துரியோதனன் கூறியது யாது ?

4. பாண்டவரை முளையிலேயே களையவேண்டும் என்பதை எங்ஙனம் துரியோதனன் கூறினான் ?

5. துரியோதனன் பாண்டவருடன் போரை விரும்பாது சூதை விரும்புதற்குத் தந்தையிடம் காட்டும் காரணங்கள் யாவை ?

# IV. சிறு நூல்கள்

## 1. நால்வர் நான்மணிமாலை

இது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்ற நால்வரைப்பற்றியும் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாக்களால் பாடப் பட்ட ஒரு நூல். இதனை இயற்றியவர் துறைமங்கலம்—சிவப்பிரகாச சுவாமிகள்; வீரசைவ மரபினர்; இவரது காலம் 17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

நேரிசை வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

கட்டளைக் கலித்துறை

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்த! பொது
ஆட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. 2

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

படியிலா நின்பாட்டில் ஆரூர!
நனிவிருப்பன் பரமனென்ப(து)
அடியனே னறிந்தனன்;வான் தொழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பா
னினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே. 3

நேரிசை ஆசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ

யாதோ சிறந்த தென்குவீ ராயின்,
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்;
திருவாசக மிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. 4

—சிவப்பிரகாச சுவாமிகள்.

அருஞ்சொற் பொருள்

1. மலி - நிறைந்த. இயற்பாவால் - தேவாரப் பாக்களால். வெறி - வாசனே.

2. வீட்டிற்கு - முத்தியடைதற்கு. தொடை சாத்து - தேவாரப் பாக்களே (சிவபெருமானுக்கு) அணிந்த. சுடர்நோய் - சூலேநோய். எப்படியினும் - எத்தன்மையினும்.

3. படி இலா - ஒப்பில்லாத. நனிவிருப்பன் - மிக விருப்பமுடையவன். தொடி - வளேயல். மிடி இலா - வறுமையில்லாத.

4. இழை - ஆபரணம். ஆரணமொழி - வேதவாக்கு. விதிர் விதிர்ப்பு எய்தி - நடு நடுக்கமடைந்து.

## 2. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

இந்நூல் பாண்டிய நாட்டுக் 'கருவை' என்னும் பதியில் எழுந்தருளியுள்ள சிவபிரான்மீது அந்தாதியாகப் பாடப்பட்ட நூறுபாக்களேக் கொண்டுள்ளது. பதிற்றுப்பத்து: ஒவ்வொன்றிலும் பத்துப்பத்தாக அமைந்த நூறுபாடல். அந்தாதி ஒரு பாட்டின் முடிவு அடுத்த பாட்டிற்கு முதலாக வரத்தொடுப்பது.

இந்நூலே இயற்றியவர் அதிவீரராம பாண்டியர்; கொற்கையிலிருந்து அரசாண்ட சிற்றரசர்; சிறந்த புலவர். இவர் காலம் 16-ஆம் நூற்றுண்டு என்பர்.

ஒளிமதி முடித்த வேணி
யொருவனே கருவை யானே
தெளிவுறு நெஞ்சந் தன்னேத்
தெருட்டிநின் னிலேயைக் காட்டி

அளியினு லென்னை யாண்ட
அருட்குன்றே யுன்னை யின்னும்
எளியனேன் பிறவி வேட்டோ
வேத்திடா திருக்கின் றேனே. 1

இருக்கினு நிற்கும் போதும்
இரவுகண் டுயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
பொருந்தியூண் டுய்க்கும் போதும்
முருக்கிதழ் தனிவா யாரோ
டில்லற மாற்றும் போதும்
திருக்களா வுடைய நம்பா
சிந்தையுன் பால தாமே. 2

சிந்தனை யுனக்குத் தந்தேன் ;
திருவரு ளெனக்குத் தந்தாய்
வந்தனை யுனக்குத் தந்தேன் ;
மலரடி யெனக்குத் தந்தாய்
பைந்துண ருனக்குத் தந்தேன் ;
பரகதி யெனக்குத் தந்தாய்
கந்தனை பயந்த நாதா
கருவையி லிருக்குந் தேவே. 3

தேவனே நின்னை யல்லாற்
பிறிதொரு தேவை யெண்ணேன்
பாவனை நின்னி னல்லாற்
பிறிதொரு பற்று மில்லேன்
யாவையுங் காட்டக் கண்டேன்
என்னுளே நின்னைக் கண்டேன்
காவலா கருவை யானே
இனிமற்றோர் காட்சி யுண்டோ ? 4

உண்டென மறைக ளோதும்
ஒருதனி முதலே நாளும்
அண்டரு முனிவர் தாமுங்
காண்கில ரடியே னுன்னைத்

தெண்டிரை வளாக முற்றுந்
தேடினேன் தேடித் தேடிக்
கண்டனன் களாவின் நீழல்
கருவைமா நகரத் தானே. 5

—அதிவீரராமபாண்டியர்.

### அருஞ்சொற்பொருள்

1. வேணி - சடை. தெருட்டி - தெளியச் செய்து. அளி - அருள். வேட்டோ - விரும்பியோ.

2. முருக்கிதழ் - முருக்கம்பூ போன்ற சிவந்த உதடுகள்.

3. துணர் - பூங்கொத்து. பரகதி - மேலான நிலை. பயந்த - பெற்ற. பசுமை + துணர் = பைந்துணர்.

4. தேவை - கடவுளை. பாவனை - பக்தி.

5. அண்டரும் - தேவர்களும். தெண்திரை வளாகம் - தெள்ளிய அலைகளைக் கொண்ட கடலால் சூழப்பட்ட உலகம்.

## 3. திருவெங்கைக் கலம்பகம்

திருவெங்கை எனப்படும் திருவெங்கனூரில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப்பெற்ற சிறு நூலாகும். கலம்பகம் என்பது தொண்ணூற்ரூறு வகை சிறுநூல்களில் ஒன்று. வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலிய பலவகைப் பாக்களால் அந்தாதித் தொடையாகத் தொடுக்கப்பெற்ற நூல். தூது, குறம், மறம், பாண் முதலிய பதினெட்டு உறுப்புக்களைக் கொண்ட நூல். நூறு செய்யுட்களையுடையது. இந்நூலை இயற்றியவர் துறைமங்கலம்—சிவப்பிரகாச சுவாமிகள்.

### மறம்

மறவர் குடியில் பிறந்த ஒரு பெண்ணைத் தனக்கு மணம் பேசி வருமாறு ஓர் அரசன் தூதுவனை அனுப்ப, மறவர்கள் மணம் மறுத்து, அனுப்பிய அரசனை இகழ்ந்து பேசுவதாகச் செய்யுள் செய்வது மறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

விற்ற தார்கலை பாதி யோடுவ
னத்தி லேயழ விட்டதார் ?
வெஞ்சி றைப்புக விட்டதார்
துகிலுரிய விட்டுவி ழித்ததார் ?

உற்ற தாரமும் வேண்டு மென்றினி
மன்னர் பெண்கொள லொண்ணுமோ ?
வுமியடாமண மென்ற வாய்கிழித்
தோலை காற்றிலு ருட்டடா,
வெற்றி யாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவ ரெமைய டுத்தினி
தெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர் தமக்கு யாமொரு
பெண்வ ளர்ப்பினி லீந்தனம்
பெற்ற பிள்ளைகொ டுப்பரோவிதென்
பேய்பி டித்திடு தூதரே !

—சிவப்பிரகாச சுவாமிகள்.

அருஞ்சொற்பொருள்

துகில் - ஆடை. தாரம் - மனைவி. விமலரானவர் - குற்றமற்றவ ராகிய சிவபெருமான். மிச்சில் மிசைந்தபின் - எச்சிலை உட்கொண்ட பிறகு.

## வினாக்கள்

1. நால்வர் நான்மணிமாலை :

1. நான்மணிமாலை என்ருல் என்ன? நால்வராவர் யாவர் ?
2. சிவப்பிரகாசர் எதனை வீடாகக் கூறுகிருர் ?
3. ஆரூரன் பாட்டில் பரமன் விருப்பமுடையவன் என்பது எவற்ருல் விளங்கும் ?
4. திருவாசகம் வேதத்தினும் சிறந்தது எவ்வாறு ?

2. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி :

1. ‘ஒளிமதி முடித்தவேணி ஒருவன்’—யார் ? இதில் கூறப்பட்ட கதை யாது ?
2. கந்தனைப் பயந்த நாதனுக்கு ஆசிரியர் கொடுத்த பொருள் களும், அவனிடமிருந்து பெற்ற பொருள்களும் யாவை ?
3. மறைகளோதும் முதல்வன் யார்? அவனைக் காணுதோர் யாவர் ? ஆசிரியர் அவனை எங்குத் தேடினுர் ? எங்குக் கண்டார் ?

3. திருவெங்கைக் கலம்பகம் :

1. ‘மறம்’ என்னும் உறுப்பின் இலக்கணம் யாது ?
2. தாரம் வேண்டும் என மன்னர் இனிப் பெண்கொளல் ஒவ்வாது என்பதற்கு மறவன் கூறும் காரணங்கள் யாவை ?
3. மறவர் தம் பெண்ணை வேண்டிவந்த தூதனுக்குக் கூறியவற் றைத் தொகுத்துக் கூறுக.

# V. பல்சுவை

## 1. மருதம்

இதனைப் பாடியவர் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இச்செய்யுள் கம்ப ராமாயணத்திலுள்ளது.

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

—கம்பர்.

அருஞ்சொற்பொருள்

தண்டலை - சோலை. கொண்டல் - மேகம். முழவு - மத்தளம். தெண்திரை - தெளிந்த அலை. எழினி - திரைச்சீலை. தேம்பிழி - இனிமை மிக்க.

## 2. தென்றல்

இச்செய்யுள் திருவிளையாடற் புராணத்திலுள்ளது. இதனைப் பாடியவர் பரஞ்சோதி முனிவர்.

பொங்கரில் நுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கொடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போ லியங்கு மன்றே.

—பரஞ்சோதி முனிவர்.

அருஞ்சொற்பொருள்

பொங்கர் - சோலை. வாவி - குளம். பங்கயம் - தாமரை. கடி - வாசனை. கொங்கு - தேன்.

## 3. மலைவளம்

இச்செய்யுள் திருக்குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் உள்ளது. இந்நூலை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

தேனருவி திசையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்ருலத் திரிகூட மலேயெங்கள் மலேயே.

—திரிகூடராசப்பக் கவிராயர்.

அருஞ்சொற்பொருள்

வான்கவி - தேவலோகத்துக் குரங்கு. கானவர் - காட்டில் வாழும் வேடர். கவனசித்தர் - ஆகாயத்தில் உலவும் வன்மைபெற்ருேர். காய சித்தி - உடல் அழியாதபடி செய்யும் ஒரு வித்தை. தேனருவி - குற்ருல மலேயிலுள்ள ஓர் அருவியின் பெயர். பரி - குதிரை. வேணி - சடை.

## 4. சிலேடை

இச்செய்யுள் கலேசைச்சிலேடை வெண்பா என்னும் நூலில் உள்ளது. இதனே இயற்றியவர் தொட்டிக்கலே சுப்பிரமணிய முனிவர்.

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலேசையே—மேவும்
அரிவையம் பாகத்தான் அரணெருமூன் றெய்தோன்
அரிவையம் பாகத்தான் அகம்.

—சுப்பிரமணிய முனிவர்.

அருஞ்சொற்பொருள்

காவலரை - அரசர்களே. கா + அலரை - சோலேயிலுள்ள மலர்களே. அரிவை அம்பு ஆக - திருமாலேக் கூர்மையான அம்பாகக்கொண்டு. அரிவைஅம் பாகத்தான் - உமாதேவியாகிய பெண்ணே அழகிய இடப் பாகத்திலுடையவன். அகம் - இடம்.

## 5. சீட்டுக்கவி

இதனே இயற்றியவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார். இது குதிரை வேண்டுமென்று குலசேகரற்கு விடுத்த சீட்டுக்கவி.

ஏடாயி ரம்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கும்ஓலே

சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலே சேலம் புரந்துதா கந்தீர்ந்த
செழியனெதிர் கொண்டு காண்க :
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்(கு)அனற் பண்ணுத கோடைஐம்
படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளேயொன் றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

அருஞ்சொற்பொருள்

விரகன் - சேடன். சேட + அதிபன் - பாம்புகட்குத் தலைவன்; ஆதி சேடன். புரந்து - காத்து. கந்தருவம் - பண். கந்துகம் - பந்து. கோணம் - கூன்வாள். கொக்கு - மாமரம். கோடை - கோடைக்காலம். குந்தம் - ஈட்டி. பாடலம் - பாதிரிப்பூ. மா - மாமரம். சடிலம் - சடை. கிள்ளை - கிளி. கந்தருவம் முதலிய இச்சொற்கள் அடைமொழியினுல் குதிரை என்னும் ஒரு பொருளேயே குறித்தன. பாடாத கந்தருவம் முதலியன வெளிப்படை.

## 6. தனிப் பாடல்

இச்செய்யுளைப் பாடியவர் இராமச்சந்திர கவிராயர். தமது பாக்கு வெட்டி காணுமற் போனபோது பாடியது.

விறகு தறிக்கக் கறிநறுக்க வெண்சோற்
றுப்புக்(கு) அடகு வைக்கப்
பிறகு பிளவு கிடைத்த தென்றல்
நாலாருகப் பிளந்து கொள்ளப்
பறகு பறகென் றேசொறியப் பதமா
யிருந்த பாக்கு வெட்டி
இறகு முளைத்துப் போவ துண்டோ
எடுத்தீ ராயிற் கொடுப்பீரே.

—இராமச்சந்திர கவிராயர்.

### அருஞ்சொற்பொருள்

பிளகு - பாக்குப் பிளவு. பதமாய் இருந்த - உபயோகமாக இருந்த.

## 7. புத்தகசாலை

இதனைப் பாடியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆவர்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்.
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்,
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல்
[வேண்டும்.

—பாரதிதாசன்.

### அருஞ்சொற்பொருள்

சுவடிச்சாலை - நூல்நிலையம். பல்கலை - பல கலைகள். துறை துறையாய் - வகை வகையாய்.

### வினாக்கள்

1. மருதம் அரசு வீற்றிருந்த தன்மையை விளக்குக.
2. தென்றலுக்குக் கூறிய உவமை யாது?
3. திருக்குற்றால மலையின் வளம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
4. 'காவலரைச் சூழும் கலைசை', 'அரிவையம் பாகத்தான்'—இவற்றிலுள்ள சிலேடையை விளக்குக.
5. குதிரையைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள் யாவை?
6. முதலியார் சீட்டுக் கவியின் மூலம் என்ன வேண்டுகோள் விடுத்தார்?
7. பாக்கு வெட்டி எது எதற்குப் பயன்பட்டதாகக் கவிராயர் கூறுகிறார்?
8. தமிழர்க்கு வேண்டுவன யாவை?

# உரைக் கோவை

## 1. நூற்ருண்டு விழாச் சொற்பொழிவு

[திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.]

தமிழ்நாட்டின் தலைநகராக விளங்கும் சென்னை மாநகரத்தில் இன்று சிறந்த நூற்ருண்டு விழா ஒன்று நடைபெறுகின்றது. எத்தனையோ நூற்ருண்டு விழாக் களைக் கண்டிருக்கின்றது சென்னை மாநகரம். ஆயினும், இன்று நடக்கின்ற விழாவிலே ஒரு தனிச் சிறப்பு உண்டு. சென்ற ஒரு நூற்ருண்டாகக் காட்டுவாசிகளாகிய நண்பர் பலர் சென்னை நகரத்தின் நடுவேயுள்ள பூங்காவனத்தில் காட்சி தருகின்ருர்கள்; கூட்டில் அடைப்பட்டிருந்தாலும் குறைவின்றி வாழ்கின்ருர்கள். பிள்ளை குட்டிகள் பெற்றுப் பெருகுகின்ருர்கள். இவ்வாண்டு பல்லாண்டு களாக நம்மிடையே வாழ்ந்துவரும் காட்டு நண்பர்களைக் கனிவுடன் வாழ்த்திப் பல்லாண்டு கூறுதலே இந்நூற் ருண்டு விழாவின் நோக்கமாகும்.

பெரியோர்களே! இக்காட்சிச் சாலையில் உள்ள விலங்குகளும் பறவைகளும் நூருண்டுகளாகத் தம்மை ஆதரித்து வளர்த்த நகரசபையார்க்கும்; அவர்கள் மூல மாக நகரப் பொதுமக்களுக்கும் இன்று நன்றி செலுத்து கின்றன. ஏற்றமும் தோற்றமும் வாய்ந்த யானை கையெடுத்து வணங்குகின்றது. விலங்கின வேந்தனுகிய சிங்கம் வெம்மை ஒழித்துச் செம்மையாக நோக்கு கின்றது. புள்ளிமான் துள்ளி மகிழ்கின்றது. அழகிய மயில் தோகையை விரித்து ஆடுகின்றது. புள்ளினம் பாடுகின்றது. இந்த சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது “காக்கை குருவி எங்கள் சாதி” என்று பாரதியார் பாடிய பாட்டின் உண்மை நன்கு விளங்குகின்றது. அக் கவிஞர் பாடிய காக்கையைச் சிறிது பார்ப்போம்.

நாள்தோறும் நம் வீட்டைச் சுற்றிக் ‘கா கா’ என்று காதடைக்கக் கத்தும் காக்கையின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டியதொன்றுண்டு என்று கூறுகின்ருர் திருவள்ளுவர். உண்ணத்தகுந்த பொருள்

ஒன்று கிடைத்தால் அதைத் தன்னந்தனியாகத் தின்னும் சிறுமை காக்கையிடம் இல்லை. உடனே குரல் கொடுத்து, தன் இனத்தை அவ்விடத்திற்கு அழைக்கும். வந்த காகங்களோடு கலந்து உண்ணும். இந்த உண்மையைத் திருக்குறளிலே எடுத்துரைக்கின்ருர் திருவள்ளுவர்.

“ காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள ”

என்பது அவர் வாக்கு. இவ்வுலகில் உண்ணும் பொருள் எல்லார்க்கும் பொதுவுடைமை என்ற உண்மையைத் தன் வாழ்க்கையால் உணர்த்துகின்றது காக்கை. இவ்வாறு காக்கையார் காட்டும் நல்லவழியைக் கடைப்பிடித்து வாழும் மக்களுக்கே ஆக்கம் உண்டாகும் என்று கூறு கின்ருர் திருவள்ளுவர்.

காக்கை கருநிறம் உடையது என்று கற்றவரும் மற்றவரும் கருதியிருந்தார்கள். ஆனல், இப்பொழுது வெள்ளைக் காக்கையும் உண்டு என்று தெரிகின்றது. திருவண்ணுமலையின் அருகேயுள்ள சிற்றூரிலிருந்து வெள்ளைக் காக்கை ஒன்று நமது கண்காட்சிச் சாலைக்கு விருந்தாக வந்திருக்கின்றது. அதற்கு நல்வரவு கூறு கின்ருேம். வெள்ளைக் காக்கையை இல்பொருளுக்கு எடுத்துக்காட்டாக இதுகாறும் சொல்லி வந்த இலக்கண ஆசிரியர்கள் தம் கருத்தை இனி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கண்காட்சிச் சாலையிலுள்ள காக்கை கற்பிக்கின்றது.

காட்டு விலங்குகளில் அஞ்சாத நெஞ்சம் உடையது ஆண்சிங்கம். காட்டிலே ஆண் சிங்கம் பெருமிதமாக நடந்து செல்லும் அழகைக் கவிகள் வியந்து பாடியுள் ளார்கள். “ஏறுபோல் பீடு நடை” என்று அந்நடை யைப் புகழ்ந்துரைத்தார் திருவள்ளுவர். ஆண்மையுள்ள ஆடவனை ‘புருஷ சிங்கம்’ என்று புகழ்வதுண்டு. இந் நாட்டு அரசர்களில் சிலர் ‘ராஜசிங்கம்’ என்று பெயர் பெற்றிருந்தார்கள். அரசர்கள் வீற்றிருந்த ஆசனம் அரியாசனம் என்றும் சிம்மாசனம் என்றும் போற்றப் பெற்றது. கலைமகளின் அருள் பெற்ற கவிஞர் ஒருவர்,

"அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
சரியா சனம்வைத்த தாய்"

என்று பாடிய பாட்டு இங்கு நினைவிற்கு வருகின்றது.

சிங்கத்திற்கு அடுத்த வரிசையில் வீரத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குவது புலி. 'புலி அடிக்கும் முன்னே கிலி அடிக்கும்' என்பது ஒரு பழமொழி. பெருத்த உடலும் கனத்த கொம்பும் உடைய யானையே புலியைக் கண்டு அஞ்சும் என்ருல் அதன் வீரத்திற்கு வேறு சான்றும் வேண்டுமோ ?

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்."

என்று திருக்குறள் பாடிற்று.

தென்னுட்டில் 'பெரும் புலி' என்பது ஒரு குறுநில மன்னனின் குடிப்பெயராய் அமைந்தது. பெரும் புலி என்ற பட்டப்பெயர் பெப்புலி என்று மாறி, இப்பொழுது பொப்புலி என வழங்குகின்றது. எனவே, ஆந்திர நாட்டில் உள்ள பொப்புலி அரசர் பெரும் புலிப்பட்டம் பெற்ற குடியைச் சேர்ந்தவர். தமிழ்நாட்டில் உள்ள காளையார்கோயில் என்னும் ஊர் முற்காலத்தில் ஒரு பெரிய கோட்டையாக இருந்தது. கானப்பேரெயில் என்பது அதன் பெயர். அக்கோட்டையை ஆண்ட சிற்றரசன் வேங்கை மார்பன் என்ற பெயருடைய வீரனுய்த் திகழ்ந்தான் என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. இக்காலத்திலும் கலைகளில் வல்லாரைப் புலி என்று புகழும் வழக்கம் உண்டு. வெண்பாப் பாடும் திறமுடையார் ஒருவர் வெண்பாப் புலி என்ற பட்டம் பெற்ருர். சங்கீதக் கலையில் சிறப்புற்று விளங்கிய ஒருவர் டைகர் வரதாச்சாரி என்று இசை உலகத்தில் பெயர் பெற்ருர்.

காட்டில் வாழும் விலங்குகளில் மானமுள்ள மிருகம் என்று கவிகளால் புகழப்படுவது கவரிமா.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்ற திருக்குறள் இவ்விலங்கின் தன்மையை எடுத்துரைக்கின்றது. இமயமலைச் சாரலில் இன்றும் இருப்ப

தாகச் சொல்லப்படுகின்ற கவரிமாவை நமது கண் காட்சிச் சாலைக்கு வருவித்து அதன் தன்மையை ஆராய்ந்து அறிதல் வேண்டும் என்பது என் ஆசை.

யானை பாரதநாட்டுப் பழம்பொருள். பலவகையாக இவ்விலங்கு, மக்களுக்குப் பயன்படுகின்றது. முன்னுளில் மன்னர்க்குரிய நால்வகைப் படைகளுள் ஒன்று யானைப்படை. பட்டத்து யானையின்மீது மன்னர் பவனி வருவதுண்டு. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்று சொல்லுவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே யானைத் தந்தம் தென்னிந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்று சரித்திரம் கூறுகின்றது.

யானையின் நடையிலே ஓர் அழகுண்டு. ஆடவர் நடை யானையின் நடையை ஒக்கும் என்றும், பெண்களின் நடை அன்னத்தின் நடையை நிகர்க்கும் என்றும், கவிகள் சிறப்பித்துப் பாடுவர். கானகத்தில் வழிநடந்த இராமனும் சீதையும் கோதாவரி யாற்றங்கரையை அடைந்தபோது அங்கே ஒரு அன்னம் ஒதுங்கி நடந்து சென்றது. அன்ன நடையைக் கண்ட இராமன் சீதையின் நடையோடு அதை ஒப்பிட்டுப் பார்த்துச் சிறந்த இன்பம் உற்றுன். அந்த வேளையில் ஆற்றிலே தண்ணீர் குடித்துவிட்டு ஒரு யானைக் குட்டி ஒருபுறம் நடந்து போயிற்று. அதை நோக்கினுள் சீதை. அதன் நடையைத் தன் நாயகன் நடையோடு ஒத்துப் பார்த்து பெருமகிழ்ச்சி யுற்றுள்.

" ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும் ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்."

(ஓதிமம் - அன்னம்; முறுவல் - புன்சிரிப்பு; போதகம் - யானைக் குட்டி.)

என்று இருவரும் அடைந்த இன்பத்தைக் கம்பர் அருமையாகப் பாடியுள்ளார்.

இவ்வளவு சிறப்புடைய யானையிடம் சிறுமையும் உண்டு. யானை மதங்கொண்டால் கட்டுக் கடங்காமல் வெறிகொண்டு திரியும்; எதிர்ப்பட்ட பொருள்களையெல்லாம் தகர்த்து எறியும்; இன்னார் இனியார் என்று பாராமல் அகப்பட்டவரை யெல்லாம் அடித்து முடிக்கும். பல நாள் பழகிய பாகனையும் பரிவின்றிக் கொல்லும். இந்தச் சிறுமை யானையிடம் அமைந்திருத்தலை நாலடியார் என்னும் நீதிநூல் எடுத்துக் காட்டுகின்றது. யானை உயர்ந்த விலங்கு; நாய் மிக இழிந்த விலங்கு. ஆயினும் யானைக்கு நன்றியில்லை; நாய்க்கு நன்றி உண்டு. ஆதலால், யானைபோல் செருக்குற்றவரோடு பழகவேண்டாம். நாய் போல் நன்றியறிவுடையாரை நண்பராகக் கொள்ளுதல் நன்று என்று நாலடியார் கூறுகின்றது.

அன்னத்தின் நடையையும் நலத்தையும் புகழாத கவிஞர் இல்லை. அன்னநடை என்று எல்லோரும் புகழக் கேட்ட மன்னனாகிய நளன் அதன் உண்மையை ஆராய்ந்து அறிய ஆசைப்பட்டான். தாமரைக் குளத்திற்குப் போந்து ஓர் அன்னத்தைப் பிடித்தான். மன்னன் கையில் அகப்பட்ட அன்னம் மறுகித் துடித்தது. என்ன தீங்கு செய்வானோ என்று எண்ணி ஏங்கிற்று. அதன் அச்சத்தை அறிந்தான் அரசன்; இரக்கமுற்றான். நடுங்கிய அப்பறவையைப் பார்த்து, "அன்னமே, அஞ்சாதே! உன்னைத் துன்புறுத்த மாட்டேன். உன்னுடைய நடை அணி நடை என்றும் மங்கையர் நடை மணி நடையென்றும் புலவர்கள் புகழ்ந்து பாடுகின்றார்களே! இவ் இரு நடையில் எது சிறந்தது என்று நேரில் அறிந்துகொள்ளும் பொருட்டே உன்னைப் பிடித்தேன்" என்று ஆறுதல் கூறினான். இக் கருத்தை ஒரு தமிழ்ப் பாட்டிலே காணலாம்.

" அஞ்சல் மடஅனமே! உன்தன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்தது காண் என்றுன் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன் "

என்று நளவெண்பா பாடுகின்றது.

இன்னும் அன்னத்தைக் குறித்துப் பல அருமையான செய்திகள் சொல்லப்படுகின்றன. தண்ணீரையும் பாலையும் கலந்து ஒரு கிண்ணத்தில் உண்ண வைத்தால், தண்ணீரைப் பிரித்துத் தள்ளிவிட்டுப் பாலை மட்டும் பருகும் இயல்பு அன்னத்திடம் உண்டு என்று கவிகள் கூறுவர். ஒரு கவிஞர் சொல்கிருர்: 'கல்வி கரைகாணுக் கடல் போன்றது; அறிவு நூல்களுக்கு ஓர் அளவில்லை. அவற்றையெல்லாம் படித்தறிவதற்கு நமக்கு ஆயுள் போதாது. ஆதலால் சுவையுள்ள பாலை, சுவையற்ற தண்ணீரின்றும் பிரித்து உண்ணும் அன்னம்போல் சாரமான நூல்கலைத் தெரிந்தெடுத்துப் படிப்பதே அறிவுடைமைக்கழகு' என்று பாடியுள்ளார். இப்பாட்டிலே அன்னத்தைப் பற்றிச் சொல்லப்பட்ட கருத்து கவிஞரது கற்பனையா அல்லது உண்மைதானு என்பதை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

அன்னத்தின் நடையைப் போலவே மானின் கண்ணும், மயிலின் சாயலும், கிளியின் மொழியும், குயிலின் குரலும், வண்டின் இசையும் எக்காலத்தும் புலவர் பாடும் புகழுடையனவாகும். கண்ணுக்கு இனிய தண்ணறுஞ் சோலையில் மயில்கள் ஆடும் அழகினையும், வண்டுகள் இசைபாடும் இனிமையையும் எடுத்துரைக்கின்ருர் கம்பர்.

" தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க
குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ ”

என்ற அருமையான பாட்டில் வண்டுகள் பாடும் இன்னிசையின் இன்பத்தை உணர்த்துகின்றுர் கம்பர்.

சோலைகளிலே சுற்றிச் சுழன்று மலர்களிலே தேன் உண்டு மகிழும் வண்டுகளில் பலவகை உண்டு என்பது தமிழ் இலக்கியத்தால் தெரிகின்றது. இளவேனிற் காலத்தில் ஓர் இனிய சோலையில் இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தான் சீவகன் என்னும் வீரன். அவனே சிந்தாமணி என்ற செந்தமிழ்க் காவியத்தின் கதாநாயகன். இளம்பெண்கள் இருவர் தாம் செய்த வாசப்பொடியைக் கொண்டு அவனைக் காண வந்தார்கள். அவர் கொண்டு வந்த பொடிகளில் எது சிறந்ததென்று ஆராய்ந்து தீர்ப்பளிக்குமாறு அவனை வேண்டிக் கொண்டார்கள். அப்போது சீவகன் சோலையிலுள்ள வண்டுகளே வாசப் பொடியின் தரமறிந்து தீர்ப்பளிக்கும் தகுதி வாய்ந்தன என்று எண்ணினுன்; பலவகையான பூக்களில் அமர்ந்து, அவற்றின் மகரந்தத்தை நுகர்ந்து அறிந்த வண்டுகளின் தீர்ப்பு ஒரு போதும் தவருகாது என்று கருதினுன். மங்கையர் இருவரும் வண்டுகளின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள இசைந்தார்கள். உடனே சோலையில் இசைபாடிக் கொண்டிருந்த வண்டினங்களை எல்லாம் அழைத்தான் சீவகன்.

“ மங்கை நல்லவர் கண்ணும் மனமும் போன்று
எங்கும் ஓடி இடரும் சுரும்புகாள்
வண்டு காள்மகிழ் தேன் இனங் காள்மீது
உண்டு தேக்கிடும் ஒண்ஞிமி றீட்டங்காள் ”

என்று அவற்றின் பெயர் சொல்லி அழைத்தான். சோலையிலே ஆடும் சுரும்புகளையும், வண்டுகளையும், தேனீக்களையும், ஞிமிறுகளையும் வரவழைத்துத் தீர்ப்புச் சொல்லும்படி வேண்டினுன் என்று சிந்தாமணிக் காவியம் சொல்லுகின்றது. எனவே, பொதுவாக நாம் வண்டுகள் என்று சொல்லும் உயிரினத்தில் பல உட்பிரிவுகள் உள்ளன என்பது தெளிவாகின்றது. திருவாசகத்திலே

கோத்தும்பி என்ற வண்டு பேசப்படுகின்றது. அதுவும் வண்டினத்தின் ஒருவகை என்று தெரிகின்றது. நமது கண்காட்சிச் சாலையில் இவ்வண்டினங்களைச் சேகரித்து வகைப்படுத்தி வைத்தால் பார்ப்பவர் கண்ணும் மனமும் களிப்புறும் என்பதில் ஐயமில்லை.

பாம்புகளிலும் பலவகை உண்டு. அவற்றைக் கண் காட்சி மன்றத்திலே காணலாம். நஞ்சுடைய பாம்பைக் கண்டால் மக்கள் அஞ்சி நடுங்குவர். பாம்பென்றால் படையும் அஞ்சும் என்பது பழமொழி. முற்காலத்தில் பாலைவனங்களில் பயங்கரமான ஒரு வகைப் பாம்பு இருந்தது என்று கவிகள் கூறுகின்றார்கள். **திட்டிவிடம்** என்பது அதன் பெயர். அந்தப் பாம்புக்குக் கண்ணிலே விஷம் உண்டு. அதன் பார்வையில் அகப்பட்ட உயிர் கள் எல்லாம் நஞ்சுண்டு இறந்துபடும். மாசிலாக் கற்பு டைய மங்கையரை இப்பாம்பிற்கு ஒப்பாகக் கூறுவ துண்டு. சீதைக்கு தவறிழைத்த இராவணனை நோக்கி,

> " திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
> விட்டிலை யோஇது விதியின் வண்ணமே"

என்று கூறும் கும்பகருணன் வாயிலாக கம்பர் இக் கொடிய பாம்பைக் குறிக்கின்றார். இந்த நாகம் இப் பொழுது இவ்வுலகில் வாழ்வதாகத் தெரியவில்லை. அது வாழ்ந்திருந்தாலும் கண்காட்சிச் சாலைகளில் அதன் கண்ணைக் கட்டாமல் விட்டு விட்டால் நம் கதி என்ன வாகும்?

கடைசியாக ஒன்று சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். மனித வாழ்க்கைக்கும் மிருக வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இவ்வுண்மையை அறிந்துகொண்டது தமிழ்நாடு. மனிதராகப் பிறந்தவ ரெல்லாம் உண்மையில் உயர்ந்த பிறப்பினரல்லர். அவ ருள்ளும் மிருகத் தன்மையுடையவர் உண்டு. இதை உணர்ந்தே மனித இனத்தை மாக்கள் என்றும் மக்கள் என்றும் இருவகையாகப் பிரித்தார் தொல்காப்பியர் என்னும் பழந்தமிழ்ப் புலவர். பகுத்தறிவுடையரே மக்க

ளாவர். அவ்வறிவற்றவர் மாக்கள் எனப்படுவர். கல்வியால் வரும் பகுத்தறிவைப் பெறுதவர்கள் ஐயறிவுடைய மிருகங்களோடு சேர்த்து எண்ணத்தக்கவர்கள் என்பது தமிழ் நாட்டார் கொள்கை,

" மாவும் மாக்களும் ஐயறி வினவே ;
மக்கள் தாமே ஆறறி வுயிரே "

என்று அறிவுறுத்தினர் தொல்காப்பியர். இந்த உண்மையைத் திருக்குறளும் தெள்ளத் தெளிய உணர்த்துகின்றது.

" விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் "

என்பது வள்ளுவர் வாக்கு. கல்லாத மனிதனுக்கும் காட்டு விலங்குக்கும் உருவத்தில் வேற்றுமை யிருந்தாலும் உண்மையில் வேற்றுமையில்லை. இதனாலேதான் படிப்பும் பண்பாடும் இல்லாத ஒருவன் காட்டுமிராண்டி என்று அழைக்கப்படுகின்றான். ஆகவே, இந்த நூற்றாண்டு விழாவில் காட்டுவாசிகளைக் கண்டு மகிழும் அன்பர்கள் காட்சியின்பத்தோடு கல்வியின் மாட்சியையும் அறிந்து ஆறறிவு பெற்ற மக்களாய் விளங்குதல் வேண்டும் என்பது சென்னை நகராண்மைக் கழகத்தாரின் ஆசை. விலங்கினம் வாழ்க என்று வாழ்த்தும் இத்திருநாளில் விலங்கு நூல் கல்லாத என்னை வருக என்று அழைத்து, விழாவுரை ஆற்றப் பணித்த நகர சபையாருக்கு என் மனமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

### அருஞ்சொற்பொருள்

ஏற்றமும் தோற்றமும் - உயர்வும் பெருமையும். ஏறுபோல் - ஆண் சிங்கத்தைப் போல. பவனி - ஊர்வலம். போதகம் - யானைக் குட்டி. சுரும்பு - ஆண்வண்டு. தேக்கிடும் - களிப்படையும். மாக்கள் - விலங்குகள்.

### வினாக்கள்

1. காக்கையிடமிருந்து நாம் கற்க வேண்டிய உயர் பண்பு யாது?
2. இலக்கண ஆசிரியர் மாற்றிக்கொள்ள வேண்டிய கருத்தென்று ஆசிரியர் குறிப்பிடுவது யாது?

3. எவ்விலங்கை கண்காட்சிச் சாலேக்கு வருவித்து அதன் தன்மையை ஆராய்ந்து அறிதல் வேண்டுமென ஆசிரியர் விரும்புகிருர் ?

4. யானே, அன்னம் ஆகியவற்றின் நடையின் சிறப்பை இலக்கியச் சான்று தந்து விளக்குக.

5. அன்னம் நமக்கு உணர்த்தும் உண்மை யாது ?

6. மருதம் கொலுவீற்றிருக்கும் கோலத்தை க் கம்பர் எவ்வாறு வருணிக்கிருர் ?

7. வண்டுகளின் வகைகளேப் பற்றிச் சிந்தாமணியும் திருவாசகமும் குறிப்பன யாவை ?

8. மனித வாழ்க்கைக்கும் மிருக வாழ்க்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு யாது ? இதனுல் அறியப்படுவதென்ன ?

## 2. குடிமக்கள் காப்பியம்

[திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர், எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்.]

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த என் இளமை வாழ்க்கை நினைக்க நினைக்க இனிக்கின்றது. இளமையில் கேட்ட கதைகளை நினைத்தாலும் இன்பம் அன்றோ பொங்குகிறது! மின்சார விளக்குகள் வருவதற்கு முன் மினுக்கு மினுக்கு என மின்னும் பூச்சிகளோடு தெரு விளக்குகள் போட்டியிடும் காலம் அது. அதிலும் ஓர் அழகு; ஓர் இன்பம். பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கிவிடும். ஒரு மௌனம்—எங்கும் நிறைந்த பெருமௌனம் ஒன்றே அமைதி பொங்கும் இரவில் இன்பக் கூத்தாடும். மாலை ஆறு மணிக்கெல்லாம் சோறு முடிந்துவிடும். நடுவாசலினை அடுத்துள்ள சரக்காற்றில் குழந்தைகள் எல்லாம் கூடிவிடுவோம். எங்கள் வீட்டில் பழைய வேலையாளைச் சுற்றி, "நாயனு நாயனு ஒரு கதை ஒரு கதை" என்று அன்பு கனியக் கூறிச் சூழ்ந்து கொள்வோம். கதையுலகில் புகுந்து நகையாடுவோம். இருட்டினை மறப்போம்; வீட்டினை மறப்போம்; இந்த உலகினையே மறப்போம். அரசரும் அரசியும், வீரரும் சூரரும் பொன்னும் மணியும், அழகும் கடவுளும், பேசும் விலங்குகளும், பாடும் மரங்களும் எங்களைச் சுற்றிச் சுற்றிவர அந்தச் சித்தருலகில் யாங்களும் ஒருவராய் வாழ்வோம். எப்போதும் "ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார்" என்றே அந்த வேலையாள் கதை சொல்லத் தொடங்குவது வழக்கம். ஆம். அரசர் தவிர வேறெவரும் மனத்து எதிர் வரக் காணேம். என்ன என்ன கதைகள் என இப்போது எண்ணிப் பார்க்கிறேன். விக்கிரமாதித்தன் கதை; மதனகாமராசன் கதை; திருவிளையாடல்கள்; நளன் கதை; அரிச்சந்திரன் கதை; துரியோதனன் கதை; இராமன் கதை எல்லாம் முடி மக்கள் கதைகளே. குடிமக்கள் கதை ஒன்றும் கேட்டதாக நினைவுக்கு வரவில்லை. குடிமக்களைப் பற்றி எண்ணுதற்கே இடம்

இல்லாமல் போய்விட்டது. இன்று நினைத்தால் பெரிய வியப்பாகத் தோன்றுகிறது.

பின்னர்ப் பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகளும் முடிமக்கள் கதைகள் அல்லவா? இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே எப்போதும் பாட மாக வரும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்றால் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும். வரலாறு என்றாலும் அரசர்கள் வரலாறன்றி வேறொன்றும் வரலாறாக அன்று தோன்றுவதே இல்லை. எங்களைக் கதை எழுதச் சொன்ன போதும் "ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்" என்று எழுதத் தொடங்கிய தாகவே நினைவிற்கு வருகிறது. முப்பதாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இது. இதன் பின்னரே பாட்டாளி யுலகம் பிறந்து வளர்ந்துள்ளது. பாட்டாளி என்ற சொல்லே வழங்காத காலம் அது.

தமிழில் மட்டுமா இந்த நிலை இருந்து வந்தது? உலகம் தோன்றியதிலிருந்து உலகம் முழுதும் கதை என்றால் முடிமக்கள் கதைதான். வடமொழியில் ஆதி காவியம் என்று புகழப் பெறுவது வான்மீகியின் இராமா யணமே. கிரேக்கர்கள் பழங்காப்பியம் எனப்பாராட்டுவது ஹோமர் பாடிய 'இலியட்' என்பதேயாம். மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினையே பாடுகிறது அந்தப் பழங்காப்பியம். வர்ஜில் என்ற பாவாணர் பாடிய 'ஈனிட்' என்பதே இலத்தீன் மொழியின் பழங்காப்பிய மாகும். ரோமப் பேரரசினைத் தோற்றுவித்த 'ஈனியஸ்' என்ற அரசர் பெருமானது வரலாற்றினைக் கூறவே அக் காப்பியம் எழுந்தது. இவ்வாறு எந்த நாட்டுப் பழங் காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடிப்புகழக் காண்கிறோம்.

முடியரசர்கள் காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது என்றே சொல்லிவிடலாம். இது குடியரசுக் காலம். அது

மட்டுமா? முதலாளி என்று புகழ்வதெல்லாம் மலையேறிப் போய்விட்டதன்றோ? பாட்டாளி என்ற சொல்லே பாட்டைப்போல இனிக்கின்ற காலம் இது. இத்தகைய நாளில் முடிமக்களைப்பற்றிப் பாடிய நூல்களின் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முயல்வது வியப்பு அன்று. அண்மையில் தமிழிலக்கியத்தினை ஆராய எண்ணிய இளைய அறிஞர் முதலாளி இலக்கியமும் முடிமக்கள் இலக்கியமும் அன்றிக் குடிமக்கள் இலக்கியம் என ஏதேனும் உண்டா என்று நெஞ்சம் குமுறுகிறார். குறம் பாடினாலும் மீனாட்சி குறமாக முடிகிறது. குறவஞ்சி பாடினாலும் சரபேந்திரர் குறவஞ்சியாக நீண்டு ஓடுகிறது.

ஆனால் "பெரியோர்ப் புகழ்தலும் இலமே சிறியோர் இகழ்தல் அதனினும் இலமே" என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது. இப்பழந் தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா? உண்மையைத்தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே! தமிழில் ஆதி காவியம் எது? பாரதமா? அது பின்னாளில் எழுந்தது. இராமாயணமா? அது கம்பனால் சீர் பெற்றது. தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முதலாகக் காப்பியம் எனச் சிறப்புத் தோன்றியது சிலப்பதிகாரமே ஆம். அது யாருடைய கதை? சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதை அன்று. பாண்டியன் நெடுஞ் செழியன் அரசு கட்டிலில் வீற்றிருக்கிறான். கண்ணகி எதிரே உயிர் விடுகிறான். ஆனால் அவன் கதையும் அன்று. சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகின்றான். கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று. முரசு முழங்கு தானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை. குடிமக்களில் ஒருவர் கதை; அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்? கோவலன் குடிமக்களுள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம்.

இது நாம் வேறு எங்கும் காணுத ஒரு வியப்பு. முடி மக்கள் வரலாறே ஆதி காப்பியமாகப் பிற நாடுகளில் எல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறே ஆதி காப்பியமாகத் தமிழ் நாட்டில் அமைந்து விளங்குகிறது. குடியரசு உலகிலும் இந்தக் காப்பியத்தைப் பாராட்ட இடம் உண்டு. பாட்டாளி யுலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவவரி என்று பாட்டாளிகளைப் பாடுவதில் சிலப்பதி காரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு! முரசு முழங்குதானை முடிமக்கள் மூவரும் தமிழ் நாட்டின் ஒருமைப் பாட்டினைச் சிதைத்து வந்தனர். குடிமக்கள் வழியாகவே தமிழ் நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிருர் இளங்கோவடிகள். சோழ நாட்டில் பிறக்கிருள் கண்ணகி; பாண்டி நாட்டில் கணவனை இழக்கின்ருள்; சேர நாட்டில் தெய்வமா கின்ருள். மூவரசர் பேராசையால் முப்பெருந் துண்டாய் வெட்டுண்டு கிடக்கும் தமிழனை கண்ணகியின் வாழ்க்கை வழியே ஒருருவாய் உயிர் பெற்று விளங்குகிருள்.

என் வாழ்நாளுக் குள்ளேயே ஒரு புரட்சியைக் காண் கிறேன். முடிமக்களைப் பற்றியே கதையைக் கேட்டும் எழுதியும் வந்த நானே இப்போது குடிமக்கள் கதையைக் கேட்டும் எழுதியும் வருகிறேன். என் இளமை நாட்களில் இதனை நான் நம்பி இருக்க முடியாது. ஆனல் ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதனை நம்பினர் இளங்கோவடிகள். அரசர் குடியிற் பிறந்து, அரச செல்வத்தில் வாழ்ந்தவர் நம்பினர். நம்பியது மட்டுமா? நம்பியபடி குடிமக்கள் கதையினைக் காப்பிய மாக எழுதினர்! எழுதியது மட்டுமா தாம் எழுதியபடி தமிழ் நாடும் அந்தக் காப்பியத்தை அன்று முதல் இன்று வரை பாராட்டும்படியும் செய்துவிட்டார்.

இளங்கோவடிகள் செய்த புரட்சி பெரிதன்ருே? சங்க காலமே ஒரு புரட்சிக் காலம். அந்த நாளைய புலவர்கள் பழைமைக்கு அடிமையாகாது வெற்றிபெற முயன்ருர்கள்.

அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் இந்த உண்மை விளங்கும். தாங்கள் நேரிற் கண்ட போர்களை யும் ஊர்களையுமே உவமை கூறுகின்ற புதுமையை அங்குக் காணலாம். ''வஞ்சி மாநகர் போல அழகிய தலைவி; வெண்ணிப் போர் ஆரவாரம் போலப் பழிச் சொல் அம்பலத்தில் ஆரவாரமாகிறது'' என்றெல்லாம் பாடுகிற ஒரு புது மரபினைச் சங்கப் புலவர்கள் நிலை நாட்டி விட்டதனை என்ன என்பது? இந்தப் புரட்சியின் பயனாக விளையும் புரட்சிகள் பல. முடிமக்கள் வாழ்வில் காணும் சிறப்புகள் எல்லாம் குடிமக்கள் வாழ்விலும் கண்டால் அன்றோ காப்பியம் இனிக்கும். காதலும் அழு கையும் வீரமும் காப்பியப் பெருஞ்சுவைகள். மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க்காண்டம். கணவனையும் இழந்த கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டுகிருள். அந்தக் கதைதான் மதுரைக் காண்டம். கண்ணகிக்காக எடுத்த கல்லினை வடவரசர் தலைமீது ஏற்றி வந்த செங்குட்டுவன் வீரத்தைப் பாடுவதே வஞ்சிக் காண்டம். அரசனிடம் வீரம் கண்டால் குடிமக்கள் காப்பியம் எழுதற்கு இடம் இல்லை. கோவலனிடமும் வீரம் காண்கிருர் இளங்கோவடிகள். இன்று உலகம் போற்றும் வீரம்; காந்தியடிகள் காட்டிய வீரம்—இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காண்கிருர் இளங் கோவடிகள். யானைகளைக் கொல்லாமலே யானைக் காலி லிருந்து முதியவனைக் காப்பாற்றுகின்ருன் கோவலன். கருணை மறவனாகக் காட்சி யளிக்கின்ருன். கண்ணகி—வீட்டை விட்டு வெளிவராத பெண்—வெளிநாட்டில் பாண் டியனை வெல்கிருள்—கடவுளாக மாறுகிருள். ஈதொரு புதுமை. பரத்தையரைப் பழிப்பதே அன்றும் இன்றும் வழக்கம். பரத்தையர் குடிப் பெண்ணான மாதவி கற்பரசியாக ஓங்குகிருள். துறவறத்தின் முடிமணியாகச் சிறக்கின்ருள். அவள் மகள் உலக குருவாக விளங்கு வதனை மணிமேகலை பாடுகின்றது. குடிமக்கள் சிறப் பினை இதற்கு மேலும் எவ்வாறு கூறுவது? திருவள்ளுவர்

தமது பொருட் பாலில் குடிகளது சிறப்பினைக் கடைசி பதின்மூன்று அதிகாரத்தில் கூறுவதன் நுட்பம் இப்போது விளங்குகிறது அன்றோ! குடிமக்கள் சிறப்பினை இடைக் காலத்தில் தமிழ்நாடு மறந்ததும் உண்டு. அப்போது திருவள்ளுவர் கூறிய குடியியலின் நுட்பத்தினை உணர மாட்டாது அந்த அதிகாரங்களை ஒழிபியல் என்று ஒதுக்கி வைத்தது புதுமையோ? 'ஒழிபியல்' என்பது அனுமத் துக்கணக்கு—நாட்டின் உயிர் நிலையாய்ப் பொருட்பாலின் முடிமணியாக விளங்குவது ஒழிபியலாக ஒதுக்கப்படுவது காலத்தின் கோளாறன்றோ? இன்று குடிமக்கட் காப்பி யத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம். குடியரசில் அன்றோ வாழ்கிறோம்? பழைய நூல்களைப் புதிய கண் கொண்டு உண்மை உணர இனி வழியேற்படும்.

## அருஞ்சொற்பொருள்

சரக்காற்றில் - தாழ்வாரத்தில். சித்தர் - அரும்பெரும் செயல்களை முடிக்கும் ஆற்றல் பெற்றவர். தானை - சேனை. ஆய்ச்சியர் - இடைச்சியர். அவலச்சுவை - அழுகைச் சுவை. அனுமத்து - ஒரு தலைப்பில் அடங் காதது.

## வினாக்கள்

1. எந்நாட்டுப் பழங்காப்பியமும் அரசர் அல்லது வீரரின் வரலாற்றையே பாடுகின்றது என்பதை சான்றுகள் தந்து விளக்குக.

2. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்பது எங்ஙனம் பொருந்தும்?

3. சிலப்பதிகாரத்தைப் பாட்டாளி உலகம் பரிந்து வரவேற்கக் காரணம் என்ன?

4. கண்ணகியின் வாழ்க்கையால் தமிழன்னை ஒருருவாய் உயிர் பெற்று விளங்குவது எப்படி?

5. இளங்கோவடிகள் செய்த புரட்சி யாது?

6. காப்பியப் பெருஞ்சுவைகள் யாவை? அவை சிலப்பதிகாரத்தில் எவ்வெவ்விடங்களிற் காணப்படுகின்றன?

7. குடிமக்களின் சிறப்புகளாகச் சிலப்பதிகாரம் கூறுவன யாவை?

# 3. அமெரிக்கப் பிரயாணம்

[டாக்டர். ரா. க. சண்முகம் செட்டியார், பி. ஏ., பி. எல்.]

சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவர் என்னைச் சந்தித்தபோது, "நீங்கள் அமெரிக்கா போயிருப்பதாகக் கேள்விப்பட்டேனே! இதற்குள் திரும்பி வந்து விட்டீர்களா!" என்று கேட்டார். ஆம்! இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போய் அங்கே ஒரு முக்கிய வேலையை முடித்துக்கொண்டு, ஊருக்குத் திரும்பிவிட்டேன். சாதாரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் வருவதென்றால் போகவும் வரவும் 40 நாட்கள் கடற்பிரயாணம் செய்யவேண்டும். இப்போதோ வென்றால், இந்தியாவை விட்டால் மூன்று நாளில் அமெரிக்கா; கோயம்புத்தூரிலிருந்து டில்லிக்கு இரயிலில் போவதற்கு எவ்வளவு நாளாகிறதோ அவ்வளவு நாள் தான் கராச்சியிலிருந்து விமானத்தில் அமெரிக்கா போவதற்கும் ஆகிறது. விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கிவிட்டது.

ஒரு நாள் காலை 8-மணிக்கு நான் கோயமுத்தூரில் என் வீட்டிலிருந்தபோது, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய ஆபீசிலிருந்து டெலிபோனில் என்னைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. என்னவென்று விசாரித்ததில் அமெரிக்காவில் ஒரு மகாநாடு சமீபத்தில் கூடப் போவதாக அறிந்தேன். அந்த மகாநாட்டிற்கு இந்தியா கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நானும் போக முடியுமா என்று கேட்டார்கள். நானும் 'சரி' என்று ஒப்புக்கொண்டேன். ஆகாயக் கப்பல் வழியாகப் பிரயாணத்திற்குத் தயாராயிருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே முடித்துவிட்டேன். அமெரிக்காவுக்கு ஆகாயக் கப்பல் மார்க்கமாகப் பிரயாணம் செய்வதற்குச் சாமான்கள் தயாரிப்பது வெகு சுலபம். கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குப் போவதற்கு எவ்வளவு சாமான்களைக்

கட்ட வேண்டுமோ அதில் பாதியும் கூடத் தேவையில்லை. அமெரிக்காப் பிரயாணத்திற்குப் படுக்கையும், உணவுப் பாத்திரமும், வெள்ளிக் கூஜாவும் வேண்டாம்; ஆகாயக் கப்பலில் 65 ராத்தல் எடைக்கு மேல் எடுத்துக்கொண்டு போக முடியாது. உடுப்புக்கள் அடங்கிய ஒரு பெட்டியும், சில புத்தகங்கள் பேனு காகிதம் முதலியவைகள் அடங்கிய ஒரு சிறு பையும் இருந்தாற் போதும்.

'படுக்கை அவசிய மில்லையா, என்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நண்பர் கேட்டார். மேல் நாட்டுப் பிரயாணங்களுக்கு இது அவசியமில்லை. கப்பல், ரயில், ஓட்டல், நண்பர்களுடைய வீடுகள் இவற்றில் எங்கே போனாலும் படுக்கை வசதி அவ்விடம் இருக்கும். உடுப்பு களின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டியதில்லை. ஓர் ஊருக்குக் காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அழுக் கடைந்த ஆடைகளைச் சலவைக்குக் கொடுத்தால் வெகு நேர்த்தியான சலவையுடன் அன்று சாயங்காலம் ஆடைகள் திரும்பி வந்து விடும். இந்த வசதியிருக்கும் போது, சில ஆடைகள் மட்டும் கைவசமிருந்தாற் போதும்.

அமெரிக்காவுக்குப் போகும் விமானம் கராச்சியி லிருந்து புறப்படுகின்றது. சென்னையிலிருந்து கராச் சிக்குப் போக, விமான வழியாகவே ஏற்பாடு செய்திருந் தார்கள். ஒரு நாள் பகல் 2-மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டேன். அன்று சாயந்திரம் ஐதராபாத் போய்ச் சேர்ந்து விட்டேன். அன்றிரவு ஐதராபாத்தில் தங்கிவிட்டு மறுநாள் காலை 7½-மணிக்குப் புறப்பட்டதும், பகல் 12½-மணிக்குப் பம்பாய் வந்து விட்டேன். பம்பாயிலிருந்து பகல் 2-மணிக்குப் புறப்பட்டுச் சாயங்காலம் 5-மணிக்குக் கராச்சியும் சேர்ந்துவிட்டேன். மறுநாள் காலை அமெரிக் காவுக்குப் புறப்படும் விமானத்தில் நானும் என்னுட னிருந்த நண்பர்களும் ஏறினோம். அது 25 பிரயாணிகள் உட்காரும்படியான பெரிய விமானம். விமானத்தை ஓட்டும் மாலுமி, இஞ்சினியர் முதலியவர் 6 பேர். இவரல் லாமல் ஏராளமான சாமான்களும் நிரம்பியிருந்தன.

விமானம் இவ்வளவு பாரத்தையும் எடுத்துக்கொண்டு அதி காலையில் 7-மணிக்குக் கராச்சியை விட்டுக் கிளம்பிற்று.

ஆகாயத்திலே, தரை மட்டத்திலிருந்து, 12,000 அடிகளுக்கு மேல் விமானம் கிளம்பி விட்டது. கடலையும், மலைகளையும், பிறதேசங்களையும் தாண்டி மேக மண்டலத்திற்கு மேல் விமானம் மணி ஒன்றுக்கு 225 மைலுக்கு மேல் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. கராச்சியை விட்டதும் அடுத்த தங்கல், அரேபியாவின் கோடியிலுள்ள ஏடன் பட்டினத்தில் ; கராச்சியிலிருந்து இந்தப் பட்டினம் 1,700 மைல் தூரம். கப்பலில் போக வேண்டுமென்றால் 5 நாட்கள் ஆகும். காலையில் கராச்சியை விட்டுப்புறப் பட்டுப் பகல் சாப்பாட்டிற்கு ஏடன் சேர்ந்து விட்டேன்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஏடனை விட்டுப் புறப்பட்டதும், அன்று இரவுச் சாப்பாடு **கார்டூன்** என்னும் பட்டினத்தில்; இது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்திலுள்ள ஒரு முக்கிய பட்டினம்.

கார்டூன் பட்டினத்தில் இரவுச் சாப்பாடு முடிந்தவுடன் அங்கே இராத்தங்கல் ஏற்படும் என்று நினைத்தோம். ஆனால், இராத் தங்குவது என்னும் ஏற்பாடில்லை. இரவு 9-மணிக்கே கார்டூனிலிருந்து விமானம் கிளம்பி விட்டது. ஆகாயத்தில் பறப்பதற்குப் பகலாய் இருந்தால் என்ன ? இரவாயிருந்தாலென்ன ? ஆகாயத்தில் விமானத்திலிருக்கிறோம். 12,000 அடிக்குக் கீழ் ஆப்பிரிக்காக் கண்டத்தின் அடர்ந்த காடுகள், விரிந்த வனாந்தரங்கள், உயர்ந்த மலைகள், எங்கு பார்த்தாலும் பயங்கரமான இருள். இரவு முழுதும் விமானம் போய்க்கொண்டே இருக்கிறது. நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியிலேயே சிறிது சாய்ந்து கண் அயர்ந்தோம். விமானம் இருளில் போய்க் கொண்டே இருந்தது. சூரிய வெளிச்சம் தோன்றினவுடன் கீழே பார்த்தால், ஒரே வனாந்தரம். காலை 9-மணிக்கு ஆப்பிரிக்காவின் மேல் பாகத்திலுள்ள "ஆக்ரா" என்னும் பட்டினத்தில் விமானம் இறங்கிற்று. கார்டூனிலிருந்து ஆக்ராவுக்கு 2,300 மைல் தூரம். இவ்வளவு தூரத்தையும் ஒரே இரவில் கடந்தாய் விட்டது.

ஆக்ராவை விட்டால், அதற்கு மேல்புறம் அட்லாண்டிக் கடலைத் தாண்டவேண்டும். ஒரு கரையில் ஆப்பிரிக்காக் கண்டம், மறு கரையில் தென்அமெரிக்காக் கண்டம். இவை இரண்டிற்கும் நடுவில் 2,000 மைல் ஒரே கடல் மயம்! இந்தக் கடலின் மத்தியில் **'அசென்ஷன்'** என்னும் ஒரு சிறிய தீவு உண்டு. ஆக்ராவிலிருந்து அசென்ஷன் தீவுக்கு 1,300 மைல். பகலில் ஆக்ராவை விட்டவுடன் கடலைத் தாண்டி இந்தத் தீவுக்கு அன்று சாயங்காலமே வந்து விட்டோம்! அன்றிரவு அந்தத் தீவில் பட்டாளங்கள் இருக்கும் சிறிய குடிசைகளில் நாங்களும் தங்கினோம். மறுநாள் காலை அசென்ஷன் தீவிலிருந்து புறப்பட்டுத் தென் அமெரிக்காவில் உள்ள **நெட்டால்** என்னும் பட்டினத்தைச் சேர்ந்தோம். தென் அமெரிக்காவிலிருந்து, வட அமெரிக்காவுக்கு ஒரே நாளில் பிரயாணம் முடிந்து விட்டது.

சனிக்கிழமை காலை 7 மணிக்குக் கராச்சியிலிருந்து புறப்பட்டோம். செவ்வாய்க்கிழமை காலை 10-மணிக்கு அமெரிக்காவிலுள்ள **'மியாமி'** என்னும் பட்டினத்தை அடைந்தோம்.

மூன்று நாளில் ஆசியாக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங்களையும், இரண்டு பெரிய கடல்களையும் கடந்து பிரயாணத்தை முடித்து விட்டோம்.

ஆகாயக் கப்பலின் மகிமையால் உலக சரித்திரமே மாறுபாட்டையும், மனித வாழ்க்கையும், மனப்பான்மையும், புரட்சியுமடையும். இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு ஒரே நாளில் போவதென்றால், இந்தியர்களும் ஆப்பிரிக்கர்களும் அண்டை வீட்டார்போல் ஆகிவிட்டார்கள்; உலக மக்கள் எல்லோரும் ஒரு நாட்டின் மக்களைப் போன்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். மக்கள் எல்லோரும் ஒரே கடவுளின் புதல்வர்கள் என்னும் தத்துவம் விஞ்ஞானத்தின் மகிமையால் வாழ்க்கையில் உண்மையாகவே ஆகிவிட்டது. இந்த யுத்தம் முடிந்தவுடன், உலகமெங்கும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஆகாயக்

கப்பல் பறந்துகொண்டேயிருக்கும். உலகத்தின் ஒரு பட்டணத்திலிருந்து மற்ற எந்தப் பட்டணத்திற்குப் போகவேண்டுமென்ருலும் 3 நாளைக்குள் பிரயாணத்தை முடித்துவிடலாம்.

அமெரிக்காவுக்கு நான் பிரயாணம் செய்ததன் நோக்கம் ஒரு மாகா நாட்டின் விஷயமாக யோசித்து முடிவு செய்வதற்கு ஆகும். 44 நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய அம்மகாநாடு '**பிரிட்டன் வுட்ஸ்**' என்னுமிடத்தில் ஜூலை மாதம் முதல் தேதி கூடிற்று. உலகத்திற்குப் பொதுவான சில பொருளாதார விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்யும் நோக்கத்துடன் இந்த மகாநாடு ஜனுதிபதி ரூஸ்வெல்ட்டினுல் கூட்டப்பட்டது. உலகத்தின் சண்டைக்குக் காரணம் வறுமை. இந்த சண்டைக்குப் பின் உண்மையான சமாதானம் உலகத்தில் ஏற்பட வேண்டுமென்ருல், உலக மக்களின் வறுமையைப் போக்க வழிகளைத் தேடவேண்டும் என்று எல்லோருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வர்த்தகம், விவசாயம், கைத்தொழில்—இவைதாம் பொருளாதாரத்திற்கு அடிப்படையானவை. ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்கு தடையின்றி மற்ற நாடுகளுக்குப் போகும் வசதிகள் இருந்தால்தான் எல்லா நாடுகளும் செழிப்படைந்திருக்க முடியும்.

சமீப காலத்தில் இவ்விதமான வர்த்தகத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தங்கள், தங்கள் நாட்டின் அபிவிருத்தியைக் கருதி அயல் நாட்டுச் சரக்குகள் வரக்கூடாமல் இருப்பதற்குச் சுங்கங்களையும், வரிகளையும் ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

இதல்லாமல், ஒரு நாட்டிற்கும் மற்ருெரு நாட்டிற்கும் உள்ள நாணய மாறுதலாலும் வியாபாரத்திற்குத் தடைகள் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு நாணயம் உண்டு. இந்தியாவில் ரூபாய்; அமெரிக்காவில் டாலர்; இங்கிலாந்தில் ஸ்டர்லிங்; ஜர்மனியில் மார்க்; இத்தாலியில் லிரா. இவ்விதமாக ஒவ்வொரு நாட்

டிலும் நாணய வேறுபாடுகள் உண்டு. ஒரு நாணயத்திற்கும் மற்ற நாணயங்களுக்கும் நிகரான விகிதம் இருந்தால்தான் வியாபாரம் தடையில்லாமல் நடக்கும். ஒரு பவுன் என்றால் அது 4 டாலருக்குச் சமானம். இந்த விகிதம் நிகராக நிலையாக இல்லாமல் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தால் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் வர்த்தகம் நடத்துவது கடினம். வர்த்தகர்களுக்கு நட்டமும் ஏற்படும். நாணய விகிதங்களை மாறாமல் நிகராக்கவும், கைத்தொழில் அபிவிருத்திக்கு மூலதன உதவி எளிதில் கிடைக்கும் மார்க்கத்தை உண்டாக்கவும் வேண்டிய வழிகள்தாம் இந்த மகாநாட்டில் நிர்ணயிக்கப்பட்டன.

### அருஞ்சொற்பொருள்

மகிமை - பெருமை. வனாந்திரங்கள் - காடுகள். தத்துவம் - உண்மை.

### வினாக்கள்

1. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உலகத்தையே சிறிதாக்கிவிட்டது. எங்ஙனம்?
2. உண்மையான உலக சமாதானம் ஏற்பட வழி யாது?
3. வாணிபத்திற்கு ஏற்பட்டிருக்கும் இடையூறுகள் யாவை?
4. வானவூர்தியின் மகிமையால் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களை 'அமெரிக்கப் பிரயாண' ஆசிரியர் எங்ஙனம் கூறுகிறார்?
5. 'பிரிட்டன் வுட்ஸ்' என்னும் இடத்தில் கூடிய மகாநாடு யாரால் கூட்டப்பட்டது? அதன் நோக்கம் என்ன? நிர்ணயிக்கப்பட்டவை யாவை?

# 4. கிராம சபை

[திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார்]

நம் குலோத்துங்கன் காலத்தில் ஊர்கள் தோறும் சபைகள் இருந்தன. இச்சபையினரே அங்கு நடைபெற வேண்டிய எல்லாவற்றையும் நிறைவேற்றி வந்தனர். சுருங்கச் சொல்லுமிடத்து, அந்நாளில் கிராம ஆட்சி முழுமையும் இச்சபையாரால்தான் நடத்தப் பெற்று வந்தது எனலாம். இச்சபையின் உறுப்பினர் எல்லோரும் கிராமத்திலுள்ள பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற வர் ஆவர். அக்காலத்தில் தனியூர்களும் பல சிற்றூர்க ளடங்கிய சதுர்வேதி மங்கலங்களும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு என்று வழங்கினர். ஒவ்வொரு குடும்பிற்கும் பிரதிநிதி யாக ஒவ்வோர் உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பெற்றனர். செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உத்தரமேரூர் முப்பது குடும்புகளை யுடையதாகவும், தஞ்சாவூர் ஜில்லாவில் செந் தலை என்று தற்காலத்து வழங்கும் சந்திரலேகைச் சதுர் வேதி மங்கலம் சற்றேறக்குறைய அறுபது குடும்புகளை யுடையதாகவும் இருந்தன. எனவே உத்தரமேரூரிலிருந்த சபை முப்பது உறுப்பினரையுடையதாயிருந்தது என் பதும், சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்திலிருந்த சபை அறுபது உறுப்பினர்களையுடையதாயிருந்தது என் பதும் நன்கு விளங்குகின்றன. ஆகவே, சபையின் உறுப்பினரது எண், அவ்வூரின் பெருமை சிறுமைக்கு ஏற்றவாறு குறிக்கப் பெறும் போலும்.

இனி, சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் உரிமையுடையோர், காணிக்கடன் செலுத்தற் கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவ ராகவும், சிறந்த நூல்களைக் கற்ற அறிஞராகவும், காரியங் களை நிறைவேற்றுவதில் வன்மையுடையவராகவும், அற நெறியில் ஈட்டிய பொருளைக் கொண்டு தூய வாழ்க்கை நடத்துவோராகவும், முப்பத்தைந்துக்கு மேல் எழுபத் தைந்துக்குட்பட்ட வயதினராகவும், மூன்று ஆண்டுகட்கு

உள்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பின ராக இருந்திராதவராகவும் இருத்தல் வேண்டும் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

இனி, எந்தச் சபையிலாவது உறுப்பினராக விருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், ஐவகைப் பெரும் பாத கங்கள் புரிந்தோரும், கிராமக் குற்றப் பதிவுப் புத்த கத்தில் பதிவு செய்யப்பட்டவரும், பிறர் பொருளைக் கவர்ந்தோரும், கள்ளக் கையெழுத்திடலாகிய கூடலேகை செய்தோரும், குற்றங் காரணமாகக் கழுதைமீது ஏற்றப் பட்டவரும், எத்தகைய கையூட்டுக் கொண்டோரும், கிராமத் துரோகி என்று கருதப்பட்டோரும், இங்குக் குறிக்கப்பெற்றோர்க்கு உறவினரும், தம் வாழ்நாள் முழுமையும் கிராம சபையின் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

பொது மக்கள், கிராம சபையின் உறுப்பினரை ஆண்டுதோறும் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுப்பது வழக்கமாகும். தேர்ந்தெடுத்தற்குக் குறிக்கப்பெற்ற நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர் சபை கூடுவதற்கு அமைக்கப்பட்டுள்ள மாளிகையில் அவ்வூரிலுள்ள இளை ஞர் முதல் முதியோர் ஈருகவுள்ள எல்லோரையும் கூட்டு வர். அக்கூட்டத்தின் நடுவில் ஒரு குடம் வைக்கப்பெறும். அங்குள்ள நம்பிமாருள் வயது முதிர்ந்தோர் ஒருவர் அக்குடத்தை எடுத்து, அதனுள் ஒன்றும் இல்லை என்பதை எல்லோரும் அறியக் காட்டிக் கீழே வைப்பர். உடனே, அவ்வூரில் ஒவ்வொரு குடும்பிலுள்ளாரும் தமக்குத் தகுதி யுடையார் என்று தோன்றுவோர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்கு சேர்த்து, அவை எக் குடும்புக்குரியவை என்பது நன்கு புலப் படுமாறு அக்குடும்பின் பெயர் வரையப்பெற்ற வாயோலை யொன்றைச் சேர்த்துக் கட்டி அக்குடத்தில் இடுவர். இங்ஙனமே எல்லாக் குடும்பினரும் குடவோலை இடுவர். பின்னர், அம்முதியோர் அங்கு நடைபெறுவதையுணராத ஓர் இளைஞனைக்கொண்டு அக்குடத்தினின்றும் ஓர் ஓலைக் கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து வேறு ஒரு

குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் ஓர் ஓலையை அச்சிறுவனைக் கொண்டு எடுக்கச் செய்து, அதனைத் தாம் பெற்று, அங்குள்ள கரணத்தான் (கணக்கன்) கையிற் கொடுப்பார். அவன் தன் ஐந்து விரல்களையும் விரித்து உள்ளங்கையில் அதனை வாங்கி, அவ்வோலையில் எழுதப் பெற்றுள்ள பெயரை அங்குள்ளோர் யாவரும் உணருமாறு படிப்பான். பின்னர் அங்குள்ள நம்பிமார் எல்லோரும் அதனை வாசிப்பர். அதன் பிறகு, அப்பெயர் ஓர் ஓலையின்கண் வரைந்துகொள்ளப்படும். அவ்வோலையிற் குறிக்கப்பெற்ற பெயருடையவரே அக்குடும்பிற்குரிய கிராமசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் ஆவர்.

இங்ஙனமே மற்றைக் குடும்புகளுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப் பெறுவர். ஊரிலுள்ள எல்லாக் குடும்புகளுக்கும் உரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர், அவர்களுள் வயதிலும் கல்வியிலும் அறிவிலும் முதிர்ந்தோர் பன்னிருவரைச் சம்வத்சரவாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோருள் சிலர் ஏரிவாரியராகவும், சிலர் பொன்வாரியராகவும், சிலர் பஞ்சவாரியராகவும் ஏற்படுத்தப்படுவர். எனவே, கிராமசபை, சம்வத்சர வாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரியம் என்று ஐந்து உட்கழகங்களைத் தன்னகத்துக் கொண்டு விளங்கிற்று. சபையின் உறுப்பினர் ஏதேனும் குற்றம்பற்றி இடையில் விலக்கப்பட்டாலன்றி ஓராண்டு முடிய எவ்வகை ஊதியமும் பெறாது தம் வேலைகளை நடத்துவதற்கு உரிமை பூண்டவராவர். இவர்களை ஆளுங் கணத்தார் எனவும், பெருமக்கள் எனவும் கூறுவர். இவர்கள் கூடுதற்கு ஊர்தோறும் மாளிகைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவர்களுள் நியாய விசாரணை செய்வதும், அறநிலையங்கள் நன்கு நடைபெறுகின்றனவா என்று பார்த்துக்கொள்வதும் சம்வத்சர வாரியரது கடமையாகும். ஏரி, குளம், ஊருணி முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்தலும், விளைவிற்கு வேண்டும் நீரைப் பாய்ச்சுவித்தலும் ஏரிவாரியரது கடமையாகும்.

நிலத்தைப்பற்றிய எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளு தல் தோட்டவாரியரது கடமையாகும். பல்வகையாலும் வாங்கப்பட்ட பொற்காசு செப்புக்காசுகளை ஆராய்வது பொன்வாரியரது கடமையாகும். பஞ்சவாரியரது கடமை யாது என்பது இப்போது புலப்படவில்லை. இச்சபையார் பணித்தவற்றைச் செய்பவன் கரணத்தான் எனப்படு வான். இவனை மத்தியஸ்தன் எனவும் கூறுவதுண்டு. நல்வழியில் ஈட்டிய பொருளும், நல்லொழுக்கமும் உடைய வனையே கரணத்தானாக அமைப்பர். இவன் கணக்கு எழுதல் வேண்டும்; எழுதிய கணக்கைச் சபையார் விரும்பியபோது, தானே நேரில் காட்டவேண்டும். இவன் சபையாரது நன்மதிப்பைப் பெறுவிடின், அடுத்த ஆண் டில் இவனுக்கு அவ்வேலை கொடுக்கப்படமாட்டாது. ஒரு நாளைக்கு ஒருநாழி நெல்லும், ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறையும் கணக்கனுக்குச் சம்பள மாகக் கொடுக்கப்படுவது வழக்கம்.

இனி, நியாய விசாரணை நடத்தும் சம்வத்சரவாரியர், கொலை செய்தவனுக்குக் கொலைத்தண்டம் விதித்தலும், பிறவற்றிற்குச் சிறையிடுதலும், தளையிடுதலும், பொன் தண்டம் விதித்தலும் வழக்கம். அறியாமையால் தற்செய லாக நேர்ந்த சாவிற்கெல்லாம் அவ்வவற்றிற்கு ஏற்றவாறு திருக்கோயில்களில் விளக்கிடுவதற்குக் குற்றவாளிகள் பொன் கொடுக்குமாறு சபையார் தீர்ப்புக் கூறுவர். வேட்டைக்குச் சென்றோன் ஒருவன் எய்த அம்பு, குறி தவறி ஓர் உழவன்மேற்பட்டு அவன் இறந்ததற்கும், ஒருவன் தன் மனைவியைத் தள்ள அவள் விழுந்து இறந்த மைக்கும், ஒருத்தி தன் மகள்மீது எறிந்த கோல் பட்டு அண்மையில் நின்ற வேறொரு பெண் மாண்டதற்கும் திருக்கோயில்களில் விளக்கிடுமாறு தீர்ப்புக் கூறினரே யன்றி அன்னாருக்குக் கொலைத்தண்டம் விதித்திலர். ஏற்றுக்கொண்ட கடமைகளை நிறைவேற்ற தொழிந்தவர் களுக்கும் பொன் தண்டம் விதித்தல் வழக்கம் என்பதும், அவர்கள் அதனைக் கொடாது ஓடிவிட்டால் அன்னோரது வீடு, காணி முதலியவற்றை அரசனது ஆணையின்படி

விற்று, ஊர்ச் சபையார் ஒழுங்கு செய்தல் வழக்கம் என்பதும் பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

### அருஞ்சொற்பொருள்

குடும்பு - தொகுதி (வார்டு). காணிக்கடன் - நிலவரி. கையூட்டு - இலஞ்சம். சம்வத்சரவாரியம் - ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பெறும் கிராமசபை. கரணத்தான் - கணக்கன். நம்பிமார் - பெரியோர். கழஞ்சு - ஒரு அளவுப் பெயர். கூறை - ஆடை. தளையிடுதல் - விலங்கிடுதல்.

### வினாக்கள்

1. கிராம சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் உரிமையுடையோர் யாவர்?

2. கிராம சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவர் யாவர்?

3. பழங்காலத்து தேர்தல் எவ்வாறு நடைபெற்றது?

4. கிராம சபையின் உட்கழகங்கள் யாவை? அவற்றின் கடமைகள் யாவை?

5. யார் யாருக்குக் கொலைத்தண்டம் விதிக்காது திருக்கோயில்களில் விளக்கிடுமாறு தீர்ப்புக் கூறினர்?

# 5. ஜப்பானியரின் பழக்க வழக்கங்கள்

[திரு. சு. இராமசுவாமி நாயடு]

ஜப்பானியரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள் மிகப் பல. அவற்றுள் குறிப்பிடத் தகும் சில பழக்க வழக்கங்கள் இங்குத் தரப்படுகின்றன.

**சதுக்கத்துண்டு :**

ஜப்பானியர் ஒவ்வொருவரும் கைத்துண்டு போன்ற தொரு சதுக்கத் துண்டு வைத்திருக்கின்றனர். இது கைத்துண்டாகப் பயன்படுத்தப்படவில்லை. செல்வர்களிடம் இருக்கும் சதுக்கத்துண்டில் அவரவர் குடும்பச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். இத்துண்டுகளில் அழகிய பூப்பின்னல், ஓவியங்கள் முதலியன காட்சியளிக்கும். அவரவர் தகுதிக்கேற்ப, இச் சதுக்கத்துண்டுகள் பட்டாகவும் பருத்தியாகவும் இருக்கும். சதுக்கத்துண்டில் நாம் இங்கே நான்கு மூலைகளையும் இழுத்து வைத்து மூட்டைகள் கட்டுவதுபோல, ஜப்பானியர் எந்த எந்த பொருளையும் தங்களிடமுள்ள சதுக்கத்துண்டில் கட்டியே எடுத்துச் செல்வர். பள்ளிப் பிள்ளைகள் தங்கள் நூல்களையும், பணியாளர்கள் தத்தம் சிற்றுண்டிகளையும் சதுக்கத்துண்டில் கட்டியே எடுத்தேகுவர். கடைகளில் வாங்கும் பொருள்களும், காய்கறிகளும், உடுப்பு, முதலியவைகளும் இவ்வாறே கட்டி எடுத்துச் செல்லப்படும்.

இந்த வழக்கம் ஜப்பானியரிடை ஏற்பட்டதற்கு ஒரு வரலாறு கூறப்படுகிறது. அஃதாவது, பதினான்காம் நூற்றாண்டில் முரோமட்சி மன்னன் ஆட்சி நடத்திய போது, கியோட்டோவில் தன் அரண்மனையில் மிகப் பரந்த நீராடும் அறை ஒன்றைக் கட்டினான். அரசாங்க அதிகாரிகள், அரசவைச் செல்வர்கள் முதலியோர் அங்கு சென்று நீராடுவது வழக்கம். நீராடிய பின்னர் உடுத்தும் அறைக்கு வரும்போது ஈரக் கால்களுடன் வருவதால் உடுப்பறையின் தரை நனைந்துவிடும். ஆதலின், அக் காலச் செல்வர்கள் சதுக்கமாக ஒரு துணி எடுத்து,

அடையாளத்திற்கென அவரவர் குடும்பச் சின்னம் பொறித்து, அதில் தாங்கள் உடுத்திக் கொள்ள வேண்டும் உடைகளைக் கொணர்ந்து அவ்வுடுப்பறையில் வைத்து விட்டு நீராடிச் செல்வர். நீராடி முடிந்ததும் அங்கு வந்து உடுத்திக் கொள்வர். இந்த வழக்கம் நாளடைவில் பொது மக்களிடைப் பரவி, உடுப்புகள் மட்டுமின்றி எல்லாப் பொருள்களையும் எல்லாரும் இச்சதுக்கத்துண்டில் கொண்டு செல்வதென்பது வேரூன்றி விட்டது.

**விருதுகள் :**

ஜப்பானியக் குடும்பம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விருது பெற்றதாகவே இருக்கிறது. ஒவ்வொரு குடும்ப விருதும் ஒரு குறிப்பிட்ட, சின்னமாக அமைந்திருக்கும். மலர்கள், செடி கொடிகள், விலங்குகள், விந்தைப் பொருள்கள் முதலிய அவர்களின் குடும்ப விருதிற்குரிய சின்னங்களாக அமைந்திருக்கின்றன. இந்தச் சின்னங்கள் தங்கள் குடும்பப் பண்டை வரலாற்றுக்கு உரியவையாகவும் ஜப்பானியரால் போற்றப்படுகின்றன. இவை இல்லங்களில் பொறிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றித் தத்தம் பொருள்கள் அனைத்தின் மீதும் பொறிக்கப்பட்டு விடும். ஒரு சிறு தேக்கரண்டி முதல் மோட்டார் வண்டி ஈருகக் குடும்பச் சின்னம் பொறிக்கப்படாமல் இரா. இதுவே, தங்கள் குடும்பப் பெருமையை விளக்குவதென்று அவர்கள் கருதுகின்றனர் ; நெடுந்தொலையில் பிரிந்து வாழும் மக்களெனினும் ஒரே குடும்பத்தினர் என்பதைக் குடும்பச் சின்னத்தின் வழியே கண்டு கொள்ளுதல் இயலுமென்றும் கூறுகின்றனர். இவ்வாறு குடும்பச் சின்னமற்று எவரேனும் இருப்பின், அவரை இழி குலத்தவராகவும், சேர்ந்து வாழுதற்குரிய தகுதியற்றவராகவும் பிறர் கருதுவர்.

**உடைச் சிறப்பு :**

மேனாட்டவருடைய நெருங்கிய தொடர்பால் இன்றைய ஜப்பானியருட் பலர், மேனாட்டு உடைகளையே

விரும்பி அணிகின்றனர். இக்கால மேனுட்டு உடைகளை எவ்வண்ணம் தயாரித்தல் வேண்டுமென்பதைக் கற்பிக்கும் வகையில் முப்பதுக்கு மேற்பட்ட நூல்கள், அங்கு அச்சாகி வெளியிடப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து, மேனுட்டு உடையில் ஜப்பானியருக்கும் இருக்கும் காதல் எத்தகையது என்பது நன்கு விளங்கும். உடை மட்டுமின்றித் தலை முடியையும் ஆண்களும் பெண்களும் இன்று மேனுட்டவரைப் போலவே கத்தரித்துக் கொள்கின்றனர். முடிவெட்டும் தொழிலில் ஆண்களைப் போலவே பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஜப்பானியரின் தேசிய உடை '**கிமோனே**' (Kimono) என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இந்த உடை மேனுட்டு உடைகளிலும் விலை உயர்ந்தது. கிமோனே வெறும் பட்டாக இராமல் பலவகைப் பூக்கள் ஒளிரும் அழகு மிகுந்த உடையாகும். ஜப்பானியர் இப்போது இதனை விழாக்காலங்களில் பயன் படுத்துகின்றனர்.

**தேநீர் பருகுதல்—ஓர் அழகுக் கலை :**

தேநீர் பருகுவது உலக நாடுகளில் இருத்தலைவிட ஜப்பானில் பெரும் பழக்கமாக இருக்கிறது. அங்கே அரசன் முதல் ஆண்டி ஈருக மக்கள் அனைவரும் தேநீர் பருகும் பழக்கமுடையவரே. தேநீர் பருகுதலை ஓர் அழகுக் கலையாகவே அம்மக்கள் மதிக்கின்றனர். அவர்கள் உணவுடனும், உணவுக்கு முன்னும் பின்னும் என ஒரு நாளில் பலமுறை தேநீர் பருகுகின்றனர்; தம் வீட்டுக்கு எவர் எந்த நேரத்தில் வந்தபோதிலும், முதலில் தேநீர் அளிக்கின்றனர். தேநீர் உடலுக்கு உரமூட்டவல்ல ஊட்டப் பொருள் என்பதை ஜப்பானிய விஞ்ஞானிகள் மெய்ப்பித்திருக்கின்றனர்.

"தேநீரை அளவுடன் பருகினல், அது உடலுக்கு உரமூட்டும்; இறைச்சி, மீன் போன்ற உணவுப் பொருள்களின் தீய சத்துக்கள் இரைப்பையில் தங்குவதையும் வெளியேற்றிவிடும். அமிலத்திற்கு எதிரான பொருள்

தேயிலையில் மிகுந்திருக்கின்றது. அதனால் தேயிலை இரைப்பையில் அமிலம் தங்கித் தீய பலன் உண்டாக்காமல் தடுக்கவல்லது. தேயிலையில் உள்ள மாங்கனிசம் மனித உடலில் உண்டாகும் நுண்ணிய புழுக்களைக் கொல்ல உதவுகிறது; அதிலுள்ள இரும்புச் சத்து குருதி ஓட்டத்தைப் பெருக்கித் தூய்மைப் படுத்துகிறது; ஏ, ஸி **உயிர்ச்சத்து** (Vitamin A & C) தேயிலையில் மிகுந் திருப்பதால் இது ஒரு நல்ல உணவாகப் பயன்படக் கூடியது'' என்று அந்த அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

**சானோயு :**

ஜப்பானியர் அடிக்கடி தேநீர் விருந்துகள் நடத்துகின்றனர். இது ஒரு சடங்குபோலவே நடத்தப்படுகிறது. விருந்தினர் பலர் இதற்கு வரவழைக்கப்படுவதில்லை. ஐவர் அல்லது அறுவரே விருந்தினராக அழைக்கப்படுவர். இதனை நடத்தும் முறை உலகில் வேறு எங்கும் காணப்படவில்லை. அவர்கள் இந்தச் சிறியதேநீர் விருந்தினைச் ‘‘**சானோயு**’’ (cha-noyu) எனக் கூறுகின்றனர்.

இந்த விருந்தை எங்ஙனம் நடத்துவது, விருந்தறை எவ்வாறு இருத்தல் வேண்டும், தேநீர் பரிமாறுதல் எவ்விதம் என்பன போன்றவை ஜப்பானிய சிறுமிகளுக்குக் கற்பிக்கவென்று, ஆங்குப் பல நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில், இது பற்றிய முறைகள் முழுவதும் கற்பிக்கப்படுகின்றன. ஜப்பானியப் பெண்கள் அனைவரும் இதனைக் கற்றுக் கொள்கின்றனர். மேனாட்டு நாகரிகம் பரவிவிட்ட இக்காலத்தும் சானோயு வழக்கம் மட்டும் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் ஒரே வகையாக நடைபெறுகிறது.

தேயிலையை ஒரு கிண்ணத்தில் இட்டு, அதன்மீது வெந்நீர் ஊற்றினால் தேநீர் தயாராகிவிடும். இது மிக எளிய வேலையே. ஆயினும், ஜப்பானியர் இதை ஒரு கலையாகவும் சடங்காகவும் நடத்துகின்றனர். இந்தச்

சாஞேயு சடங்கின்மூலம் அமைதி, அடக்கம், பணிவு, விருந்தோம்பல், பெரியோரிடம் நடந்துகொள்ள வேண்டும் பண்பு, நாகரிகம், பிறர் மனத்தைக் கவருமாறு நடத்தல் முதலிய நற்பண்புகள் அனைத்தும் அப்பெண்களுக்குக் கற்பிக்கப் படுகின்றன. தேநீர் விருந்தினைச் சடங்காக்கி, அதன்மூலம் பெண்மக்களுக்கு நற்பண்புகளைக் கற்பிக்கும் முறைகளை ஜப்பானியர் நீண்டகாலமாக மரபாகக் கைக் கொண்டிருக்கின்றனர்.

ஜப்பானியர் நடத்தும் இந்த தேநீர் விருந்து கலை யுடன் இணைக்கப்படுவது எங்ஙனம் என்பது அறிதற் குரியது. சாஞேயு தேநீர் விருந்தில் பச்சைத் தேயிலைப் பொடியே பயன்படுத்தப்படுகிறது. அஃதாவது, ஜப்பா னியர் உயர்ந்த தேயிலையைப் பறித்துப் பசுமை மாருமல் உலரவைத்துப் பொடியாக்கி, அப்பொடியை இச்சடங்கில் பயன்படுத்துகின்றனர்.

இச்சடங்கில் தேயிலை வைத்துள்ள பெட்டி, அதை அள்ளிப் போடும் மூங்கிற் கரண்டி, வெந்நீர் வைத்துள்ள பாண்டம், தேநீர் குடிக்க வைக்கப்பட்டுள்ள கிண்ணங் கள் முதலியன பல தலைமுறைகளாகக் காக்கப்பட்டு வந்தவை; ஓவிய வேலைப்பாடு நிறைந்தவை.

**விருந்தினர் :**

ஐவர் அல்லது அறுவரே பெரும்பாலும் இந்தச் சாஞேயு விருந்திற்கு அழைக்கப்படுவர். இவருள் ஒருவர் தலைமை விருந்தினராக இருப்பர். முதலில் விருந்தினரை அழைத்து, அவருடைய நண்பினரே மற்றை விருந்தின ராக அழைக்கப்படுவர். இவர்கள் முதலில் விருந்தினர் அறையில் தங்குவர். சாஞேயு விருந்துக்கென ஒரு தனி யிடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அத்தனியறை, தோட்டத் தின் ஒரு புறத்தில் இருந்தால் விருந்தினர் ஒருவர்பின் ஒருவராக வரிசையாய் அவ்வறைக்குச் செல்வர். சாஞேயு விருந்தறையில் நுழையப் பெரிய வாயில் இராது. சாளரம் போன்றதொரு குறுகிய வாயிலே அமைக்கப்பட்டிருக்கும். விருந்தினர் அதன் வழியே குனிந்து நுழைந்து

அறைக்குள் செல்வர். அவ்வறையில் ஒரு பகுதியில் வந்த விருந்தினர் அமர்வர். மற்ருென்று தேநீர் தயாரித்துப் பருகும் அறையாகும்.

**நடத்தும் முறை :**

தேநீர் தயாராகிவிட்டது என்பதை அறிவிப்பதற்குத் தேநீர் தயாரிக்கும் பெண், அவ்வறையிலுள்ள வெண்கல மணியில் மரச்சுத்தி கொண்டு தட்டி ஒலி எழுப்புவாள். அது செவிக்கினிய ஒலியாக இருக்கும். அதைக் கேட்ட விருந்தினர் தேநீர் அறைக்குள் நுழைவர். முதலில் விருந்தினருக்கு நீராக உள்ள (அதாவது, பொதுவாக உலகெங்கும் பருகுவது போன்ற) தேநீர் அளிக்கப்படும். இந்தத் தேநீரைப் பருகிய பின் விருந்தினர் மீண்டும் அறையின் மற்ருெரு பகுதிக்குச் சென்று பேசிக்கொண் டிருப்பர். அரைமணி நேரத்திற்கெல்லாம், விருந்துக் குரிய தேநீர் வழங்கப்படும். இத்தேநீர் வழங்குவதற்கு முன், இவ்விருந்திற்கெனச் செய்யப்பட்ட சிற்றுண்டிகள் வழங்கப்படுவதும் உண்டு.

இரண்டாவது முறையாக அளிக்கப்படும் தேநீரே விருந்துக்கு உரியதாகும். இது உலர்த்தி வைக்கப்பட் டுள்ள பச்சைத் தேயிலைப் பொடி கொண்டு தயாரிக்கப் படும். இந்தத் தேநீர் குழம்பாக இருக்கும். ஏறத்தாழ நம் நாட்டில் செய்யப்படும் கஞ்சிக்கு இதனை ஒப்பிடலாம். இந்தக் குழம்புத் தேநீர், விருந்தினர் வந்து அமர்ந்த பிறகு அவர்களுக் கெதிரிலே செய்யப்படும். இந்த விருந் தில், தேயிலைத்தூள் வைக்கப்பட்டுள்ள பாண்டம், கரண்டி, தேநீர் அருந்தவுள்ள கிண்ணங்கள் ஆகிய வற்றை விருந்தினர் பார்வையிடுதல் மரபு.

ஜப்பானியர் பாய்களிட்டு அவற்றின்மீதே அமர்வர். சில இல்லங்களில் வட்டவடிவாகத் தைக்கப்பட்ட இலவம் பஞ்சு மெத்தைகள் இருக்கையாக வழங்கப்படுதலும் உண்டு. மேனுட்டு நாகரிகமுடைய வீடுகளில் நாற்காலி மேசைகளிட்டும் இவ்விருந்து நடத்தப்படுவதுண்டு. ஆனுல் பெரும்பாலான மக்கள் தரையில் பாய்கள்மீது

அமர்த்தியே இவ்விருந்தை நடத்துகின்றனர். இவ்விருந்தில், விருந்தினர் தேநீர்க் கிண்ணத்தை உள்ளங்கையில் ஏந்தி மற்ருெருகையால் பிடித்துக்கொண்டு தேநீர் பருகிய பிறகு, தமக்கெதிரில் வைத்துவிட வேண்டும். விருந்தளிப்பவர் முதலில் தலைமை விருந்தினர் எதிரில் உள்ள கிண்ணத்தில் தேநீரை ஊற்றிய பிறகே மற்றவர்கள் எதிரில் உள்ள கிண்ணங்களில் ஊற்றுவர்.

இந்த விருந்து நிகழ்ந்து முடிய நான்கு மணிநேரம் ஆகும். இந்த விருந்தின்போது, அங்குள்ள பாண்டங்களின் வரலாறு, அவற்றின் ஓவியம், அறையில் காணப்படும் வரலாற்றுச் சிறப்புடைப் பொருள்கள் முதலியவை பற்றியே விருந்தினர் பெரிதும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருப்பர்.

### அருஞ்சொற்பொருள்

ஓவியங்கள் - சித்திரங்கள். சின்னம் - அடையாளம். விருது - சிறப்புக்கு உரிய அடையாளம். உரம் - வலிமை. அமிலம் - உடலில் ஊறுகின்ற ஒருவகைப் புளிப்புத் திரவம். மாங்கனிசம் - ஒருவகை உலோகச் சத்து. குருதி - இரத்தம். சாளரம் - சன்னல்.

### விஞக்கள்

1. ஜப்பானியர் விருதுகள், உடைச்சிறப்பு என்பனவற்றைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. தேநீர் பருகுவதனுல் ஏற்படும் நன்மைகள் யாவை ?
3. சாஞேயு என்றுல் என்ன? அது ஜப்பானியரால் எவ்வாறு மதிக்கப்படுகிறது ?
4. சாஞேயு சடங்கினுல் மக்கட்கு உண்டாகும் நற்பண்புகள் யாவை?
5. விருந்தறை எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் ?
6. ஜப்பானியர் சாஞேயு விருந்து நடத்தும் முறையை விவரிக்க.

## 6. செஞ்சிலுவைச் சங்கம்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர், எம்.ஏ.]

1859-ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்து அரசனை மூன்ரும் நெப்போலியன் வட இத்தாலியாவை ஆஸ்திரிய ஆட்சியினின்றும் விடுவிக்கும்படி பிரான்ஸ் படை, சார்டினியப் படை ஆகிய இரு கூட்டுப் படைகளை நடத்திச் சென்று சொல்பெர்னியோ (Solfernio) என்னு மிடத்தில் பொருது வென்ருன். போரில் பெருஞ்சேதம் விளைந்தது. போர்க்களத்தில் பதினையாயிரம் பேர் மாண்டும் காயப்பட்டும் கிடந்தனர். காயப்பட்டவர் களுக்குச் சிகிச்சை செய்ய ஒருசில வைத்தியரே இருந்த னர். தகுந்த காலத்தில் சிகிச்சை செய்யாமையால் பெருந் தொகையினர் இறந்தனர்.

தற்செயலாய் அவ்வழியாகச் சென்ற **ஹென்றி டியூனண்ட்** (Henry Dunant) என்னும் ஸ்விஸ்நாட்டு இளைஞர் ஒருவர், போர்க்களத்தில் காயப்பட்டவர்களின் அரற்றல்களையும் முனக்கங்களையும் வேதனைகளையும் கண்டு, உள்ளங் கசிந்துருகி, உடனே விரைந்து சென்று, ஓடிஓடி அவர்களுக்குக் காயங்களைக் கட்டியும், நீர் கொணர்ந்து கொடுத்தும், ஆறுதல் கூறியும் பலவகை யில் அவர்களைப் பராமரித்தார். பின், இப் பெருந்தொண் டிற்குத் தாம் ஒருவரே போதாமையால் அருகில் உள்ள ஓர் இத்தாலிய நகரிலிருந்து, இரக்கமுள்ள சில மாதரை அழைத்துவர, அவர்கள் பகை, நட்பு, அயல் என்று பாராமல், விரைந்து விரைந்து பணிசெய்து பல உயிர் களைக் காலன் கையினின்றும் மீட்டனர்.

இதன் பின்பு, ஹென்றி டியூனண்ட் போர்க்களங் களில் காயப்பட்டவர்களைத் தேச மத வேறுபாடின்றிப் பராமரிப்பதற்கு ஒரு சங்கம் ஏற்படின், மக்களின் மரண மும் வேதனையும் மிகத் தணியுமென்று ஒரு சுவடியின் மூலமாய் மக்கட் சமூகத்திற்கு வெளியிட்டார். அவர் வேண்டுகோட்படியும், ஜெனிவா நகரப் பெருமக்களின் முயற்சியினலும் 1864-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம்

22-ஆம் தேதி ஜெனிவாவில் ஒரு கூட்டம் கூடிற்று. அதில் பதினுன்கு தேசங்கள் கலந்து செஞ்சிலுவையுடன் படிக்கை (Red Cross Treaty) என்ருேர் உடன்படிக்கை செய்தன. போரில் காயப்பட்டவர்களைக் குணமாக்கு வதும், போர்ச்சிறையாளரை மீட்பதும் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைத் தொண்டுகளாகத் தீர்மானிக்கப் பட்டன. பல நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கங்களுக்கும் தலைமையாகச் சர்வதேசிய செஞ்சிலுவைக் குழு (International Red Cross Committee) என்று ஒரு சபை ஜெனிவாவில் நிறுவப்பட்டது. ஸ்விஸ் நாட்டாருக்குச் செய்யும் சிறப்பிற்கு அறிகுறியாக அந்நாட்டு அடையாளமே — வெண்புறத்தில் செஞ்சிலுவை — செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளமாக ஒப்புக்கொள்ளப் பட்டது. செஞ்சிலுவைச் சங்கத் தீர்மானங்கள் 1906-ஆம் ஆண்டு தி ஹேக் (The Hague) கில் மறுபார்வை யிடப் பெற்றன.

செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவில் ஏற்பட்டபின் பிற நாடுகளில் ஒவ்வொன்ருய்ப் பல கிளைகள் தோன்றின. துருக்கிய, எகிப்தியக் கிளைகள் செம்பிறையையும் (Red Crescent) பெர்சியக் கிளை செஞ்சூரியனையும் (Red Sun) அடையாளமாக வைத்துக் கொண்டன. செஞ்சிலுவைச் சங்கங்களைப்பற்றிப் பின்வருமாறு சில நியதிகள் உண்டு. ஒவ்வொரு கிளைச்சங்கமும் ஜெனிவாவில் பதிவு செய்யப்படவேண்டும்; எக்காலும் எவ்விடத்தும் தேச குல மத வேறுபாடின்றித் தொண்டு புரிதல்வேண்டும். போர்க்களத்தில் செஞ்சிலுவைப் படையின் இருக்கை, போர் செய்யும் இரு கட்சியார்க்கும் தூரத்திலேயே தெளிவாய்த் தெரியத்தக்க பெரிய அடையாளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வடையாளங்களைக் கண்டபின், எந்தக் கட்சியினரும் செஞ்சிலுவைப் படைக்கும் அதன் தொண்டிற்கும் எவ்வகைத் தீங்கும் செய்தல் கூடாது.

செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச சம்பந்தமாயிருப்பினும் ஜெனிவாச் சங்கம் தலைமையாகவும் பிறநாட்டுச்

சங்கங்கள் அதன் கிளைகளாகவும் கூறப்படினும், தலைமைச் சங்கத்திற்கும் கிளைச் சங்கங்கட்குமுள்ள தொடர்பு அன்புபற்றியதேயன்றி அதிகாரம் பற்றிய தன்று. ஜெனிவாவிலுள்ள சர்வதேசியக்குழு அங்கு அடிக்கடி நிகழும் கூட்ட நடவடிக்கைகளையும், புதுப் புதுத் தீர்மானங்களையும் அவ்வப்போது பிற நாட்டுச் சங்கங்களுக்கு அறிவித்துக் கொண்டே யிருக்கும்; சில ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜெனிவாவில் சர்வதேச சம்பந்தமான செஞ்சிலுவை மகாநாடொன்று கூடும். அதற்குப் பல தேசங்களிலிருந்து பிரதிநிதிகள் செல் வார்கள். சங்கம் முன்னேற்றம் பற்றிப் பல ஆலோசனை களும் தீர்மானங்களும் செய்யப்படும்.

போர்க்களங்களில் செஞ்சிலுவைப் படைகள் செய்து வரும் சிறந்த தொண்டுகளைக் கண்டபின், எல்லாத் தேசத்தாருக்கும் அவற்றின்மேற் சிறந்த அபிமானம் உண்டாயிருக்கின்றது. பகைவர், நட்பாளர் என்னும் இருதிறத்தாராலும் அவை மதிக்கப்படுகின்றன. அவற் றின் கொடிகள் நடுவு நிலைக்கும் பரோபகாரத்திற்கும் அடையாளமாகவும், காயப்பட்டவருக்கு ஆறுதலையும் குணத்தையும் அறிவிப்பனவாயுமிருக்கின்றன. செஞ் சிலுவைச் சங்கம் ஜெனிவாவில் ஏற்பட்டதிலிருந்து, அது மிகத் தேவையாயிருந்ததும், செயற்கரிய தொண்டு கள் செய்ததும், சென்ற ஐரோப்பியப் பெரும்போரில் அல்லாமல் வேறொன்றிலுமில்லை. போர் தொடங்கியதும் சில தேசங்களில் புதுக் கிளைகள் தோன்றின. திரள் திரளான மருத்துவ மாந்தரும் (Nurses and Doctors) சிகிச்சை வண்டிகளும் (Ambulance) வைத்தியசாலைச் சாமான்களும், கணக்கற்ற மருந்துகளும் பல தேசங் களிலுமிருந்து போர்க்களங்களுக்கு அனுப்பப்பட்டன. பல நாடுகளிலும் பொதுமக்களிடமிருந்து மாபெருந் தொகைகளாகப் பணம் தொகுக்கப்பெற்றது. பிரித் தானிய, அமெரிக்க, ஜெர்மானிய செஞ்சிலுவைச் சங்கங் கள் பலவிதத்தும் செய்த தொண்டுகளும் செலவிட்ட பொருள்களும் அளவிடற்கரியன.

போர் தொடங்கியதும் சர்வதேசிய செஞ்சிலுவைக் குழு ஜெனிவாவில் **சர்வதேசச் சிறையாளர் காப்புக் கழகம்** (International Prisoners of War Agency) ஒன்று ஏற்படுத்திற்று. அதன் தொண்டுகள் சேனைகளில் தப்பிப்போனவர்களைத் தேடுதல், சிறைப்பட்டவரையும் அடைக்கலப் பாளையங்களையும் (Internment Camps) போய்ச் சுற்றிப் பார்த்தல், ஜெனிவா உடன்படிக்கையை மீறிப் பகையையும் நட்பையும் தேசமத வேற்றுமைகளை யும் பார்க்கும் செஞ்சிலுவைப் படைகளைக் கண்டித்தல் முதலியன. போர் முடிந்தவுடன், சர்வதேசீய செஞ் சிலுவைக் குழு சிறைப்பட்டவர்களை அவரவர் நாட்டிற் கனுப்பல், இருநாட்டுச் சிறையாளரை மாற்றுவித்தல் (Exchange of Prisoners), பெருவாரி நோய்களை ஒழித்தல் முதலிய அரிய தொண்டுகளைச் செய்தது.

1918-ஆம் ஆண்டில் அமெரிக்க செஞ்சிலுவைப் படைத் தலைவரான **டேவிசன்** (H. P. Davison) என்பவ ரின் தூண்டுதலால், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் என்னும் ஐந்து நாட்டுச் செஞ் சிலுவைப் படைகளும் **ஐக்கிய செஞ்சிலுவைப் படை** (League of Red Cross Societies) என்றோர் சங்க மாகக் கூடின. 1922-ஆம் ஆண்டிலிருந்து அதன் தலைமை நிலையம் **பாரிஸில்** இருந்து வருகிறது. செஞ்சிலுவை யுள்ளிட்ட ஓர் **ஐம்முனை உடுக் குறி** (Star Mark) அதன் அடையாளமாகும்.

போர் முடிந்தபின், பாழ்பட்ட நாடுகளிற் சுகாதார நிலைகளை மீள அமைத்தல், முதற் சிகிச்சை (First Aid) செய்தல், பெருவாரி நோய்க் காப்பு, நோயாளரைச் சுகப் படுத்துதல், பூகம்பம், சுழல் காற்று, தீக்கோள் முதலிய துன்பங்களில் மக்களைக் காத்தல், நோயாளர்ப் பேணி களைப் (Nurses) பயிற்றல் முதலிய தொண்டுகளைச் சர்வ தேசீய செஞ்சிலுவைக்குழு செய்தது. இவையே போரில்லாக் காலங்களில் பொதுவாய்ச் செஞ்சிலுவைச் சங்கங்கள் செய்துவரும் தொண்டுகளாகும்.

செஞ்சிலுவைச் சங்கப் பொது நோக்கம் சர்வதேசீ

யத் தொண்டெனினும், சில கிளைச் சங்கங்கள் தேசிய மாகவே இருந்து வருன்கிறன. சென்ற இத்தாலிய எதியோப்பியப் போரில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் சென்று உதவவில்லை. ஏனென்ருல், இது தன் தொண்டு களை இந்தியாவிற்கே வரையறைப் படுத்தியுள்ளது. போரில்லாத காலங்களில், பிற கிளைச் சங்கங்களும் பெரும்பாலும் தத்தம் நாட்டிற்கே பயன்படுவனவாகும்.

**சிறு செஞ்சிலுவைச் சங்கம்** (Junior Red Cross Society): சென்ற ஐரோப்பியப் பெரும்போரில் செஞ் சிலுவைச் சங்கத்தினின்றும் சிறுவர்க்குரிய சிறு செஞ் சிலுவைச் சங்கம் கிளைத்தது. இது முதன் முதல் 1914-ஆம் ஆண்டில் வட அமெரிக்காவிலுள்ள கானடா தேசத்தில் **கியூபெக்** மாகாணத்தில் தோன்றிற்று. அங்குள்ள சிறுவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்துகொண்டு போரில் காயப்பட்டவர்களுக்குத் தங்களாலான உதவி களைச் செய்து வந்தனர். பின்பு இவ்வியக்கம் பிற நாடு களிலும் பரவ, இன்று உலக முழுவதிலும் ஐம்பதிற்கு மேற்பட்ட சிறுவர் செஞ்சிலுவைக் கிளைச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் இந்தியக்கிளை 1926-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமை நிலையம் புதுடெல்லி.

பெருஞ் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சிறு செஞ்சிலுவைச் சங்கம் தேச குல மத வேறுபாடற்றதும், தேசீய அரசாங்க சம்பந்தமில்லாததும் உலகப் பொது வானதுமானது. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் அல்லது கல்லூரியும் ஒரு சிறு செஞ்சிலுவைச் சங்கக்கிளையின் பிரிவாயிருக்கலாம். ஒவ்வொரு பிரிவும் ஒராண்டிற்குக் கட்டவேண்டிய கட்டணம், கல்லூரி அல்லது உயர்தரப் பாடசாலையானல் இரண்டு ரூபாய் என்றும், அதற்குத் தாழ்ந்ததானல் ஒரு ரூபாய் என்றும் விதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் உறுப்பினராயுள்ள மாணவர்க்குத் தலைவராய்ச் சில ஆசிரியர்கள் நியமிக்கப் பெறுகின்றனர். தற்சுகம் பேணல், பாடசாலையைத் துப்புரவாய் வைத்தல், பிற மாணவர்க்கு உதவல், நோயாளிகளைப் பராமரித்தல்

முதலிய விஷயங்களில் சிறு செஞ்சிலுவைச் சங்க மாணவர் பயிற்றப் படுகின்றனர். சுருங்கச் சொல்லின் சுகாதார வளர்ச்சி, பிறர் நலம் பேணல், உலக ஒற்றுமை யாக்கம் என்னும் மூன்றும் இச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

செஞ்சிலுவைச் சங்கங்களும், சிறு செஞ்சிலுவைச் சங்கங்களும் இதுவரை உலகத்திற்குச் செய்த நன்மைகள் அளவிறந்தனவாகும்.

இறைவனுக்கு மக்களிடத்துள்ள அன்பு வெளிப்படும் வகைகளில் செஞ்சிலுவைச் சங்கம் ஒன்றென்றே சொல்ல வேண்டும். ஆயினும், இத்துணை நன்மைகளும் விளையு மாறு விதை விதைத்துச் சென்ற **ஹென்றி டியூனண்டை** யன்றோ முழுப்புகழும் சாரும்? உலகிற்கு ஒருவர் செய்யும் உதவி எத்துணைப் பெரியதாயிருக்கக் கூடுமென்பதைச் செஞ்சிலுவைச் சங்க இயக்கம் தெற்றெனப் புலப்படுத்து கின்றது அன்றோ?

### அருஞ்சொற்பொருள்

பொருது - சண்டை செய்து, விளைந்தது - உண்டாயிற்று. திரள் - கூட்டம். உடுக்குறி - நட்சத்திர அடையாளம். தெற்றென - தெளிவாக.

### வினாக்கள்

1. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றிய வரலாற்றை வரைக.
2. செஞ்சிலுவைச் சங்கத்தின் அமைப்பு முறை யாது?
3. செஞ்சிலுவைச் சங்கங்களைப் பற்றிய நியதிகள் யாவை?
4. போர்க் காலங்களில் செஞ்சிலுவைப் படைகள் செய்துவரும் தொண்டுகள் யாவை?
5. ஐம்முனை உடுக்குறி அடையாளம் என்றால் என்ன?
6. போர் இல்லாக் காலங்களில் செஞ்சிலுவைச் சங்கம் செய்து வரும் தொண்டுகள் யாவை?
7. சிறு செஞ்சிலுவைச் சங்கம் எப்பொழுது எங்கு தோன்றியது?
8. சிறு செஞ்சிலுவைச் சங்கம் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

# 7. கௌசாம்பி மன்னன்

[திரு. எஸ். உருத்திரபதி, எம்.ஏ.]

## அங்கம் 3—முதற்களம்

இடம் : உச்சைனியின் அரண்மனை.

காலம் : காலை.

பாத்திரங்கள் : பிரச்சோதனன், சேனாதிபதி, சாலங்காயன்.

**பிரச்சோதனன் :** (தனக்குள்) என்னே! இந்நகர மாந்தர் நம் செல்வி வாசவதத்தையைப் பற்றியும் உதயணனைப் பற்றியும் அலர் தூற்றுகின்றனரே! இல்லாத செய்தி இவ்வாறு பரவுமோ! ஏதேனும் உண்மை இருக்குமோ! நம் மதி சான்ற சாலங்காயன், உதயணனிடம் வாசவதத்தையை ஒப்புவிக்கப் புறப்படு முன்பு தனது கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொன்னான். உண்மையிலேயே அவன் வரும் பொருள் உரைக்கும் மந்திரி தான். இக்காலத்தில் ஒரு யுவனும் யுவதியும் ஒருவருடன் ஒருவர் பேசுவதையோ, ஒருவரையொருவர் பார்ப்பதையோ கண்டாலே வீண் பழி சுமத்துவது உலக இயல்பன்றோ? ஒருகால் இம்முறையில் நம் தத்தையின் மீது நகரமாந்தர் அடாத பழி சுமத்துகின்றனரோ, என்னவோ! எல்லாவற்றிற்கும் நம் மந்திரி சாலங்காயனை வரவழைப்போம்.

[காவற்காரனை அழைத்து, சாலங்காயனை அழைத்துவரச் சொல்லுகின்றான், சாலங்காயனும் வந்து சேருகின்றான்.]

**சாலங்காயன் :** அரசரே, வணக்கம். என்ன நீங்கள் ஒரு மாதிரியாகக் காணப்படுகின்றீர்களே? உங்கள் உடம்பிற்கு ஏதேனும் அசௌக்கியமுண்டோ? அன்றி நமது அரசாங்கத்தில் ஏதேனும் குறை நேர்ந்து விட்டதா? அல்லது, நேற்று நடந்த நீர் விழாவில் எதிர் பாராத விபத்து ஏற்பட்டதா? முகவாட்டத்திற்குக் காரணம் என்ன? மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கு முள்ளத் துரவோராகிய நீங்கள், இன்ப துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும்

சமநோக்கமுடையவர்களாயிற்றே? அவ்வாறிருந்தும், இன்று இவ்வாறு மனம் வருந்தக் காரணம் என்னை கொல்?

**பிரச்சோதனன்:** சாலங்காயரே, நம் செல்வி உதயணனிடஞ்சென்று யாழ் பயின்று வருகின்ருளன்ருே? அது கொண்டு இவ்வூரார் அலர் தூற்றுகின்றனர். இருவரும் காதல் வயப்பட்டிருப்பதாகவும், உதயணன் வாசவதத்தையை அழைத்துப் போய்விடத் தீர்மானித்திருப்பதாகவும் ஜனங்கள் பேசிக்கொள்கிருர்களாம். நம் மந்திரி சிவதேவனும், ஏனைய உளவுக்காரர்களும் எனக்குத் தெரிவித்தார்கள். உமக்கு ஏதேனும் தெரியுமா?

**சாலங்காயன்:** வெற்றி வேந்தரே, அதைப் பற்றி அப்பொழுதே தெரிவித்தேன். நீங்கள் பிடிவாதமாகவும், என்னுடன் கலந்தாலோசிக்காமலும் செய்துவிட்டீர்கள். மந்திரி யூகி இறக்கவில்லையென்றும், அவன் நம் நகர்க்கண் இருந்து பேய்பிடித்தவன்போல் உதயணனுக்கு உதவி வருகின்ருனென்றும் உங்கட்கு முன்னரே தெரிவித்தேன். அவனுடன் இன்னும் பலர் மாறுவேடம் புனைந்து இந்நகரில் வருகின்றனர். அவர்களெல்லாம் சேர்ந்து கொண்டு ஏதேனும் சூழ்ச்சி புரியலாம். நாம் வஞ்சனையால் உதயணனைப் பிடித்து வந்த செய்தியைக் கேட்ட யூகி, பழிக்குப்பழி வாங்காமல் விடுவதில்லையென்றும், வஞ்சனையால் உதயணனைப் பிடித்துச் சென்றதற்காக அவனைத் தந்திரமாகச் சிறைமீட்பதல்லால் வாசவதத்தையையும் அவ்வாறே அழைத்துக் கொண்டு கௌசாம்பி சென்று மணம் முடித்து விடுவதாகவும் சபதம் செய்திருக்கின்ருனும். நேற்றிரவுதான் இச்செய்தி என் காதில் விழுந்தது. அதைக் கேட்டது முதல் எனக்கு மனச்சாந்தியில்லை. அதை உங்களிடம் இன்று காலையில் தெரிவிக்க வேண்டுமென்றிருந்தேன். அதற்குள் நீங்களே ஆள்விட்டனுப்பினீர்கள்.

**காவலன்:** மன்னர் மன்னரே, அமைச்சரே, உங்களிருவரையும் பார்க்க, நம் சேனைத் தலைவரும் சில வீரர்களும் அவசரமாய் வந்திருக்கிருர்கள்.

**பிரச்சோதனன் :** ஏ காவல, உடனே அவர்களை வரவிடு.

[காவலன் அவர்களை வரவிடுகிருன்.]

**சேனைத்தலைவர் :** மன்னவரேறே, மதிசால் அமைச்சரே, அடியேன் வணக்கம். உங்களாட்சியிலும் இப்படிப்பட்ட அநியாயம் நடக்குமா? இரும்பை எலி விழுங்குமா? குழந்தையைப் பருந்து தூக்கிச் செல்லுமா?

**பிரச்சோதனன் :** படைத்தலைவரே, நடந்த விஷயத்தை உடனே தெரிவியும்.

**சேனைத் தலைவர் :** அரசரே, அமைச்சரே, நேற்று நடந்த நீர்விழாவின்போது, மாலையில் இருட்டியபின்னர், யானை மதங்கொண்டு குழப்பத்தை உண்டுபண்ணிற்று. சிலவிடங்களில் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இக்குழப்பத்தில், ஜனங்கள் இங்குமங்கும் சிதறி, குய்யோ முறையோ என்று கதறிக்கொண்டு ஓடஆரம்பித்தார்கள். அப்போது உதயணனைச் சேர்ந்தவர் பலர் நமது யானை பத்திராபதியின் மேல் உதயணனும் வாசவதத்தையும் ஏறி ஓடிப்போக உதவினுர்கள். யானையின் காதில் ஏதோ ஒரு மந்திரத்தை ஒருவன் உபதேசித்தான். யானை மிகவும் விரைந்து செல்ல ஆரம்பித்தது. நாங்கள் தடுக்க முயன்ருேம். எங்களை நன்ருகப் புடைத்து விட்டார்கள். அங்கிருந்த மாறுவேடம் பூண்ட உதயணன் ஆட்கள் ஊமையர் போலவும், செவிடர் போலவும் நம் நகரத்தில் இருந்தவர்கள், தங்கள் மாறு வேடத்துக்குத் தக்கபடி பேசிச் சண்டையிட்டார்கள். வெகுநேரம் போராடியும் பயன்பட இல்லை. நமது சேனையில் பலர் மாண்டனர்.

**பிரச்சோதனன் :** என்னே! என்னே! நம் செல்வி வாசவதத்தையையா உதயணன் எடுத்துச் சென்ருன்? அடபாவி! யான் அவனை நம்பி அவனிடத்தில் என் மகளை யாழ் வாசிக்கவிட்டேனே! எனது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இல்லாமல் துரோகம் செய்தானே! அவனைச் சும்மா விடுவேனே! கௌசாம்பியின் மேல் படையெடுத்துச் செல்வோம். சாலங்காயரே, நீர் அன்று கூறினவெல்லாம் உண்மையாயின. நீரே புத்திசாலி. உம்மைக்

கலந்தாலோசிக்காமல் செய்தது என் தவறு. நமது பொய்யில் புலவர், “இடிப்பாரையில்லாத ஏமரா மன்னன், கெடுப்பா ரிலானுங்கெடும்” என்ற வாக்குப் பொய்க்குமோ? இடித்திடித்துப் புத்தி புகட்டும் அமைச்சர் இருந்தும், உம் அறிவைப் பயன்படுத்திக் கொள்ளாது போனது எனது தவறு. இதற்கென் செய்யலாம்? மாசற்ற நங் குலத்திற்குப் பெரும்பழி வந்துவிட்டதே!

**சாலங்காயன்:** அரசரே, உலகியல் அறிந்தே உங்களிடம் அப்பொழுது தத்தைக்கு உதயணன் ஆசானுக அமைவது பற்றி ஆட்சேபித்தேன். காரியம் மிஞ்சி விட்டது. அதைப் பற்றிப் பேசிப் பயனென்ன? நாம் உதயணன் திறை கட்டவில்லையென்ற காரணத்தால், காட்டில் மாயயானையைக் காட்டி, அவனைக் கட்டி, இங்குக் கொணர்ந்து சிறைப்படுத்தினேம். எனது யோசனையால் இப்படிச் செய்தோம். யூகியோ உதயணனுக்கு மந்திரி மாத்திரமல்லன்; இன்னுயிர்த் தோழனுமாவான். அவர் இருவரும் ஈருடல் ஒருயிர்போல வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, யூகி தன்மதி வன்மையால் மன்னனை மீட்டது மாத்திரமல்லாமல், வாசவதத்தையையும் எடுத்துச் சென்ருன். இதற்கினி வருந்துவதால் பயனில்லை; படையெடுத்துச் செல்வதாலும் பயனில்லை. நமது பண்டை நாகரிகத்தில், அகத்திணைத் துறைகளுள் உடன்போக்குத் துறை என்பதும் ஒன்று. அதன்படி உதயணன் செய்து விட்டான். நம் அரசிளங்குமரியின் முழுச் சம்மதத்தின் மேலேயே இது நடந்திருக்கும். ஆகவே, அதில் வருந்த வேண்டுவது ஒன்றுமில்லை. நம் குலத்துக்கு இதனுல் இழிவுமில்லை. அவனும் மாசறுகுலத்து வந்தோன்; மாண்புறு குலத்தினன்; குலத்தாலும் பிறப்பாலும் உயர்ந்தவன்தான். உதயணனைப் போன்ற உத்தமன் நம் பெண்ணுக்கு மணமகனுக வாய்த்தல் அரிதினும் அரிதே. ‘நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம், விதியின் பயனேபயன்’ என்றபடி இன்னருக்கு இன்னர்தான் வாழ்க்கைக்குரியவர் என்று நான்முகன் முற்கூட்டியே எழுதிவிடுகின்ருன். அவன் எழுத்தை மாற்ற எவரால்

முடியும்? அந்த வேதாவிற்கே முடியாது. ஆகவே, நமது குலக்கொடி தத்தை நல்ல இடத்திற்போய்ச் சேர்ந்ததற்கு நாம் மகிழவேண்டுமேயன்றி, வருந்துவதால் பயனில்லை.

**பிரச்சோதனன்** : மந்திரி, உம் அறிவுரைகள் என்னை அகமகிழச் செய்தன? நீர் இவ்வளவு கூர்த்த மதியினர் என்பது இன்றுதான் உணர்ந்தேன். உம் வார்த்தைகளால் ஒருவாறு மனந்தேறினேன். கௌசாம்பியில், வாசவதத்தைக்கு மணவினை நடக்குங்கால், யாம் அனைவரும் சென்று, அதை இன்பகரமாய் முடித்து வர வேண்டுமெனவும் நிச்சயித்தேன்.

**சாலங்காயன்** : அரசரே, உங்களது சமயோசித புத்திக்குச் சந்தோஷம்! உங்களைப் போன்ற தந்தைமார்கள் உலகில் வாய்ப்பதரிது; மலையின் உச்சியில் விளையும் நார்த்தங்காய் மலைமேலே இருந்து விடுவதில்லை; கடலில் விளையும் உப்புடன் கலந்தே தீரும். சந்தனம், அரைத்தால் தானே கமழும்? யாழ் எவ்வளவு அழகியதாக இருந்தபோதிலும், அதை மீட்ட ஒருவர் வேண்டுமல்லவா? ஆகவே, நம் செல்விக்குங் கண்ணிறைந்த கணவன் வேண்டும். அதிலும், உண்மையான காதல் மணம் மிகவும் உசிதம். தாய் தந்தையர்கள் தங்கள் இளங் கன்னியர்களை வற்புறுத்தி அவர்கள் முன்பின் அறியாத காளையர்களிடம் ஒப்பிக்கின்றார்கள். அத்தகைய மணத்தால் விளையுந் தீமைகள் யாம் அறிந்தவையே. ஆகவே, நீங்கள் உடனே மனந்தேறியதும் கௌசாம்பிக்குச் செல்வோமென்றதும் எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றன.

**பிரச்சோதனன்** : அமைச்சரே, நீர் சமாதானமாகக் கௌசாம்பி நகர்க்கிறைவனாகிய உதயணனுக்கு மிகவும் மரியாதையாக ஒரு திருமுகம் எழுதிக்கொண்டு வாரும். அதில் மணவினை நாளைக் குறித்து எழுத மறக்க வேண்டா. என்ன எழுத வேண்டுமென்பதைப் பற்றி உமக்கு யான் ஒன்றுங் கூறத் தேவையில்லை. ஆண்டிலும் அனுபவத்திலும், அறிவிலும் என்னைக் காட்டிலும் நீர் சிறந்தவர். ஆகவே, நீரே எழுதிக்கொண்டு வாரும். அதில் யான் கையொப்பமிடுகிறேன்.

**சாலங்காயன்:** அரசரே, அப்படியே ஆகட்டும். எழுதிக்கொண்டு வருகிறேன். உங்கள் கையொப்பமும் முத்திரையுமிட்ட பின்னர், கௌசாம்பிக்கு அனுப்புவோம். இன்ப துன்பத்தில் மனந்திரியாது இருத்தல் ஞானியின் இலக்கணமாகும். எல்லாம் ஈசன் செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. இவ்வுண்மைகள் தாம் நமது வாழ்வில் மகிழ்ச்சியும் சாந்தியும் உண்டு பண்ணும்.

[அரசனிடம் விடை பெற்றுச் சாலங்காயன் போய்விடுகின்ருன். மன்னனும் வேறு விஷயத்தில் கருத்தூன்றிச் சென்றுவிடுகின்ருன்.]

## இரண்டாம் களம்

**இடம்:** சயந்தி நகரம்.

**காலம்:** காலை.

**பாத்திரங்கள்:** உதயணன், பெருங்கணி, வள்ளுவன்.

**உதயணன்:** நகர மக்களே, நீங்களனைவரும் ஒரு முகமாக என்னையும் வாசவதத்தையையும் மனமுவந்து வரவேற்றமைக்கு மிகவும் மகிழ்கின்றேன்! உங்களனைவருக்கும் எனது நன்றியுரியதாகுக.

**நகரமக்கள்:** தெய்வயானையைத் தேடிப் பெறுவதற்காகச் சேனையின்றித் தனியே சென்று, பகைவனுற் பற்றப்பட்டு உச்சயினி சென்று வதிந்து, பகைவனை வென்று, அப் பகைவனுடைய செல்வப் புதல்வியைச் செங்கரம் பற்றி அழைத்துக் கொண்டுவந்த ஆண் சிங்கமே நெடிது வாழ்க! திருமால் மார்பைச் சார்ந்து, இன்புற்றிருக்கும் திருமகள் போல் எங்கள் அரசனைச் சார்ந்து இன்புறுதற்கு முற்பிறப்பில் தவஞ்செய்த புண்ணியப் பாவையே வாழ்க!

**உதயணன்:** நகரமக்களே, உங்கள் நன்மையை நாடி நாடாள்வதே எமது கடமை! உங்களை என் கண்களேபோலக் கவனிக்கிறேன். போய் வாருங்கள்.

[காவலாளியைக் கூப்பிடுகின்ருன்]

**காவலாளி:** வத்தவர் பெரும, ஏவலை எதிர்நோக்கி நிற்கின்றேன்.

**உதயணன் :** காவல, நீ சென்று பெருங்கணியை அழைத்து வா.

[சென்று பெருங்கணியைக் கூட்டி வருகின்றான்]

**பெருங்கணி :** அரசர் பெருமானே, வணக்கம். அவ்விடத்துக் கட்டளை என்னவோ! தெரிவித்தருள வேண்டுகிறேன்.

**உதயணன் :** பெருங்கணியே, நாம் வாசவதத்தை யைத் திருமணம் புரிதற்கேற்ற நன்னாளை ஆய்ந்தறி வித்தல் வேண்டும்.

**பெருங்கணி :** இறைவரே, இதோ, உங்கள் கட்ட ளைப்படி ஏற்றதொரு நாளை இப்பொழுதே தெரிவிக் கிறேன்.

[பஞ்சாங்கத்தைப் பார்த்து நல்ல நாளைக் குறிப்பிடுகின்றான்]

**உதயணன் :** காவல, வள்ளுவ முதுமகனை அழைத்து வா.

[வள்ளுவ முதுமகன் வருகிறான்]

**வள்ளுவன் :** மன்னர் மன்னரே, வணக்கம். உங்களுடைய கட்டளை யாதோ?

**உதயணன் :** வள்ளுவ, இற்றைக்கேழாநாள் எமக் கும் உச்சயினி நகர மன்னர் பிரச்சோதனர் மகள் வாசவ தத்தைக்கும் திருமணம் நடைபெறும் என்ற செய்தியை நகர மக்கட்குப் பறையறைவித்துத் தெரிவிப்பாயாக.

**வள்ளுவன் :** அரசர் பெருமானே, உத்திரவு. போய் வருகின்றேன். (யானை மீதிருந்து வீதிதோறும் சென்று மணமுரசறைந்து, நகரத்தாரெல்லோரும் அறி யும்படி) அரசர் வேல் வெற்றி பெற்று விளங்குக! பூமகள் பொருந்த; மண்மகள் மலிக; நகரத்தீர், நான் கூறுவன வற்றைக் கேளுங்கள். பாவச் செயல்களை நீக்கி திருவை யுடையீராய்ப் புகழ்பெற்று விளங்குங்கள்; பிரச்சோதன சக்ரவர்த்தியாரின் குலமகளாராகிய வாசவதத்தையாரை நம் அரசர் பெருமான் மணஞ்செய்யும் நாள் இற்றை ஏழாம் நாளாகும் (முரசறைகின்றான்).

[உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அதன் பிறகு உதயணனும் வாசவதத்தையும் அரண்

மனையில் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல், மிக்க அன்புடையவர்களாய் வாழ்ந்து வருவராயினர்.]

## அருஞ்சொற்பொருள்

அலர் தூற்றுதல் - பழியைப் பலரும் அறியச் சொல்லுதல். மதி சான்ற - அறிவு நிறைந்த. திணை - ஒழுக்கம். வேதா - பிரமன். கணி - சோதிடன்.

## வினாக்கள்

1. சாலங்காயன் அரசரை வணங்கி யாது கூறினான்?
2. சாலங்காயன் மன்னனிடம் முதல் நாள் இரவு அறிந்த செய்தியாகக் கூறியது யாது?
3. சேனைத் தலைவன் அரசனுக்குத் தெரிவித்த செய்தி யாது?
4. மகளைப் பிரிந்த மன்னனுக்குச் சாலங்காயன் கூறிய சமாதானம் யாது?
5. மன்னனின் சமயோசித புத்திக்கு மகிழ்ந்த சாலங்காயன் மன்னனிடம் கூறியதென்ன?
6. வள்ளுவன் மணமுரசறைந்து யாது கூறினன்?

# 8. கோவூர் கிழார்

**[வித்துவான் திரு. வீ. உலக வூழியனர்]**

பண்டைக் காலத்திலே தமிழ் நாட்டின்கண் வாழ்ந்த நல்லிசைப் புலவர், சான்ருேர் என அழைக்கப்பட்டனர். இவர் தம் தாய் நாட்டின்மீது பற்றுடையவர்; தமிழ் மொழியில் இயன்ற இலக்கண இலக்கியங்களிலும், இசை நாடகங்களிலும், கணிதம், சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளிலும் துறைபோகியவர் ; தாம் எண்ணிய எண்ணங்கள் எண்ணியாங்கு அமையச் செய்யுள் இயற்றும் திறமுடையவர். இச் செய்யுட்கள் செவியின் மாந்துகின்றவரை உவகை யாற்றில் திளைப்பித்து, அறுவகைச் சுவையை அறவே மறப்பித்து, எண்வகைச் சுவையைத் துய்ப்பிக்குந் திறத்தன ; செய்யுள் எனவும், தாம் எனவும் வேறுபாடின்றி அவையே தாமாய் அமர்விப்பன.

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த இப்புலவர் பெருமக்களுள் **கோவூர் கிழார்** ஒருவராவர். தாய் தந்தையர் இவருக்கு இட்ட பெயரை அறிதல் இக்காலத்து அரிதாயிற்று. தாம் வாழ்ந்த ஊர்ப் பெயராலும், பிறந்த வகுப்புப் பெயராலும் கோவூர் கிழார் என இவர் வழங்கப் பட்டனர். கோவூர் என்பது சோழநாட்டில் உள்ளதோர் ஊர். கிழவர் எனுஞ் சொல் கிழார் என மருவிற்று. இக் கால மாணவர் இகழ்ந்தொதுக்கும் தமிழ் இலக்கண நூலில் இவ்வழக்கினை அக்கால ஆசிரியர் மரூஉ எனக் கூறினர். கிழவர் எனுஞ் சொல் நிலத்தையுடையவராய் அதற்குரியர் எனப் பொருள்படுதலின் வேளாளரைக் குறிப்பதாயிற்று. எனவே, இவர் வேளாண் குடியில் பிறந்தவர் என்பது ஒருதலையாகும். இவர் நிலக் கிழவரா யிருந்து பலர்க்கும் வேளாண்மை செய்தாற் போலவே, புலக்கிழவராயிருந்து பலர்க்கும் உதவிபுரிந்தனர். ஈர நெஞ்சினர் ; வீரவாழ்வினர் ; பிறர் தம் வயப்படுமாறு நயப்பட உரைக்கும் நாவினர் ; குற்றங்கண்ட காலத்து நேர்மையான முறையில் அஞ்சாமல் எடுத்துரைத்து

அரசரையும் திருத்துகின்ற ஆற்றல் வாய்ந்தவர்; தமிழ் மொழியில் அழகொழுகும் பாக்கள் பலவற்றை யாத்தவர்.

சோழன் குராப் பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி ஆகிய அரசர்கள் இவர் காலத்தில் சோழநாட்டிற் செங்கோல் செலுத்தினர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சோழன் கரிகாற் பெருவளத்தானுடைய மகனுயிருத்தல் சாலும் எனவும், சோழன் நலங்கிள்ளியும், மாவளத் தானும் இவனுடைய தம்பிகள் எனவும், ஆசிரியர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கருதுகின்றனர். இம் மன்னர் பெருமானும், இவன் தம்பி சோழன் நலங் கிள்ளியும் கோவூர் கிழாரிடத்து சிறந்த மதிப்பும், அன்பும், வைத்திருந்தனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து செங்கோல் ஓச்சிக் கருங்கலி கடிந்தவன். இவன் இயற்பெயர் கிள்ளிவளவன் என்பது. இவன் சேரநாட்டுக் குளமுற்றம் என்னும் ஊரில் இறந்தானுதலால், பின்னர்க் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என அழைக்கப்பட்டான். இம் மன்னன் மீது சில பாக்கள் நம் கிழார் இயற்றியிருக்கின் றனர். அவற்றுள், இவனுடைய படை வலியையும், ஊற் றத்தையும், ஊக்கத்தையும் சிறப்பித்துக் கூறிய ஒரு செய்யுளின் உரைத்தொகுப்பு வருமாறு:

"காலத்தின் அதிதெய்வமாகிய காலக் கடவுளும் தொழில் ஒன்றனைச் செய்ய விரும்பினுல் அதற்குப் பொருத்தமான காலத்தையும் இடத்தையும் கருதி அமை யத்தை எதிர் பார்க்கும்; ஆனுல், நீ நினது படைவன்மை யால் அவற்றைக் கருதாமலே எக்காலத்தும், யாண்டும் ஏற்றம் வாய்ந்த மாற்றுரைத் தொலைத்துப் போரை வெல் கின்றவன்; அரசே! காற்றும் நெருப்புங் கலந்தாலொத்த வேகமும் வெந்திறலும் உடையையாய்ப் போரிலே ஊக்கத் தாற்றுக்கும் சோழ மன்ன! சினத்திற்குக் காரணமாகிய குற்றங்களை நின்பாற் செய்தவருடைய நாடு பெரும்

குழப்பமுடையதாயிருந்தது. அந்நாட்டில் எட்டுத் திசைகளிலும் எரிகொள்ளிகள் எரிந்து வீழ்ந்தன; பெரிய மரத்தினையுடைய வற்றிய நீண்ட கொம்புகள் இலையில்லாதனவாகி, இடுநெருப்பின்றியும் பற்றி எரிந்தன; வெப்பம் மிக்க சுடரினையுடைய சூரியன் பலவிடத்துஞ் செறிந்து தோன்றினன்; அஞ்சத்தக்க புட்கள் ஒலித்துப் பின்வருந் தீமையை உணர்த்தின. இத்தீய சகுனத்துடன் கூடிய உற்பாதங்கள் காணப்பட்டன. அன்றியும் அந்நாட்டு மக்களைப் பல தீய கனவுகள் அச்சுறுத்தின. வாய்ப் பற்கள் நிலத்து உதிர்ந்தன; தலைமயிரில் எண்ணெய் வார்க்கப்பட்டது; ஆண் பன்றியின் மேல் ஏறி ஊர்ந்தனர்; ஆடை களையப்பட்டு வெற்றரையாயினர்; எண்ணெய் பூசப்பட்டமையால் துருவேருத வெள்ளிய போர்ப்படைகள் தாமிருந்த கட்டிலுடனே கவிழ்ந்து வீழ்ந்தன. இப்படிப்பட்ட தீக் கனுக்களைக் கண்டவர்கள் பின் விழிப்பு நிலையில், வலியோய்! நீ வஞ்சிசூடி வருதலைக் கருதி, மனமயக்கங் கொண்டவராய்ப் பாதுகாவலற்ற இருப்பினராய் இருந்து வருந்துகின்றவர், தம் மக்களுடைய கண்ணில் முத்தங் கொடுத்தல் மூலமாகத் தம் வருத்தத்தை மனைவியர்க்குப் புலப்படுத்தாது மறைப்பாராயினர்.''

இங்குக் கூறிய பகுதியால் நம் புலவர் பெருமானுர், அரசனுடைய படைவலியையும், பகைவருடைய குழப்பத்தையும் நன்கு விளக்கிக் காட்டி யிருத்தல் நோக்கி இன்புறற்பாலது. உற்பாதங்களையும், தீக்கனுக்களையுந் தொகுத்துக் கூறியிருத்தலின் இவர் நிமித்த நூலினும், கனு நூலினும் வல்லவர் என்பது காண்க. வருத்த மிகுதி மனைவியர்க்குப் புலனுகாதவாறு மறைத்த உபாயத்தைக் கண்ணுடிபோல் விளக்கியது நம் மனத்திற்கு ஒரு வகை இன்ப உணர்ச்சியை எழுப்புகின்றதன்றே?

கிள்ளிவளவனுடைய பங்காளி நெடுங்கிள்ளி யென்பவன் ஒருவனிருந்தான். அம்மன்னனுக்கும், கிள்ளிவளவனுக்கும் மனப்பிடித்தம் இல்லாமை காரணமாகப் பகை மூண்டது. நெடுங்கிள்ளி சோழ நாட்டகத்து ஆவூரில் உறைந்தவன். கிள்ளிவளவன் ஆவூரை முற்றுகை

செய்யத் தன் தம்பி சோழன் நலங்கிள்ளியை அனுப்பினன். யாவரையும் பொருது வலங்கொள்ளும் மதுகையுடைய நலங்கிள்ளி பெரும்படையுடன் சென்று ஆவூரை முற்றினன். போர் பொருதற்கு வலியின்றிச் சோம்பி மடிந்து வாயிற் கதவடைத்து நெடுங்கிள்ளி வாளாவிருந்தான். பகையரசர் முற்றி யிருக்குங் காலத்தில் முற்றப்படும் அந்நகரத்தார் பஞ்சு படும்பாடு படுவர் என்பதனைக் கூறவேண்டா. ஆவூர் நகரத்தில் மக்களும் விலங்குகளும் அலக்கணுறுதலைச் செவியுற்றுக் கோவூர் கிழார் ஆண்டுச் சென்று நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறுகின்றவர் ஒரு பாட்டினுல் அவனுக்கு நீதி காட்டினர். அதன் உரைநடை வருமாறு :

"பகைவர் நெருங்குதற்கரிய வலிமையையுடைய குதிரை யூருந் தலைவ! இங்கு இதுபொழுது நடைபெறும் முற்றுகையாலும், கதவடைப்பாலும், அலமருகின்ற களிறுகள் பிடிக் கூட்டத்துடன் குளத்தில் நீராடில; நெல்லுச் சோற்றுருண்டை கொண்டில; நெய் மலிந்த கவளமுண்டில; பந்தியில் கட்டுத்தறிகளை ஒடிபடுமாறு அடித்து நிலத்தில் துதிக்கையைப் புரள விடுகின்றன; பெருமூச்செறிந்து இடி முழக்கம்போல் முழங்குகின்றன. தாய்மார் உணவுக்குறைவாலும், உள்ளக் கவலை மிகுதியாலும் பாலிலராக, பால் உண்ணப் பெருமல் கைக்குழவிகள் அலறுகின்றன; பூப்புனைதலில் இயல்பாகவே விருப்பமிக்க மகளிர், வெறுந்தலை முடிக்கின்றனர். அலங்கரித்த உத்தம மனைகளில் தண்ணீரில்லை, உண்ணீரில்லை என்னும் வருத்தக் கூப்பீடுகள் கேட்கப்படுகின்றன. இம் முழக்கத்தையும், அழுகையையும், கூப்பீட்டையும் கேட்டுக்கொண்டு வருத்தமில்லாமல் இவ்விடத்தில் நீ இனிது வாளா விருத்தல் நன்றன்று. ஐயோ! ஊர் படும்பாடு சொல்லுந் தரமன்று. நீ அறவழி யொழுகுவோயாகுல், "இவ்வூர் உன்னுடையதே; நீ கொள்க" என்று நலங்கிள்ளியோடு கூறி மதிற் கதவினைத் திறந்து விடுவாயாக. வீரவாழ்வு உடைமையை யாகுல் போர் பொருதவுடன் கதவினைத் திறப்பாயாக. இவ் வறத்தினையும்

மறத்தினையும் நீங்கியிருக்கின்றனே. திறக்கவும் அடைக்கவுமே கதவுகள் உள்ளன; அடைத்தற்கு மாத்திரம் கதவுகள் வேண்டா; அத்தொழிற்கு மதிலே சாலும். இதனை அறியாது திறவாதடைத்த திண்ணிலைக் கதவினுள் ஒரு பக்கத்தில் ஒதுங்கி உளம் ஒடுங்கி இருத்தல் யோசிக்கின் நாணந் தரும் செயலாயிருக்கின்றது.''

இவ்வமையத்தில், நெடுங்கிள்ளி மேற்கொள்ளுமாறு இருவகைச் செயல்களை யெடுத்துக்காட்டி, அவற்றுள் ஒன்றை அவன் விரைந்து மேற் கோடல் வேண்டும் என அறிவு கொளுத்துதலின் சிறப்புத்தான் என்னே! முற்றப்பட்ட அந்நகரத்துத் துன்பத்தினை நாடகம்போல் இழைத்துக் காட்டுகின்றனர்.

"அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒரு சிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.''

என, இவர் கூறிய பகுதியால் அச்சமென்பதனை அறியார் என்பதும், நாணம் உயிரினுஞ் சிறந்ததன்று என்னும் உறுதியுடையார் என்பதும் நாமுள்ளத் தக்கன.

பின்னர் நெடுங்கிள்ளி ஆவூரை விட்டொழித்து உறையூரில் வந்திருந்தான். அப்பொழுது புலவன் இளந்தத்தன் சோழன் நலங்கிள்ளிபாற் பரிசில் பெற்று, நெடுங்கிள்ளிபாற் பரிசில் பெறுதற்கு உறையூரை யடைந்தான். உளவறிதற்கு நலங்கிள்ளியால் அனுப்பப்பட்ட ஒற்றன் இவன் என, நெடுங்கிள்ளி தேராமற் றெளிந்து, அப்புலவனைக் கொல்லப் புகுந்தான். இதனை யறிந்த கோவூர் கிழார் அங்குப் போய், "ஐய! பழுத்த மரங்களை நாடிப் பறவை பறந்து செல்லுதல் போலப் புலவர் வள்ளல்களை யுள்ளி நீண்ட சுடுநிலங்களைத் தாண்டிச் சென்று, அவர்களைப் பாடிப் பரிசில் பெறுவர். பெற்ற தொகை சிறிதாயிருப்பினும் திருப்தியுற்றுச் சுற்றத்தாரை யருத்தித் தாமுந் துய்த்து, தமக்கென ஓம்பாமல், உள்ளங் கூம்பாமல் பிறர்க்குக் கொடுப்பர். ஆதலால், இரத்தற் றொழில் ஒன்றேயுடையர் அல்லர்; ஈதற்றொழில் உடைய

ராதலின் இகழப் படுதற்குரியர் அல்லர்; தாம் பெறுதற் குரிய வரிசைச் சிறப்பிலே குறிக்கோளுடையர் ஆதலின், மாறுகொண்டோர் நாணச் சென்று வீறு காண வென்று தலைநிமிர்ந்து ஒழுகும் வாழ்க்கையர்; பிறர்க்குத் தீங்கு கனவிலும் அறியார்; நிலமாளுந் திருவுடைய நும்மை ஒத்த செம்மையும் உடையவர். ஆதலின், புலவனாகிய இவன் ஒற்றனல்லன்; தீயனல்லன்; பரிசிலைத் தந்து அவனை அனுப்பி வைப்பீராக?'' எனப் பகர்ந்தனர். நெடுங்கிள்ளியும் அங்ஙனமே செய்தான். இங்குக் கூறிய வற்றால் இவர் புலவர்கள்பால் வைத்திருந்த மதிப்பினையும், அவர் தம் பண்பினை அளந்து கூறியிருத்தலையும் நாம் நன்கு அறிதல் கூடும்.

நெடுங்கிள்ளி இவ்வாறு உறையூரில் இருக்கும்போது, நலங்கிள்ளி அவ்வூரையும் முற்றுகை செய்தான். நெடுங் கிள்ளியோ முன்னர் ஆவூரில் இருந்தாங்கு இங்கும் கதவடைத்து வாளா இருந்தான். ஈண்டும் புலவர் பெரு மானார் சென்று, இருவரும் சண்டை ஒழிதல் வேண்டும் என்று ஒரு செய்யுளாற் கூறுகின்றார். அதன் உரை நடைப் பகுதி வருமாறு :

"சோழர் குடியிற் பிறந்த மன்னர்களே! நும் மிரு வரில் பெரிய பனையினுடைய தோட்டைச் சூடிய சேரர் ஒருவரும் இலர்; கரிய கிளைகளையுடைய வேப்பம் பூமாலை சூடிய தென்னவர் ஒருவருமிலர்; (ஒவ்வொருவரையும் பார்த்து) நின்னுடைய மாலையும் ஆத்திப் பூவாற் றொடுக் கப்பட்டதே; நின்னோடு போரைப் புரிவோனுடைய மாலையும் ஆத்தியாற் றொடுக்கப்பட்டதே; நீங்கள் இரு வீரும் சோழர் குடியிற்றோன்றினமையின் ஒருவீரே. நும்மிருவீருள் யாவரேனும் ஒருவீர் தோற்பீராயின் சோழர்குடி தோல்வியுற்றது எனும் வசைமொழி உலகில் நிலை நிற்குமே! 'யாம் இருவேமும் வெல்வேம்' என்பீ ராயின், ஒருவரையொருவர் பகைத்துப் பொருத போரின் முடிவில் இருவரும் வென்றதொரு வரலாறு யாண்டும் எக்காலத்தும் இன்மையின் நீவீர் இருவீரும் வெல்லுதல் யாங்ஙனம் அமைதல் கூடும்? அது கூடாதே; ஆதலால்;

இச்செய்கை நுங்குடிக்குத் தகுந்த ஒழுக்கமன்று; தீயொழுக்கமே. இதில் கொஞ்சமும் ஐயமில்லை. இம்மாறு பாட்டுப் போர் நும்மையொத்த முடியுடை மன்னராகிய தென்னவர்க்கும், சேரர்க்கும் பூரிப்பை விளைவிக்கும்; ஆதலால், போரையும் மாறுபாட்டையும் உடன் ஒழிவீராக'' என்பதாம்.

இனிய முறையில் இடித்துக் கூறிச் சந்து செய் விக்கும் இவரது மாட்சி,

> "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்."
> "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல்."

என்னுந் திருக்குறள்களை நினைப்பிக்கின்றது. சோழர் குடியாரிடத்து இவர் கொண்டிருந்த அன்பும், பற்றும் மதிப்பும் இவ்வாறு இடித்துக் கூறுதற்கு ஏதுவாயின.

நம் கிழார் இரக்கமே ஓருருக் கொண்டவர் என்பது முன்னர்க் காட்டப்படும் நிகழ்ச்சியினுற் புலனுகும். இப்புலவர் காலத்தில் மலையமான் திருமுடிக்காரி எனப் பெரிய வள்ளல் ஒருவன் இருந்தான். இவனுடைய ஊர் திருக்கோவலூர். இவ்வள்ளல் நெடுங்கிள்ளிக்குப் போரில் உதவி புரிந்தனன் போலும். இதனுல் சினந்த கிள்ளி வளவன் அவ்வள்ளலுடைய மக்களாகிய இளஞ்சிருரைப் பிடித்து யானைக் காலில் இடறுவிக்கத் தொடங்கினுன். இக்கொடுமையை யறிந்த புலவர் விரைந்து அவண் அடைந்து "அரசே! நீ புருவினுடைய பழங்கண்ணை யும், பசு முதலியவற்றின் புன்கண்ணையுந்துடைத்த சிபி, மனு முதலிய சோழ மன்னர்கள் சந்ததியில் வந்து தோன்றினுய். இக்குழந்தைகளோ அறிவால் உழுதுண் ணும் புலவர்க்கு இடுக்கண் செய்யும் வறுமைக்கு அஞ்சித் தம் பொருளை அவர்க்குப் பகுத்துக் கொடுத்து வாழ் கின்றவர் மக்கள்; கண்டார்க்கு அச்சந்தோன்ற அழிக்க வரும் யானையைக் கண்டும் இளமையால் அச்சமும் அழுகையும் நீங்கியவர்; சபையைப் பார்த்து புதிதாய் மிரண்டு வருந்துகின்றவர். யான் கூறிய இவற்றைக்

கேட்டாயாயின் நீ விரும்பியபடி நடந்து கொள்க.'' எனக் கூறி, அக் குழந்தைகளை உய்யக் கொண்டார். இச் செய்தி நாற்பத்தாறும் புறப்பாட்டால் அறியலாகும். சிபி, மனு முதலியவர்களின் வழித் தோன்றலாகிய நீ பகையை யறியாத பச்சிளங் குழந்தைகளை வதைசெய்யத் தொடங்குதல் நினக்குப் பெரும் பழியைத் தரும் எனவும், புலவரைப் புரக்கவும் வள்ளல் வழி வந்தவரைக் கொல்ல லால் எம்மனோர் தூற்றும் பழியை வழிவழி நனிமிகப் பெறுகுவை எனவும், ஆதலால் அத்தொழில் செய்யற்க எனவும் கூறி, மறலி வாயில் நின்று மக்களைப் பறித்த இவர் தம் சதுரப்பாடு இருந்தவாறு என்னே !

### அருஞ்சொற்பொருள்

மாந்துகின்றவரை - உண்ணுகின்றவரை. வேளாண்மை - உபகாரம். கருங்கலி - வறுமை. அமையத்தை - சமயத்தை. உற்பாதம் - பின்வரும் தீங்கை முன் அறிவிக்கும் அறிகுறி. மதுகை - வலிமை. அலக்கண் - துன்பம். கவளம் - ஒரு பிடியுணவு. சந்து - தூது. இடுக்கண் - துன் பம். மறலி - இயமன்.

### வினாக்கள்

1. கோவூர்கிழார் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய படைவலி முதலியவற்றை எவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்?
2. நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டகாலத்துக் கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்குக் கூறிய அறிவுரை யாது?
3. நெடுங்கிள்ளி இளந்தத்தன் என்ற புலவனைக் கொல்ல நினைக்கக் காரணம் என்ன? இதனை அறிந்த கோவூர்கிழார் என்ன செய்தார்?
4. நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இருந்த பகைமையைக் கோவூர்கிழார் களைந்ததை வரைக.
5. கோவூர்கிழார் இரக்கமுடையவர் என்பதற்கு ஒரு சான்று தருக.

# 9. சர். சி. வி. ராமன் ஒளி

[திரு. ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.]

ஒளி என்னும் சொல்லை இரண்டுவிதமான பொருள்களில் வழங்குவதுண்டு. ஒன்று, தண்ணீரிலே உண்டாகும் புலன் உணர்ச்சி. மற்றொன்று, புலனுக்கு விஷயமாகிய பொருள். பௌதிக இயலில் பெரும்பாலும் இந்த இரண்டாவது பொருளே கையாளப்பட்டு வருகின்றது. ஒரு பொருளிலிருந்து புறப்பட்டுவரும் ஒளி நமது கண்ணிலே படும்போது அப்பொருள் நமது கண்ணுக்குப் புலனாகிறது என்று சொல்லுகிறோம். பொருள்களில் சிலவற்றைச் சுயம்பிரகாசமான பொருள்கள் என்றும், மற்றவற்றைச் சுயம்பிரகாசமில்லாத பொருள்கள் என்றும் கூறுவது வழக்கம். அதன் கருத்து என்னவெனில், சுயம்பிரகாசமான பொருள்கள் தாமே வெளியிடும் ஒளியினால் புலப்படுகின்றன. மற்றப் பொருள்கள் அவைகளின் மீது விழும் ஒளியைச் சிதறச் செய்து, அவ்வாறு சிதறிய ஒளி நமது கண்ணிலே படுவதால் நமக்குப் புலனாகின்றன என்பதுதான். சூரியனிடமிருந்து வெப்பம் வெளிச்சம் ஆகிய இரண்டையும் நாம் பெறுகிறோம். இவை இரண்டும் கிரணங்களாகவே நம்மை வந்தடைகின்றன. இந்தக் கிரணங்களையெல்லாம் பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் ஈதர் (Ether) என்று சொல்லுவார்கள்.

குளத்திலே ஒரு கல்லை விட்டெறிந்தால், அது விழுந்த இடத்திலிருந்து அலைகள் தோன்றி நீர்ப்பரப்பு முழுவதும் பரவுகின்றதை எல்லோரும் பார்த்திருக்கலாம். சிறிது நேரத்திலே இவை அடங்கிவிடுகின்றன. ஆனால், ஒரு குச்சியைத் தண்ணீரில் அமிழ்த்தி அதை ஆட்டிக்கொண்டே இருந்தால், அலைகள் விடாமல் உண்டாகிப் பரவிக்கொண்டிருப்பதைக் காணலாம். தண்ணீர்ப் பரப்பின் மீது ஒரு சிறு நெட்டித் துண்டை மிதக்கவிட்டால், அதனடியில் அலைகள் செல்லும்போது அத்துண்டு மேலும் கீழுமாக ஆடுவதைக் காணலாம். அது தன்னிடத்தை

விட்டுச் சிறிதும் நகர்ந்து செல்வதில்லை யென்பதையும் பார்க்கலாம். இதனால், ஓர் உண்மை வெளிப்படுகிறது. அலைகள் நாற்புறமும் பரவிச் சென்றாலும் தண்ணீர் அவ்வாறு பரவி ஓடுகிறதில்லை என்பதும், ஒவ்வொரு நீர்த் துளியும் தானிருக்கும் இடத்திலேயே நின்றுகொண்டு, மேலும்கீழுமாக மட்டுமே ஆடுகின்றது என்பதுமே அவ்வுண்மையாம். ஒவ்வொரு துளியும் ஒரு விநாடியிலே இயற்றும் துடிப்புகளின் எண்ணிக்கையை அந்த அலையின் **அதிர்வு-எண்** (Frequency) என்று சொல்லுவார்கள்; நீர்ப்பரப்பில் ஒரேமாதிரியாகத் துடிக்கும் இரண்டு அடுத்துள்ள துளிகளிடப்பட்ட தூரத்தை அலையின் நீளம் என்று கொள்ளுவார்கள்.

மேற்கூறிய நீர் அலைகளைப் போல ஒளிக்கிரணங்களெல்லாம் விசும்பில் ஏற்பட்ட அலைகள் என்பதும், இவ்வலைகள் மின்காந்த இயல்பு வாய்ந்தனவென்பதும் காட்டப்பட்டன. தவிர, வெப்ப அலைகள், ரேடியோ அலைகள் (Radio waves) கிரணங்கள் எல்லாம் ஒளி அலைகளைப்போன்ற மின்காந்த அலைகளே என்பதும், அவைகளுக்குள்ள வேற்றுமை அலை நீளத்திலேற்பட்ட வேற்றுமையே ஒழிய வேறில்லை என்பதும் அறியப்பட்டன. இந்த மின்காந்த அலைகள் மாறாத ஒரே கதியோடு செல்லுகின்றன. இந்தக் கதி ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் ஆகும்.

சூரிய வெளிச்சத்திலே இருக்கும் ஒரு பொருளை முப்பட்டைக் கண்ணாடி வழியாகப் பார்த்தால், அப்பொருளின் விளிம்புகளிலே பல வர்ணங்கள் தோன்றுவதைப் பார்க்கலாம். அதிலே தோன்றும் நிறங்களின் வரிசை வானவில்லில் உள்ளதைப்போலிருக்கும். ஓர் இருண்ட அறையினுள்ளே ஒரு சிறு துவாரத்தின் வழியாகச் சூரியனது ஒளியைப் புகச்செய்து அந்த ஒளிக் கற்றையின் வழியிலே ஒரு முப்பட்டையையும் அதன்பின் ஒரு திரையையும் வைத்து, **நியூட்டன்** என்னும் பேரறிஞர் திரையின்மீது பலவேறு நிறங்களைக் கொண்டதொரு நீண்ட **நிறமாலையை** (Spectrum) முதன் முதலில்

அமைத்துக் காட்டினர். அம்மாலையின் ஒரு முனையில் செந்நிறமும், மற்றொரு முனையில் ஊதா நிறமும், அவற்றி னிடையே ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், அவரி முதலிய பல்வேறு நிறங்களும் தோன்றுவதைக் கண் டுணர்ந்தார்; அதாவது வெண்ணிறமான சாமானிய ஒளி பலவேறு நிறங்களைக் கொண்ட ஒளிகளின் சேர்க்கை என்பதைக் காட்டினர். இதிலிருந்து ஊதா முதல் சிவப்பு வரையில் உள்ள ஒளிமட்டுமே நம்முடைய கண்ணுக்குப் புலனாகின்றது என்பதை அறிகிறோம். இந்த இரண்டிற்கு மிடையிலுள்ள ஒவ்வோர் ஒளிக்கும் அதற்குத் தகுந்த 'அலை நீளம்' ஒன்றுண்டு என்பதை யறியலாம்.

சூரியன் உதயமாகும்போதும், அஸ்தமனமாகும் போதும் செந்நிறமாகத் தோன்றுவதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். இதன் காரணம் என்னவெனில், சூரியன் அவ்வாறு தாழ்ந்திருக்கும்பொழுது அதனுடைய கிரணங்கள் பூமிக்குச் சற்று உயரம் வரையில் வியாபித் திருக்கும் வாயுமண்டலத்தில் (Atmosphere) வெகு தூரம் வந்து நம்மை அடையவேண்டி யிருக்கிறது. அதன்பொருட்டு அதிலிருந்துவரும் வெண்ணிறமான ஒளி, வாயுமண்டலத்திலிருக்கும் துகள்களில் மோதுண்டு சிதறப்படுகிறது. வெண்ணிறமான ஒளியில் அடங்கி யுள்ள எல்லா வர்ண ஒளிகளும் ஒரே அளவாகச் சிதறப் படுவதில்லை. அவைகளில் செந்நிற ஒளியைத் தவிர மற்ற ஒளிகளனைத்தும் நாம் பார்க்கும் திசைக்கு அப்புற மாகச் சிதறப்படுவதால் நமக்குச் சூரியனுடைய பிம்பம் செந்நிறமாகத் தோன்றுகிறது என்பது அறியப்பட்டது. கடல் நீரும் ஆகாயமும் நீலநிறமாகத் தோன்றுவதும் இதே காரணம் பற்றித்தான். பிரதிபலித்தலை உண்டாக் கும் பொருள்களின் அளவைகள் ஒளி அலைகளின் நீளங் களைவிடப் பன்மடங்கு அதிகமாய் இருக்கும்பொழுது தான் சாதாரணப் பிரதிபலிக்கும் விதிகள் அனுசரிக்கப் படுகின்றன. ஒளி மிகச் சிறிய பொருள்களைத் தாக்கும் பொழுது பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் வேறுபடுகின்றன. எனவே, இதற்கு 'ஒளி முறிவு' எனப் பெயரிட்டார்கள்.

வாயு மண்டலத் துகள்களினுல்; முதலில் சூரியனுடைய ஒளியில் ஊதாப் பகுதியும், அவுரிப் பகுதியும் சிதறப் படுகின்றன. எஞ்சிய பகுதி மறுபடியும் சிதறப்பட்டு, நீலநிற ஒளியைத் தவிர மற்றெல்லா ஒளிகளும் நீக்கப் படுகின்றன. அதனுலேதான் ஆகாயம் நீல நிறமாகத் தோன்றுகிறது என்பது அறியப்பட்டது. வாயுமண்டலத் துகள்கள் அனைத்தும் பெரியனவாகவே இருக்குமானுல், வெண்ணிற ஒளியில் ஒரு மாறுதலும் உண்டாகாமல் ஆகாயம் வெண்ணிறமாகவே தோன்றும். நீர்ப்பரப்பில் ஆகாயம் பிரதிபலிப்பதால் கடல் நீர்க்கும் இந்நீலநிறம் ஏற்பட்டதென்று முதலில் கருதி வந்தார்கள். ஆனுல், கடல்நீர் ஆகாயத்தைப் பார்க்கிலும் அதிக நீல நிறத்துட னிருப்பதிலிருந்து இச்சமாதானம் உண்மையல்ல என் பதை உணர்ந்தார்கள். இங்கும் நீர்த் துகள்களில் ஒளி சிதறுண்டு நீலநிற ஒளிமட்டுமே நம்மை அடைகிறது என்பது அறியப்பட்டது.

இது சம்பந்தமாக **சர். சி. வி. ராமன்** கல்கத்தாவி லிருக்கும் சோதனைச் சாலையில் (Laboratory) சில வருஷங்கள் ஆராய்ச்சிகள் நடத்திவந்தார். அவ்வாறு செய்து வருகையில் 1928-ஆம் வருஷத்தில் ஓர் அதிசயத் தைக் கண்டுபிடித்தார். அதுபற்றி அவருடைய புகழ் உலகம் முழுவதும் பரவினதன்றி நம் நாட்டின் மதிப்பும் அயல் நாடுகளில் வெகுவாக உயர்ந்தது. அவர் அறிவு வளர்ச்சிக்குச் செய்த பேருதவி ஒருபுறமிருக்க, அடிமை யாய் இருந்த நம் நாட்டின் செல்வாக்கை உயர்த்தினதைத் தான் நாம் அதிகம் பாராட்டவேண்டும்.

ஒளி சில பொருள்களின் வழியாகத்தான் ஊடுருவிச் செல்லக்கூடும். இவை **ஒளி புகும்** (Transparent) பொருள்கள் எனப்படும். இராமன் ஓர் ஒளிபுகும் பொரு ளில் மிக்க பிரகாசமுள்ளதும், ஒரே அலைநீளம் கொண் டதுமான ஒளிக்கற்றை ஒன்றைப் புகவிட்டார். அவ் வாறு ஒளி புகுத்தப்பட்ட அப்பொருளிலிருந்து வரும் ஒளியைப் பரிசோதித்துப் பார்க்கையில் அது வேறு அலை நீளம் கொண்டிருப்பதைக் கண்டார்; அப்பொரு

ளின் மூலக் கூறுகள் தான் (Molecules) இந்த மாறுதலைச் செய்திருக்கவேண்டும் என்று அறிந்தார்; பன்முறை சோதனைகள் நடத்தித் தாம் கண்டதை உறுதிப்படுத்திக் கொண்டார். அவர் 1928-ஆம் வருஷம், மார்ச்சு மாதம், 16-ஆம் தேதியன்று பெங்களூரில் 'தென்னிந்திய ஸயன்ஸ் அஸோஸியேஷன்' மேடையில் பேசும்பொழுது இதை வெளியிட்டார். உடனே இச்செய்தி எங்கும் பரவிற்று. அமெரிக்க நாட்டிலுள்ள பிரபல விஞ்ஞானியாகிய 'ஆர். டபிள்யூ. உட்' என்பவர் முதன்முதலில் ராமன் கண்டுபிடித்ததைப் பரிசோதித்து, அது சரி என்று உலகத்துக்கு நிரூபித்துக் காட்டினார்.

இவ்வாறு ஒளி புகும் பொருளினால் உண்டாக்கப்பட்ட ஒளி, அப்பொருளைச் சார்ந்திருக்கின்றதென்பதும், எல்லாப் பொருள்களும் தத்தமக்குரிய ஒளியை உண்டு பண்ணுவதும் அறியப்பட்டன. அதாவது, இந்தப் புதிய ஒளி பொருள்களின் அறிகுறியாக இருப்பது தெரியலாயிற்று. அத்தகைய ஒளியை இவர் கண்டறிந்ததன் பொருட்டு அதற்கு 'ராமன் ஒளி' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்காக அவருக்கு 'நோபல் பரிசும்' தரப்பட்டது. பதார்த்தங்களின் மூலக்கூறுகளைப் பற்றிய விஷயங்களை அறிவதற்கு அவர் கண்டுபிடித்த ஒளி பெரிதும் பயன்பட்டு வருகின்றது.

### அருஞ்சொற்பொருள்

பிரபஞ்சம் - உலகம். விசும்பு - ஆகாயம். வாயு - காற்று.

### வினாக்கள்

1. 'ஒளி' என்பதற்கு வழங்கும் இரு பொருள்கள் யாவை?
2. 'ஈதர்' என்றால் என்ன?
3. தண்ணீர்ப் பரப்பில் நெட்டித் துண்டை மிதக்கவிடுவதன் மூலம் அறியப்படும் உண்மை யாது?
4. நியூட்டன் ஒளியைப்பற்றிக் கண்டறிந்த உண்மை யாது?
5. சூரியன் தோன்றும்போதும் மறையும்போதும் செந்நிறம் தோன்றக் காரணம் யாது?
6. 'ஒளிமுறிவு' என்பது யாது?
7. ஆகாயம் நீலநிறமாகவும் வெண்ணிறமாகவும் தோன்றக் காரணம் என்ன?
8. சர். சி. வி. ராமன் கண்டுபிடித்த அதிசயம் யாது? விளக்குக.

# 10. தமிழன் கண்ட மலேயா

[திரு. அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.]

மலாக்கா,
28–5–'48

அன்பின் அரசி,

நான் இன்று பகல் பத்தரை மணிக்கு மலாக்கா செல்லவேண்டும் என்று ஏற்பாடாகியிருந்தது. அந்த வழிப் பயணத்தைப்பற்றிச் சொல்லுமுன், சிங்கப்பூரைப் பற்றி மேலும் சில சொல்ல விரும்புகிறேன்.

**சிங்கப்பூரின் சிறப்பு:** சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் மிக முக்கியமானது. உலகம் சுற்றிப் பெரும் வாணிக வகையிலும், பிறவகையிலும் செல்லும் மேலைநாட்டுக் கப்பல்களும், கீழைநாட்டுக் கப்பல்களும் இத் துறைமுகத்தைத் தொட்ட பின்பே செல்லவேண்டும். நாள்தோறும் நூற்றுக்குக் குறையாத கப்பல்கள் இங்கு வந்து செல்லுமாம். மலேயா நாட்டின் தென்கோடியில் சிங்கப்பூர் ஒரு தனித் தீவாகவுள்ளது. ஆளும் முறையிலும் இன்னும் இது தனியாகவே அமைந்துள்ளது. சிறு சிறு குன்றுகள் இடை இடை விளங்க, பலப்பல கலங்கள் கரையிடை நிற்க, மிக அழகிய இயற்கைத் தோற்றத்தோடு காட்சி அளிக்கும் தீவு இது. போர்க்குரிய பெரிய கடற்படைத்தளம் இங்கு உண்டு. சாதாரண மக்கள் இறங்கும் துறைமுகத்திற்கு எதிர்ப் பக்கத்தில் பதினேழு கல் தொலைவில் தீவின் மறுபுறத்தே அக் கடற்படைத்தளம் அமைகின்றது.

*　　*　　*　　*

குழந்தாய், சிங்கப்பூர் உலக முக்கியமான இடமாதலால், இங்கு எல்லா நாட்டு மக்களும் வாழ்கின்றனர். எனினும் சீனர் பெரும்பாலராக இருக்கின்றனர். அதற்கடுத்தபடியாக இந்தியர் உள்ளனர். சிங்கப்பூரில் பத்து லட்சம் மக்கள் வாழ்கின்றார்களாம். அறுபதினுயிரம் தமிழர் அங்கு உள்ளனர். விளம்பரப் பலகைகளைப் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், சீன மொழியிலும்தான்

காண்கின்றேன். சிற்சில இடங்களில் தமிழ்ப் பலகைகள் தெரிகின்றன. முஸ்லிம்களும் பெரும்பாலராக வாழ்கின்றனர். பெரு வாணிகத் தலமாதலால் எங்கும் கடைத் தெருக்கள் காட்சி அளிக்கின்றன. இராப்பகல் மூடாத பல கடைகள் உண்டாம். இங்கு மக்கள் வசதிக்காகச் செல்லும் 'பஸ்' முதலியன இரவு ஒரு மணிவரை ஓடுமாம். சென்னையில் ஒன்பது மணிக்குமேல் அவை ஓடா என்பது உனக்குத் தெரியுமே! இந்த நிலை, இவ்வூர் இரவிலும் ஓய்வற்ற பேரூர் என்பதை விளக்கவில்லையா! தெருக்கள் மிகத் தூய்மையாகப் பாதுகாக்கப்படுகின்றன. மக்கள் வாழ்வும் நலத்துறைவகையில் செம்மைப் படுத்தப்பட்டுத் தான் இருக்கிறது. உயரிய கட்டடங்கள் நகரை அணி செய்கின்றன. ஓய்வற்ற உயரிய நகராக இஃது அமைகின்றது. மேலைக் கீழை நாடுகளை இணைக்கும் ஓர் இணைப்பிடமாக இஃது அமைகின்றது என்பது பொருந்தும்.

**நகர அமைப்புக்கள் :** சிங்கப்பூர் மட்டும் அல்லாது மலேயாவில் உள்ள அத்தனை ஊர்களும் மிகத் தூய்மை யாகத்தான் பாதுகாக்கப்படுமாம். நகரில் மாட்டு வண்டி களும், குதிரை வண்டிகளும் காணவில்லை. காரணம் அறிய விரும்பினேன். மோட்டார்கள் மிக்கிருத்தலால் பிற வண்டிகள் தேவை இல்லை என்பது ஒன்று. மற்றும் நகர நலம் கெடாவகையில் பசு, மாடு முதலியவற்றை ஊர்ப்புறத்தேதான் வைத்துக்கொள்ள வேண்டும் என்றனர்கள். சில பேரூர்களில் நகர எல்லைக்கு ஐந்துகல் தொலைவிலும் கால்நடைகள் இருக்குமாம். அவை உலவுவதாலும், சாணம் முதலியவற்றாலும் நகர நலம் கெடும் என்பதை அறிந்து, அவற்றைச் சேர்க்காது, நகரத்தை அழகிய முறையில் காக்கின்றனர்கள். சொந்தப் பசு வைத்துக் கொள்ள விரும்புகின்றவரும் நகரில் வைத்துக்கொள்ளக் கூடாதாம். வெளியே வைத்துத்தான் பாலைமாத்திரம் கொண்டுவர வேண்டுமாம். சென்னை நகரிலே—நம் தலை நகரிலே—மனிதன் வீட்டுக்கும், மாட்டுக் கொட்டிலுக்கும் வேறுபாடுகாணாத நமக்கு இது வியப்பாகத் தோன்ற

வில்லையா ! இதுமட்டும் அல்லாது இன்னும் எத்தனையோ வகைகளில் நகரங்கள் நலத்துறை, குடிநீர், கல்வி, போக்கு வரத்து ஆகிய பலவகைகளில் நம் நாட்டினும் நன்கு ஓம்பப்படுகின்றன. அவைகளைப்பற்றி வாய்ப்பு நேரு மிடந்தோறும் விவரமாக வரைவேன்.

**வண்டி வசதியும் சாலை நலனும்** : அருமைச் செல்வி! மற்றும் இத்தகைய அரும்பெரும் நகரிடை நான் நம் நாட்டுக்குப் புறப்படுமுன், இன்னும் இரண்டு மூன்று முறை தங்குவேன் ; இன்னும் எழுதவேண்டி இருப்பின், அப்பொழுது எழுதுவேன். நான் பகல் பத்தரைமணிக்கு மலாக்காவுக்கு பஸ்ஸில் புறப்பட்டேன்.

* * * *

பத்தரை மணிக்குப் புறப்பட்ட பஸ் சிங்கப்பூரின் பல தெருக்களையும் தாண்டி மலேயாப் பெருநிலத்தில் புகுந்தது. நகர நலங்கண்ட நான், பஸ்ஸில் இருந்த படியே மலேயா நாட்டுப்புற நலங்களைக் கண்டேன். எப்புறம் நோக்கினும் பசுமை காட்சியளித்தது. நான் புறப்பட்டபொழுது நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. மழை பெய்வதும் விடுவதும் இந்நாட்டில் அடிக்கடி காணக்கூடிய ஒன்றாகும். இங்கு மழைக்காலம் என்று ஒன்று இல்லையாம். ஆண்டு முழுவதும் மழை இருக்கு மாம். நான் மலாக்கா செல்வதற்குள் பலமுறை மழை வந்து வந்து சென்றது. எங்கும் இயற்கைநலம் காட்சி அளித்தது. சாலைகள் மிக்க அழகாகச் செப்பனிடப்பட் டிருந்தன. 160 கல் தொலைவு அந்த வண்டியில் வந்தும் அசதி சிறிதும் தெரியவில்லை என்றால், சாலை நலத்தை எண்ணிப்பார். 40 கல் தொலையுள்ள காஞ்சீபுரத்தி லிருந்து சென்னை வருவதற்குள் நாம் எவ்வளவு அசதி பெறுகின்றோம் ! அதை இங்கு நினைத்தாலும் அச்சம் எழுகின்றது. வண்டி மிக்க விரைவாக வந்தது. இந்தச் சாலைகளை எண்ணும் காலத்து ஒருபுறம் மகிழ்ந்தேன் ; ஆனால் ஒருபுறம் வருத்தமுற்றேன். இத்தகைய அழகிய சாலைகளை ஆக்கித் தந்தவன் யார் என நினைக்கிறாய் ? மலாய் நாட்டுக்காரனா ? சீனனா ? ஆங்கிலேயனா ? இல்லை.

நம் அருமைத் தமிழன் கைதான் இந்தச் சாலைகளை அமைத்தன. பிறந்த நாட்டில் வாழ வகை இழந்த தமிழன் நாடோடியாய் இங்கு வந்து வயிற்றை வளர்க்க வழி கண்டான். அவன் அரும்பெரும் உழைப்புத்தான் மலேயாவைச் செல்வ நாடாக மகிழ்விக்கின்றது. எத்தனை தமிழ்த் தாய்மார்கள் கல்லுடைத்திருப்பார்கள்! வரம்பு கட்டியிருப்பார்கள்! அவர்கள் உழைப்பெல்லாம் நம் நாட்டிற்குப் பயன்பட்டிருந்தால் எவ்வளவு நலமாக இருந்திருக்கும்! ஆனால் அன்றைய ஆளவந்தார்கள் அதை எண்ணவில்லை. இன்று வந்தவராவது இதை எண்ணி, இனித் தமிழ் மக்களைக் கூலியாட்களாகப் பிற நாடுகளுக்கு அனுப்பாதிருப்பார்களாயின் நாடு உயரும்; நாம் உயர்வோம்.

அரசி! இப்படிக் கைவருந்தி உழைத்த தமிழன் இன்னும் இங்கு உயரவில்லை. ரப்பர்த் தோட்டங்களில் கூலியாளராக வேலை பார்ப்பவருட் பெரும்பாலர் தமிழரே யாவர். இதை எண்ண உண்மையில் உள்ளம் நைகின்றது. அவன் இட்ட சாலையில் அன்னிய நாட்டார் மோட்டார்களில் ஆடாது அசையாது அழகாகச் செல்லுகின்றனர். ஆனால் சாலை அமைத்த தமிழன் அன்றைய நிலையிலேயே இருக்கிறான். தமிழன் செப்பனிட்ட அந்தச் சாலையில் செல்லுங்கால் என் சிந்தையில் பல எண்ணங்கள் வந்துவந்து சென்றன. 'தமிழா, உன்கதி இதுவா! பிறர்க்கு உழைத்தும் ஓட்டாண்டியாக வாழவா நீ பிறந்தாய்!'' என்றது என் நா.

* * *

உழைத்துப் பாடுபடும் பாட்டாளி மக்கள் சாலை இருமருங்கிலும் சாதாரண வீடுகள் அமைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள். அவர்கள் வீடுகளுக்குக் காற்றோடப் பலகணி உண்டு. இயற்கைச் சோலைகளின் நடுவிலே—பறவைகளின் இனிய ஒலிகளின் இடையிலே—இந்நாட்டுப் பழங்குடி மக்கள்—உழைப்பாளிகள்—பயமற்று, கொண்டதை மன நிறைவால் ஏற்று வாழ்க்கை நடத்துகின்றார்கள். அம்மம்மா! ஒய்வற்ற சிங்கப்பூர்த் தெருக்

களுக்கும் இந்நாட்டுப் புறங்களுக்கும்தான் எத்தனை வேற்றுமை! இவற்றை எல்லாம் எனக்கு இயற்கை அன்னை எடுத்து விளக்கிக் கொண்டே வந்தாள். நான் கண்ணும் இமைக்காது அவள் காட்டிய காட்சிகளையும் உணர்த்திய பாடங்களையும் கண்டும் அறிந்தும் வந்தேன். சாலையின் இருமருங்கிலும் உயர்ந்த ரப்பர்த் தோட்டங்கள் காட்சி அளித்தன.

* * *

**வீட்டு அமைப்பு**: வழியிடைக் கண்ட தோட்ட வீடுகளாம் நாட்டு வீடுகள் புதுமையாக இருந்தன; வீடுகள் எல்லாம் மரத்தால் ஆகியவை. நிலம் பெரும்பாலும் சதுப்பாக இருந்ததால், ஆழ்ந்த கடைக்கால் இட்டு வீடு கட்ட முடியாது போலும்! அடியில் மரத்தால் ஆகிய கால்கள் நட்டு, இடத்திற்கு ஏற்றபடி இரண்டோ, மூன்றோ, நான்கோ அடிகள் விட்டுப் பின்பு தரை, சுவர் முதலானவற்றை இட்டு, மேலே தகரத்தாலோ அன்றி அதே மரத்தாலோ அன்றி ஓலையாலோ கூரை வேய்ந்த வீடுகளே எங்கும் காணப்பட்டன. அவை மிக எளிய வீடுகள்தாம். சில வீடுகள் தென்னை போன்ற ஒருவகை ஓலையால் வேயப்பட்டிருந்தன. நகரத்தில் கண்ட ஆடம்பர வாழ்க்கை இங்கெல்லாம் காணப்படவில்லை; மக்கள் சாதாரண முறையிலேயே காணப்பட்டனர். சில இடங்களில் ரப்பர்த் தோட்டங்களோடு பல தென்னஞ் சோலைகளும் காணப்பட்டன. மலாக்கா நெருங்க நெருங்கத்தான் தென்னஞ் சோலைகள் மிகுதியாக இருந்தன. தேங்காய்கள் மிகப் பெரியன. நம் நாட்டில் இவ்வளவு பெரிய தேங்காய்களைக் காணுதல் முடியாது. இங்கு உரித்த காய்கள் அங்கு மட்டையோடு கூடிய காய்களின் அளவு இருக்கும்.

வழி நெடுகப் பல இயற்கைக் காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவர நூற்று அறுபது கல் தாண்டி ஜோகூர், மூவார், பத்துப்பகார் முதலிய ஊர்களை எல்லாம் கடந்து, மாலை ஐந்து மணிக்கு மலாக்கா வந்து சேர்ந்தேன். வழி

யில் ஓரிடத்தில் 'சன்மார்க்கத் தமிழ்ப் பாடசாலை' என்ற தமிழ்ப் பள்ளிக்கூடம் இருப்பதை அங்கு மாட்டியிருந்த பலகையால் அறிந்தேன்.

### அருஞ்சொற்பொருள்

குன்றுகள் - மலைகள். அணி - அழகு. நலத்துறை - சுகாதாரத் துறை. ஓம்பப்படுகின்றன - பாதுகாக்கப்படுகின்றன. பலகணி - சன்னல். கடைக்கால் - அஸ்திவாரம்.

### வினாக்கள்

1. சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் மிகவும் முக்கியமானது—எதனால்?

2. சிங்கப்பூரில் வாழ்பவர் யாவர்?

3. மலேயா நாட்டு நகரங்கள் தூய்மையாக இருப்பதற்குரிய காரணங்கள் யாவை?

4. 'தமிழா, உன் கதி இதுவா!' என்று ஆசிரியர் வருந்தக் காரணம் யாது?

5. மலேயாவிலுள்ள வீட்டு அமைப்பு எவ்வாறிருந்தது?

# 11. கூட்டுறவு இயக்கம்

[திரு. அ. முத்தையா, எம். ஏ.]

## கூட்டுறவின் தன்மை

'கூட்டுறவு' என்னும் சொல் சாதாரணமாகப் பலர் ஒன்று சேர்ந்திருத்தல் அல்லது பலரின் சம்பந்தம் என்னும் பொருளில் உபயோகிக்கப்படுகிறது. சில ஆண்டுகளாகப் பொருளாதாரத் துறையில் அது ஒரு குறித்த பொருளில் வழங்கப்படுகிறது. கூட்டுறவு என்பது, இவ்வாறு குழூஉக்குறியாக வழங்கும்போது, பலர் ஒரு குறித்த பயன் கருதி ஒன்று சேர்ந்து பொருள் முயற்சியில் ஈடுபடுதல் என்ற அர்த்தத்தைக் கொண்டு நிற்கின்றது.

நமது தமிழ் நாட்டிலே பற்பல இடங்களில் கூட்டுறவுப் பண்டகசாலைகளையும், கூட்டுறவு நிதி நிலையங்களையும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும், இன்னும் பலவகையான கூட்டுறவு ஸ்தாபனங்களையும் காண்கின்றோம். இவை எல்லாம் ஒரே அடிப்படையான தத்துவங்களைக் கொண்டவை. வாழ்க்கை நலத்திற்குச் சாதனமாகக் கொண்ட ஒரு பொருளாதாரத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களே அப்பல்வகைக் கூட்டுறவு ஸ்தாபனங்களும் ஆகும்.

இப்போதுள்ள பொருளாதார அமைப்பில், சமூகத்தைப் பொறுத்தவரையில், அநேகம் குறைபாடுகள் காணப்படுகின்றன. முதலாளித்துவம் தலையெடுத்த காலமுதல், ஒரு சிலர் எல்லாச் சுகங்களையும் அநுபவித்திருக்க, அநேகர் வயிற்றை நிரப்பிக்கொள்வதற்காகவே அல்லும் பகலும் உழைக்க வேண்டியிருக்கிறது. சமூகத்திலே ஒரு சிலர் ஓர் உழைப்பும் இன்றி ஏராளமான இலாபத்தைப் பெறுகின்றனர். பண ஆதிக்கம் ஓங்க ஓங்கப் பல்லாயிரமக்கள் சிறகிழந்த பறவைகளைப் போலச் சக்தியை இழந்து சமூகத்திலே வாழ நிற்கின்றனர்கள்.

இக் குறைபாடுகளை யெல்லாம் நீக்கி, மக்கள் சிறந்த

வாழ்வை எய்துதற்குற்ற துணையாக இருப்பது இக் கூட்டுறவு இயக்கமாகும். கூட்டுறவு இயக்கத்தின் அடிப் படையான தத்துவம், 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதாம். கூட்டுறவு இயக்கத்தின் நோக்கப்படி ஒவ் வொருவரும் பலருக்கும் பயன்படவேண்டும்; பலரும் ஒவ்வொருவருக்கும் உதவியாக இருக்க வேண்டும். 'பல செத்தை சேர்ந்தால் ஒரு கத்தை' என்று கூறுவதுபோல், பலர் ஒன்று கூடினுல், அசாத்தியமான பல காரியங்களைக் கூடச் செய்து முடித்துவிடலாம் என்பதை இக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வெள்ளிடை மலை போலக் காட்டுகின்றன.

சமூகத்தின் பொருளாதார வாழ்வில் பல மாறுதல் களை உண்டாக்கி, சமூகத்தையே திருத்தி அமைக்கக் கூடிய சக்தி வாய்ந்தது இக்கூட்டுறவு இயக்கமாகும். சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும் முதலாளித்தனமே முன் நிற்கிறது. அதை மாற்றிக் கூட்டுறவு முறையில் சமூகத்தின் எல்லாக் காரியங்களையும் நடத்தினுல் சமூ கத்தின் நிலைமையே முற்றிலும் மாறிவிடும்; சமூகத்தில் இப்போதுள்ள பசி, பிணி, மிடி முதலியவை நீங்கிவிடும்; சமூகம் சிறப்புடையதாகும்; மக்கள் தன்னுணர்ச்சி பெறுவார்கள்; தன் மதிப்பை அறிவார்கள்; சுகமான வாழ்க்கையை நடத்துவார்கள்.

பொருளாதார உலகில் ஒவ்வொரு முறையிலும் கூட் டுறவுக் கொள்கைகளைப் புகுத்தலாம்.

முதலாவதாகப் பொருள் உற்பத்தியை எடுத்துக் கொள்ளவும்; பணமுள்ள ஒரு சிலர் தொழிற்சாலையை ஏற்படுத்தி, பொருள்களை உற்பத்தி செய்கிருர்கள். பொருள் செய்வோரான தொழிலாளிகட்கு ஒரு சிறு ஊதியமே கூலியாகக் கிடைக்கிறது. பொருள்களை விற்று வரும் திரண்ட இலாபங்கள், முதலாளிகளான ஒரு சில ருக்கே போய்ச் சேருகின்றன. உழைப்பாளிகட்கு ஒரு சிறிதும், முதலாளிகட்கு முழுவதும் போய்ச் சேரும் இம் முறையைவிட, உழைப்பாளிகளான தொழிலாளிகட்கே முழு இலாபமும் போய்ச் சேரக்கூடிய ஓர் அமைப்பு உண்டானுல், அதனுல் பல்லாயிரக்கணக்கான மக்கள்

சுகம் அடைவார்கள் அல்லவா? அப்படிப்பட்ட ஸ்தாபனத்தை ஏற்படுத்த உதவியாயிருப்பதே கூட்டுறவு இயக்கமாகும். தொழிலாளர்களே தொழிற்சாலை ஒன்றினை ஏற்படுத்திப் பண்டங்களைச் செய்து விற்று இலாபத்தைத் தங்களிடையே பகிர்ந்து கொள்வார்களானால், அது எவ்வளவு நன்ருக இருக்கும்! அந்த முறையைக் கற்பிப்பதே கூட்டுறவு இயக்கமாகும்.

அடுத்தபடியாக வியாபாரத்தை எடுத்துக்கொள்வோம்: பணம் போட்டுச் சிரமப்பட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்வார் ஒரு சாரார். அவைகளைப் பணம் கொடுத்து வாங்கி உபயோகிப்பவர் மற்ருெரு சாரார். இவர்கள் இருவருக்கும் இடையே வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் இருக்கின்ருர்கள். அவர்கள் ஒரு சிரமமுமின்றி இந்தப் பக்கம் வாங்கி அந்தப் பக்கம் விற்று விசேஷ இலாபத்தை அடைகிருர்கள். பண்டங்களை வாங்கி உபயோகிப்பவர்கள் தாங்கள் நேராகவே பண்ட உற்பத்தி செய்வோரிடம் வாங்காமல் வியாபாரிகள் மூலம் வாங்குவதால் பண்டங்கட்கு அதிக விலை கொடுக்கவேண்டி இருக்கிறது. அதை விட்டுப் பண்டங்களை வாங்க விரும்புகிறவர்கள் நேரே, பண்ட உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கினுல் இலாபம் கிடைக்குமல்லவா? அந்த ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டவைகளே கூட்டுறவுப் பண்டகசாலைகளாகும்.

உலகத்திலே பல பாகங்களிலும் தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கினுல் கடு வட்டியே கொடுக்கவேண்டி நேரிடுகிறது. கடு வட்டிக்குக் கடன் வாங்குவதால் பல வகைத் தொல்லைகளும் உண்டாகின்றன. பெரும்பாலும் தனிப்பட்ட லேவாதேவிக்காரரிடம் ஒரு முறை கடன் வாங்குவோர் பிறகு கடனிலிருந்து மீளுவது துர்லபம். இப்போதைய சமூக அமைப்பின் நிலையைக் கவனிக்கும் போது, ஓரளவு கடன் வாங்காது, பல இலாபகரமான காரியங்களைச் செய்ய முடியாது என்பது புலனுகும். பயனுள்ள காரியங்கட்குச் செலவிடுவதற்குப் பணம் வேண்டுமானுல் ஒவ்வொருவரும் தத்தம் சொந்தப்

பொறுப்பில் கடன் வாங்குவதை விடப் பலர் ஒன்று சேர்ந்து வாங்கிக் கொடுத்து வந்தால், சொற்ப வட்டிக்குப் பணம் கிடைக்கும். அந்தக் கொள்கையைக் கொண்டதே கூட்டுறவு பாங்குகளாகும். அவை குறைந்த வட்டிக்குப் பணம் வாங்க உதவுவதேயன்றி, அப்பாங்குகளின் அங்கத்தினர்களிடையே சிக்கனத்தை உண்டாக்கிப் பணம் சேர்க்கும் பழக்கத்தையும் உண்டாக்குகின்றன.

விவசாயிகட்கும் இக்கூட்டுறவு ஸ்தாபனங்கள் மிகவும் பயன் தருகின்றன. விவசாயத் தொழிலைச் செவ்வனே நடத்துவதற்கு அநுகூலமாகப் பலவகைப் பட்ட கூட்டுறவு நிலையங்கள் பல நாடுகளிலும் தோன்றி வளர்ந்தோங்கி இருக்கின்றன. மேலும் விவசாயம் சம்பந்தமான பால்பண்ணை நடத்தல் முதலிய காரியங்கட்கும் கூட்டுறவு முறைகள் மிகவும் உபகாரமாய் இருக்கின்றன.

மேலும், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் இக் கூட்டுறவு முறைகளைக் கையாண்டால், வாழ்க்கை எவ்வளவோ பயன் உள்ளதாகவும், இரம்மியமானதாகவும் இருக்கும்.

கூட்டுறவு இயக்கம் ஒரு சமூகத்திலோ அல்லது ஒரு நாட்டிலோ நன்ருக நடக்கிறதா? இல்லையா? என்பது அந்த அந்த மக்களின் தன்மையின்படி இருக்கும். உண்மையானவர்களும் தன்னலமற்றவர்களும் இவ்வியக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டால், இயக்கம் பயனுள்ளதாய்ப் பரிணமிக்கும்; இல்லையேல் வறியதாகவே காணப்படும்.

கூட்டுறவு இயக்கம் ஜாதி, மதம் முதலிய குறுகிய கட்டுப் பாடுகளுடன் தோன்றி வளருவதன்று. இவ்வியக்கம் ஜாதி, மதம் முதலிய தடைகளைக் கடந்து, சமூகம் முழுவதும் ஏன்—உலக முழுவதும்—பரவிப் பயன் தந்து நிற்பது. பல ஜாதி, பல சமயங்களைச் சேர்ந்தவர் இக்கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஒன்றுகூடிக் கலந்து மகிழ்ச்சி அடைகின்றனர். ஒரு குறித்த காரியத்துக்காக எல்லோரும் பாடுபடுகின்றனர். அதனுல்

ஐக்கிய பாவம் வளருகின்றது; பலவகைப் பயனில்லாத தளைகள் நீங்குகின்றன.

கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் பரோபகார சிந்தனை நாளடைவில் வளர்ந்து கொண்டே வருகிறது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உயரிய வாழ்க்கை இலட்சியம் அவர்கள் மனத்தில் அழுத்தமாகப் பதிகின்றது. அதனால், அவர்கள் வாழ்க்கை புனிதமாகிறது.

கூட்டுறவு ஸ்தாபனங்களிலே ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரே ஓட்டுதான் (vote) உண்டு. ஆதலால் சுயநலக் காரரான சிலர், அந்த ஸ்தாபனங்களில் ஆதிக்கம் பெற முடியாது; ஒவ்வோர் உறுப்பினரும் அந்த ஸ்தாபனங்களின் நிருவாகத்தில் பங்கெடுக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டாகிறது. அந்த ஸ்தாபனங்களின் ஆட்சியில் அநுபவம் பெற்றுத் தேறும் உறுப்பினர் பின் எவ்விதமான ஆட்சித் துறையிலும் தலைசிறந்து நிற்கும் சக்தியை அடைகின்றனர்.

கூட்டுறவு இயக்கமானது முதலில் மனிதனது துக்கத்திலும், ஏழ்மையிலும் உண்டானதாகும். கஷ்டத்தில் உழன்று வறுமையால் வாடியவர்கள்தாம் இவ்வியக்கத்திற்கு உயிர் நாடியாக நின்றவர்கள்; நிற்பவர்கள். அவர்கள் முயற்சி சமூகத்திலுள்ள பொருளாதார அசௌகரியங்களை நீக்கிக் கூட்டுறவு ஸ்தாபனங்களை நிலைநாட்ட ஊக்கத்தை அளிக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் கூட்டுறவு இயக்கம் தோன்றிய காலத்தையும், அதன் வளர்ச்சியையும் கவனித்துப் பார்த்தால், இவ்வுண்மை நன்கு விளங்கும்.

கூட்டுறவு இயக்கம் நன்றாக வலுவடைய வேண்டுமானால், சீக்கிரம் பரவவேண்டுமானால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் சுயநலம் அற்றவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் பிறருடைய நலத்தையும் தங்கள் நலமெனக் கருதுதல் வேண்டும். பரோபகார சிந்தை அவர்களுக்கு அமைய வேண்டும். அப்படிப்பட்ட நற்

குணசாலிகளிடையே கூட்டுறவு இயக்கம் மிகுந்த பலன் தருவதாகும்.

### அருஞ்சொற்பொருள்

குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் வழங்கும் சொல். பிணி - நோய், மிடி - வறுமை. லேவாதேவிக்காரர் - கொடுக்கல் வாங்கல் செய்பவர். பரிணமிக்கும் - விளங்கும். ஐக்கிய பாவம் - ஒற்றுமைக் கருத்து. உழன்று - வருந்தி.

### வினுக்கள்

1. இப்போதுள்ள பொருளாதார அமைப்பில் சமூகத்தில் காணப் படும் குறைபாடுகள் யாவை?
2. கூட்டுறவு ஸ்தாபனங்கள் வெள்ளிடைமலைபோல் காட்டுவன யாவை?
3. பொருளாதார உலகில் ஒவ்வொரு முறையிலும் கூட்டுறவுக் கொள்கைகளைப் புகுத்தலாம் என்பதை விளக்குக.
4. கூட்டுறவுப் பாங்குகளினுல் உண்டாகும் நன்மைகள் யாவை?
5. கூட்டுறவு இயக்கத்தினுல் ஐக்கிய பாவம் வளருவது எங்ஙனம்?
6. கூட்டுறவு இயக்கம் பரவவேண்டுமானுல் அதில் சம்பந்தப்பட்ட வர்கள் எவ்வாறிருத்தல் வேண்டும்?

---

TM
031(9)
N56

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
132521
சென்னை-600 008

# TAMIL MANI KOVAI

IV FORM—GENERAL

EDITOR
VIDWAN A. VADIVELAN,
*Senior Tamil Pandit,*
*Kalyanasundaram High School, Tanjore.*

V. SUBRAMANIAM & CO.,
EDUCATIONAL PUBLISHERS
DINDIGUL

*Copyright*] *[Price Re. 1*